
# ஞானசம்பந்தம்

மலர் 14]  மன்மத ஆண்டு ஆடித்திங்கள் 10—8—55  [இதழ் 9

## கும்பாபிடேக மலர்



தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான
**மாயூரம் ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி கோயில்**
இடித்தெடுத்துப் புதிதாகக் கட்டப்பெற்றது
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் விமான மேல்தளத்தைப் பார்த்தருளல்

ஆசிரியர்  வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்
துணை ஆசிரியர்  புலவர். சு. மாணிக்கவாசக முதலியார்

தருமபுர ஆதீனம்

## உட்பொருள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மன்றிலும் மயிலாடுதுறையிலும் | ... | i-vi |
| 2. | திருவருட்பயன் ஆராய்ச்சி | ... | 1 |
| 3. | தூதுவிட்ட தொண்டர் | ... | 10 |
| 4. | மூன்று உவமைகள் | ... | 13 |
| 5. | சிலம்பில் காவிரி | ... | 19 |
| 6. | வேத வேள்விகள் | ... | 23 |
| 7. | சேக்கிழார் கண்ட இசைத் தமிழ் (2) | ... | 27 |
| 8. | "வள்ளல் ஆய்" | ... | 32 |
| 9. | உலகம் வாழ்வது எதனால்? | ... | 36 |
| 10. | இன்சொல்லும் வன்சொல்லும் | ... | 40 |
| 11. | குமாரசம்பவம் | ... | 44 |
| 12. | மாசில் வீணை | ... | 47 |
| 13. | வாழ்வை அளிப்பது வணக்கமே | ... | 52 |
| 14. | செய்திகள் | ... | 55 |
| 15. | வருங்காலம் | ... | 68 |
| 16. | திருக்கேதார யாத்திரை (அநுபந்தம்) | ... | 41-48 |


படம் எடுத்தோர்:

மாயூரம், திரு. N. இராமகிருஷ்ணன்,
சிதம்பரம், கெம்பு ஸ்டுடியோ,
தருமபுரம், M. மீனாக்ஷிசுந்தரம்

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை

ஆடிச்சுவாதி அன்று சுந்தரர் திருநாள் தருமபுரம் ஸ்ரீ ஞான புரீசுவரர் ஆலயத்தில் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வழிபாட்டின் ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தார்கள். கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள். தேவாரபாடசாலை மாணவர்களால் திருமுறைப் பாராயணம் செய்து ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரை எழுந்தருளச்செய்து திருவிழாக் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இவ்விழாவைச் சிறப்புற நடத்தப் பல வசதிகளுக்கும் பேருபகாரம் புரிந்தருளினார்கள்.

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:




யாகசாலை

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் ஸ்ரீகாசிமடம் ஜூனியர்,
ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும்.

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:



யாகசாலை பந்தலில் காகிதத்தினுல் செய்திருக்கும்
சித்திரவேலைப்பாடு.

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:



பந்தல் அலங்காரம் காகிதவேலை

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:




கடம் புறப்பாடு

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:




கடம் புறப்பாடு

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:



பக்தர்கள் கூட்டம்.

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:



விமான கும்பாபிஷேகம்.

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:




ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் புஷ்பப்பல்லக்கு தரிசனம் செய்தல்.

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:



பக்தர்கள் கூட்டம்.

மாயூரம் ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில்:



இரவு புஷ்பப்பல்லக்கில் வீதியுலா

தருமபுர ஆதீன மடாலயத்தில்:



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை தரிசிக்கவந்த சென்னை உயர்நீதிமன்றத்து நீதிபதி,
உயர்திருவாளர், சோமசுந்தரம் பிள்ளை அவர்களும் தஞ்சை மாவட்ட நீதிபதி,
திரு. ஐயாசாமிசெட்டியார் அவர்களும்.

653

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 14 } மன்மதஹு ஆடிமீ 10—8—55 { இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## மன்றிலும் மயிலாடுதுறையிலும்

தில்லையில் உள்ள பொன்மன்று சிதம்பரம் - ஞானவெளி. விராட்புருடனது இதயகமலம். சச்சிதாநந்த சிற்சபை. இராப் பகலற்ற பரமரகசியமான அங்கு நான்கு மறைகளை நான்கு தூண்கள் நினைவூட்டுகின்றன. அவற்றின் தென்பால் ஆறு அங்கங்களையும் முக்கோணம் தோன்ற இரண்டு பக்கத்திலும் ஆறு தூண்கள் அமைந்து குறிக்கின்றன. அவற்றை அடுத்து, ஐம்பெரும் பூதங்களைக் குறிக்க ஐந்து கம்பங்கள் உள்ளன. அவற்றின் தென்பால் இருபத்தெட்டு ஆகமங்களைக் குறிக்கும் பகுதி ஏழு நிலையாயும் நான்கு கோணமும் ஆகித் திகழ்கின்றது. அவற்றிடையே உள்ள துவாரங்கள் தொண்ணூற்றாறும் முப்பத்தாறு தத்துவங்களையும் அறுபது தாத்துவிகங்களையும் குறிப்பன. அறுபத்துநான்கு கலைகளைப் பொதுவில் விளங்கும் பல கைகள் குறிக்கும். பலகைகள் இருநூற்றிருபத்துநான்கும்

அவ் வெண்கொண்ட புவனங்களைக் குறிக்கும். இருபத்தோராயிரத்தறுநூறு மூச்சுக்குறிப்பாக அத்துணை ஓடுகள் மேலே விளங்குகின்றன. எழுபத்தீராயிரம் நரம்புகள் என்னும்படி ஆணிகள் அமைந்துள்ளன. ஒவ்வோராணிக்கும் ஒவ்வொன்ருக ஐந்தெழுத்து நின்று ஓட்டில் ஒளிந்துள்ள உண்மையை உணர்தல்வேண்டும். ஐம்பத்தோரெழுத்தும் பொற்றகடுகளாய் அப் பொதுவிடை விளங்குகின்றன. நவசத்திகளும் நவ தூபிகளாகத் துலங்குகின்றனர்.

திருக்களிற்றுப்படியின் அடிமுதல் நமசிவாய என்ற முறையில் பஞ்சாக்கரத் திருப்படி அமைந்துள்ளது. பொன்மன்றில் பதிணெண்புராணக் குறிப்பாகப் பதினெட்டுத் தூண்கள் நிரந்து நிற்கின்றன. எண்பத்தொரு பதங்களையும் தாமரைத் தகட்டுருவம் இனிது சாற்றும்.

சிதாநந்த தாண்டவ சபைக்குத் தெற்கில் ஊர்த்துவதாண்டவம் நிகழும் மன்றம் உளது. கிழக்கில் உள்ளது தெய்வசபை. அது பேரம்பலம் எனவும் பெறும். வடக்கில் திரு (மூலஸ்தாநம்) மூலட்டானம் வயங்குகின்றது. பொன்மன்றின் நெடுவாயிலில் மலர்மகள் கேள்வன், தனிமுதற்பொருள் ஆடுகின்ற சேவடியை நாடி அறிய, அளவிலடங்காத காலம் எல்லாம் தேடி அறியாமையால், அறிவும் அவாவும் அடங்காது மீதூர, நடனசபையில் நாட்டத்தைச் செலுத்தி, மூவடி அளந்த சேவடி நீட்டி, முடிபடியில் தோய, பரவிய அன்பொடு பணிந்து கொண்டு, திருவடி நினைப்பினனுய்க் கிடந்திருக்கின்றனன். சிற்சபை வாயிலின் மேற்கில் புலிக்கால் முனிவர் திருக்கூத்தைக் கண்டுகொண்டுள்ளார். பாம்புக்கால் முனிவர் பணிந்துகொண்டே விளங்குகின்றுர். அயன், இந்திரன், வானவர் முதலிய யாவரும் வேத கீத நாத முழக்கமும் அரகரவொலியும் கரதாளமும் காலாட்டமும் புரிந்து உரை குழற, உடல் நடுங்க, கண் நீர் சொரிய இடைவிடாது கண்டுகொண்டு களிப்புக்கடலில் திளைப்புறுவர்.

அந்த ஞான மன்றத்தில், மக்கட் பிறப்பில், தக்க பக்குவ காலம் மிக்க உயிர்கட்கு, உள்ளம் உவந்து, மோகதாகம் வேகம் செய்ய வேள்கணை பாய்ந்த மெல்லியல், தனக்கு வாழ்வு நல்கும் உயிர்க் கேள்வனை நாடிவருதல்போல, இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்த காலையில், அறிவும்

அறியாமையும் கலந்து திரை என இருந்த திரோபவம் நீக்கிப், பரவெளியைக் காட்டி, உருவொளியாய்த் தோற்றி,

> "சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
> ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில்இறைக்கு
> அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனுர்
> தங்கும் மகரமது தான்."

என்னும் உண்மைவிளக்கத்தின்படி அமைந்த சூக்கும பஞ்சாக்கர நடனமும்,

> "ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
> நாடும் திருவடியி லேநகரம்—கூடும்
> மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
> பகருமுகம் வாமுடியப் பார்."

என்றவாறு நிகழும் தூலபஞ்சாக்கர நடனமும்,

> "ஓங்கார மேநல் திருவாசி உற்றுஅதனின்
> நீங்கா எழுத்தே நிறைசுடராம்—ஆங்காரம்
> அற்றுர் அறிவர்அணி அம்பலத்தான் ஆடல்இது
> பெற்றுர் பிறப்பற்றுர் பின்."

என்ற உண்மைப்படி, பிரணவமே பிரபை. அப்பிரணவத்தில் விளங்கும் அக்ஷரமே பூரண ஜோதி ரூப நடராஜ ப்ரபு. இதை 'நான்' என்னும் அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுத்து எறிந்து, சிவஞானத்தில் மகாவித்வ சிரோமணிகளாய்த் திகழ் கின்றவர்களே அறிய வல்லவர்கள். இத்திருக்கூத்தை அறிந் தார்க்கே பிறவிப் பெருந்துன்பம் முற்றத் தொலைந்தொழியும். பேரின்பம் விளையும்.

> "பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
> உரைஉணர்வுக் கெட்டா ஒருவன்—வரைமகள்தான்
> காணும் படியே கருணைஉருக் கொண்டுஆடல்
> பேணுமவர்க்கு உண்டோ பிறப்பு?"

வலக்கையில் வயங்கும் உடுக்கையில், மாயை விலகும்படி உதறி, இடக்கையில் இலங்கும் ஞானத் தீயால் வல்வினையைச் சுட்டு, ஊன்றிய திருவடியால் ஆணவம் அழிய அமுக்கி,

தூக்கிய திருவடியால் பக்குவான்மாக்களைத் தூக்கி எடுத்து, பேரின்பக் கடலுள் தொப்பெனக் குப்புறத் தள்ளி அழுத்தும் பரம நாடகம் - பரத நாடகம்.

குடமுழவு இரட்டும், வெண் சங்கநாதம் மேலெழும். அதனால், கடலொலி கரக்கும். மாமறை முழங்கும். அதனால் முகிலொலி திகிலுறும். பூமழை பொழிவர் தேவரும் முனிவரும். அத்தகைய நிலையில் பரமாநந்த நடனம் ஆடும் பொதுவின் அளவு அறியவல்லார் ஆர்?

அத் திருமன்றத்தைச் சூழ்ந்த திருச்சுற்றில் (ஆவரணத்தில்) மேற்கு வாயிலில், மூத்தநாயனார் ஒரு திருவிரலால் திருமுறையைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றார்.

சிற்றம்பலத்திற்கு வடபால் வாயுகோணத்தில், சிவகாமி அம்மையார் திருக்கோயிலும், அத்திருவருட்சந்நிதியில் தீர்த்தம் எனச் சிறந்துள்ள சிவகங்கையும், அதன் கிழக்கில் இராசசபையும், அண்டச்சுவர் எனக் கொண்ட திருமதிலும், திருநாவுக்கரசர், திருநாவலூரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் ஆகிய மேலவர் நால்வரும் முறையே போந்தருளநின்ற மேற்கு வாயில் முதலிய நான்கும், பொன்னெடும் பொருப்பு எனப் பொலியும் சிறப்புடைய கோபுரங்களும், மேற்கு வாயிலில், அமரரைச் சிறைமீட்ட குமரநாயகனும் விளங்கும் உண்மை பலரும் அறிந்ததே.

அத்தகு பெருமை மிக்க தில்லைமாநகர் எல்லையைக் கண்டாலும், இமை நொடி அளவு நினைத்தாலும், சிதம்பரம் எனச் சொன்னாலும், கேட்டாலும் பிறவித் துன்பம் அறும். பேரின்ப வாழ்வு உறும். அதுவே, கருவடிவறுத்துத் திருவடித் தாமரை நீழலில் வாழும் நிரதிசயாநந்த வாழ்வு.

"கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே."

"பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே."

அந்த வாழ்வைப் பெற்று உயிர்கள் உய்யவேண்டி, அங்கு (7—7—55 இல்) நடந்த மகா கும்பாபிடேகம் இவ்விருபதாவது நூற்றுண்டின் வரலாற்றில் தலை சிறந்து விளங்கும் மாண்புடையது. அதுவே எந்நாட்டவர்க்கும் உரிய இறைவனது உடைமையாகத் தென்னுடு திகழும் வாய்மையை மெய்மையாக்கிற்று.

அக் கும்பாபிடேகத்தை அடுத்துத், திருமயிலாடுதுறையில் உள்ளதும் தருமபுர ஆதீனத்திற்கு உரியதும் ஆகிய ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி திருக்கோயிலுக்கும் மகா கும்பாபிடேகம் நிகழ்ந்தது. ஆங்குப்போந்த அன்பர் திரளுள் ஒரு பகுதி ஈங்கும் எய்திற்று. மயிலாடுதுறைக்கு என்றும் இல்லாத எழிலும் ஒயிலும் உண்டாயின. அன்று கைலாச பரம்பரையின் உண்மைச் சிறப்பைக் கையால் தொட்டுக் கண்ணுற் கண்டு, நெஞ்சு நிறைந்த களிப்பால் ஒரு புதிய வாழ்வு எல்லோர்க்கும் வாய்த்தது.

“பூவிரி கதுப்பின்மட மங்கையர கங்தொறு நடந்துபலிதேர்
பாவிரி யிசைக்குரிய பாடல்பயி லும்பரமர் பழமையெனலாம்
காவிரி நுரைத்திரு கரைக்குமணி சிந்தவரி வண்டுகவர
மாவிரி மதுக்கிழிய மந்திகுதி கொள்ளுமயி லாடுதுறையே.”

தெருவெல்லாம் - ஆற்றின் தெற்கெல்லாம் - வீட்டுக்கு மேலிடமெல்லாம் - கோயிலின் நாற்புறத்து வானகமெல்லாம் மண்ணவர்களும் விண்ணவர்களும் ஆகி, விசுவநாத தரிசனம் என்பதை மெய்ப்பித்துப் பெரும்பித்து உற்று, உலகைப் பற்றைப் பிய்த்து வீசியெறிந்து, சிவபக்தி ரூபமாய் விளங்கினுர்கள். சொல்லியோ எழுதியோ உணர்த்தல் எவராலும்இயலாது. நேரில் கண்டவர்க்கே அதன் சிறப்பு நன்கு விளங்கும். நாத்திகரெல்லாரும் அன்று அங்கு வந்திருப்பரேல், ஆத்திகரும் அவர்க்குத் தோற்றுப்போகலாம். பக்தியால் பரவசம் அடையாதார் பாமரருள்ளும் இல்லை. பண்டிதருள்ளும் இல்லை.

இத் தகு அருள்வாய்ப்புக்கு மக்களை ஆட்கொண்டருளிய பெருங்கருணைத் திறம் முறையே தருமையாதீனத்து இருபத்து மூன்று, இருபத்துநான்காவது குருமகாசந்நிதானங்களின் திருவுள்ளங்களில் கருக்கொண்டும் வளர்ந்தும் வந்து, இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக

658



ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருமனத்தில் பூரணம் அடைந்து, பெரிய கோயில்கள் திகழவும் அரியதொரு சிறப்பில் மகா கும்பாபிடேகம் நிகழவும் செய்தது.

ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி, கங்கையொடு காவிரிக்கு வந்த நாளை நாம் கண்டோம் அல்லோம். இதைக் கண்டு சிவாநந்தக் கடலுள் முழுகித் திளைத்த நாம், அதை ஒருவாறு ஊகித்து உணரும் வகையில் இம் மகா கும்பாபிடேகம் அளவிற்கு அடங்காத சிறப்பொடு நிகழ்ந்தது.

இது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது திருவுள்ளத்தின் பெருங்கருணையால் ஆனதால், உலகம் அவர்களை வாயார வாழ்த்தி மனமார மகிழ்கின்றது.

மண்டலாபிடேகம் வேறு எங்கும் இல்லாத சிறப்புடன் நாள்தோறும் நடந்துவருகின்றது. அன்பர்கள் அருள் வேட்கையும் முயற்சியும் அளவுபடாதன.

“ அந்தண்மதி செஞ்சடைய ரங்கணெழில் கொன்றையொ டணிந்தழகராம்
எந்தமடி கட்கினிய தானமது வேண்டிலெழி லார்பதியதாம்
கந்தமலி சந்தினொடு காரகிலும் வாரிவரு காவிரியுளால்
வந்ததிரை யுந்தியெதிர் மந்திமலர் சிந்துமயி லாடுதுறையே. ”

வாழ்க குருமணி. வாழ்க சிவநேசம். வாழ்க விசுவநாதம்.

துணையாசிரியர்

---

## கட்டுரை எழுதுபவர்க்கு

“ ஞானசம்பந்தம் ” திங்கள் வெளியீட்டிற்குச் சமயச்சார்புள்ள கட்டுரைகள் எழுதுவோர் நல்ல தாளில் இடையீடு தந்து ஒரு பக்கத்திலேயே எழுதுதல் வேண்டும். கட்டுரை நான்கு பக்கங்களில் முடிவதாக இருத்தல் நல்லது. தொடர் கட்டுரை எழுதுவோர் இரண்டு இதழில் முடியும் அளவில் எழுதலாம். வெளியிடப் பெறுதவற்றை மீண்டும் பெற விரும்புவோர் போதிய அஞ்சல் வில்லைகள் அனுப்புக.

ஆசிரியர்,
“ ஞானசம்பந்தம் ”
தருமபுரம், மாயூரம் போஸ்ட்.

659



# திருவருட்பயன் ஆராய்ச்சி

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம்,

திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

[முன் தொடர்ச்சி]

விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்
கடனிலிருள் போவதெவன் கண். 47

இத்திருக்குறள் ‘ விடனகுலம் ’ என்று னகரம் உற்றதாயிருத்தல் வேண்டும். நகரவடிவம் பழுதற்றதாயினும் ஆசிரியர் திருவுள்ளக்கிடக்கையை நோக்கினல் நகரற்பாலதே.

“ புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலனடக்கு மாமை தக ”

எனப் பின் வருகின்றதன் எதுகை நலத்தை உணர்வார் எம் கருத்தை இனிதேற்று உவப்பர். அஃதன்றியும் இதில் ‘ எவன் கண் ’ என்பது முதன்முதல் எவன்கண் தோன்றிய குற்றமோ? “ இவனுடைய திருநோக்கு ” என்று பொருந்திய உரை இருந்தும், ‘ இவன் ’ என்றதன் சுட்டு, வினவாய்ப் பிழைத்ததே!

அகலத் தருமருளை யாக்கும்வினை நீக்குஞ்
சகலர்க்கு வந்தருளுந் தான். 48

இதனுரைகளை நோக்கி உண்மையுணர்தல் நன்று. ஆக்கும் நீக்கும் அருளும் என்றுள்ளன மூன்றனுள் நீக்கும் என்னும் இடையதை எச்சமாகக்கொண்டு “கன்மமலச் சேதனம் பண்ணுதற்குப் பக்குவராகிய சகலர்க்கும் ” என்றுரைத்தருளினர் ஸ்ரீ நிரம்பவழகிய தேசிகர். அவர் சகலரல்லாத இருவரையும் ‘ அருளையாக்கும் ’ என்றதற்கும் சகலரை ‘ வந்தருளும் ’ என்றதற்கும் கொண்டார்.

"ஒருமலத் தாருக் குளத்தறி வாகி யுடலொழிப்பன்
இருமலத் தாருக் கிடபத்தின் மீதின் எழுந்தருளிக்
கருமலந் தாக்கா தழிப்பன் உடலைக் கருவணைந்த
திரிமலத் தாருக்குத் தீர்ப்பன் உருக்கொண்ட தேசிகனே."

என்னும் உதாரணக் கலித்துறையில், அம்மூன்றனையும், முற்ருகக்கொண்டு மூவர்க்கும் பகிர்ந்து உரைத்தது காண்க.

ஆங்கில மொழிபெயர்ப்பில் இவ்விரண்டும் காணப்படுகின்றன. பின்னது அடிக் குறிப்பில் பதிப்பாளர் பெயரால் குறிக்கப்பட்டது. ஆங்கிலப் (B. A.) பட்டதாரியாகிய மற்ருெருவரும் தம் உரையை மூவர்க்கும் மூன்று முற்ருகக்கொண்டு அமைத்தார். புகழுடம்பெய்திய கொ. சண்கசுந்தர முதலியாரால் வெளியிடப்பெற்ற பழைய பதவுரையும் அவ்வாறு அமைந்ததேயாகும்.

திருநெல்வேலிப்பேட்டை, திரு. ஆ. ஈச்சுரமூர்த்திப்பிள்ளை அவர்கள் எழுதிய உரையுள் 'நீக்கும்' என்பதைச் 'சகலர்'க்கு எச்சமாகக்கொண்டும் 'அருளும்' என்பதைத் 'தான்' என்பதற்கு எச்சமாகக்கொண்டும் பொருள் வரையப்பட்டுளது.

திருமெய்ஞ்ஞானப் பயனில்,

"ஒன்றெனதுள் நின்றே யுருவிளைத்த தொன்றுருவந்
தன்றெனுரு வீட்டுவித் தன்று"

என்று காணப்படுகிறது. ஆசிரியர் ஸ்ரீமத் உமாபதிசிவாசாரிய சுவாமிகள் திருவுள்ளக்கிடையை உய்த்துணர்ந்து எழுதிய ஸ்ரீ நிரம்பவழகிய தேசிகருரை ஈண்டும் நிரம்ப அழகியதாகவே விளங்குகின்றது.

சகலர் எனப் பொதுப்படக் கூறின், "எல்லார்க்கும் வந்து இப்பொழுது அருள்வானே காட்டுக" என்று இஞ்ஞான்று பெருகிவரும் கூட்டத்தாரான உலகாயதர் கடாவிக் களிப்பர். அதற்கு விடை இறுக்கமாட்டாமல் விழிக்க நேரும் நமக்கு. மெய்கண்ட வழியினர்க்கோ அது நேராது. சரியை, கிரியை, யோகங்களாகிய 'தவஞ்செய்தார்' என்று முன்னர் உணர்த்திய

661

"அச்சகலர்க்கு", முன் " தமது முதல்தானே குருவுமாயுணர்த்தும் " என்றவாறு " அக்குருவாய் " வந்து, பின்னுணர்த்தும். அதனை விளக்குதற்கே சகலர்க்கென்றிலர். ' வினைநீக்குஞ் சகலர்க்கு ' என்று சகலருட் பக்குவமுடையாரையே கிளந்தோதியருளினர். இதனால் அபக்குவராகிய சகலர் ஈண்டு ஒழிக்கப் படுவாராயினர். சகலர்க்குவந்து அருள்வான் என்றதுகொண்டு, ஏனையிருவர்க்கும் வருதலின்றி உள்நின்று அருள்வான் என்று தெள்ளிதின் உணரலாம். அவ்வுணர்ச்சிக்குப் பொருந்திய உரையே நிரம்ப அழகியதாகும். அதனால்தான் அவர் " அகத் தருமருளையாக்கும் " என்பதில் இருவரையும் அடக்கி, (ஆதாரமாக வந்தருள வேண்டாது) நிராதாரமாய் உள் நின்று அருளை யாக்குவான் என்று உணர்த்தினர். அவ்வுரையாசிரியரது நுண்ணுணர்வைக், " குவ்வுருபு விகாரத்தால் தொக்கது " என்ற ஒட்பத்தால் அறியலாம். அகலத்தருளருளையாக்கும் (அகலத்தர் உள் அருளை) என்றிருந்ததோ என்றும் ஊகிக்கலாம்.

" ஞானபாதங் கூடுமவர் தமக்குணர்வாய் நின்ற ஞானக் கூத்தன் ஒரு மூர்த்திகொடு குறுகி...... .....மலம் அறுக்கும் " என்ற சிவப்பிரகாசத்தை இங்கு ஒட்டியுணர்தல் நன்று. இத் திருக்குறள், உண்ணின்று மலம் அறுத்தருளப்பெறத் தக்க நன்னெறி விஞ்ஞானகலரொடு, தேவாய் மலகன்மம் தீர்த்தருளப் பெறத்தக்க பிரளயாகலரைச் சேர்த்து " அகலத் தருமருளை யாக்கும் " எனவும், பூவலயந்தன்னின்று நீங்காச் சகலர்க்கு அவர்போல வந்து முன்நின்று மும்மலம் தீர்த்து ஆட்கொள்கையை " வினைநீக்குஞ் சகலர்க்கு வந்தருளுந்தான் " (" குறியாக நீங்காதகோ ") எனவும் உணர்த்தியதாகக் கொண்ட தேசிகர் உரையே மாசிகந்ததாகும்.

ஞான மிவனொழிய நண்ணியிடு நற்கலனல்
பானு வொழியப் படின். 50

இத் திருவெண்பாவின் பொருளையறிந்தும், ' நற்கல் நற்பானு ' என்று ஒருவர் தம்பதிப்பில் வெளியிட்டமை நோக்குதற்குரியது. (வண்ணக்களஞ்சியம் முனிவர் மெய்கண்ட சாத்திரப் பதிப்பு பக்கம் 706.) நல்கல் அனல் எனப் பிரித்து, மாசிலாச் சூரிய காந்தக் கல்லினிடத்து நெருப்பு என்று பொருள் கூறியதை அப் பதிப்பிலுள்ள உரை உணர்த்துவதறிக. இதற்குரிய உதாரணக்

கலித்துறையை ஈண்டு நோக்குதல் வேண்டும். கொன்றைமா நகரம் சண்முகசுந்தர முதலியார் அவர்கள் (விஷு வருஷம் ஆனிமாதப்) பதிப்பே அப்பிழைக்குத் துணையாயிற்று.

> தித்திக்கும் பாருனுங் கைக்குந் திருந்திடுநாப்
> பித்தத்திற் றூன்றவிர்ந்த பின். 62

என்பது. பல பதிப்புக்களிலும் இவ்வாறே உளது. சுதேச புத்தக சபையாரால் வெளியிடப்பட்டதில், "பால்காணும்" என்று உள்ளது. இதற்கு ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகர் அருளிய உரை யாவது:-

"என்பது குற்றந் தீர்ந்த நாவானது பித்த நோயினின்றும் தான் நீங்கின பின்னர் முன் கைத்தபாலும் தித்திக்கும். அதனைத் தானுங் கண்டறியும் என்றவாறு" இவ்வுரைக்கு மேலும், மலவிருள் தீர்ந்த பின்னர் முன்னந் திரோபவித்து நின்ற மருளும் அருள்வடிவாகி வெளிப்படும். அதனை உயிர்களும் காணும் என்பது பொருள். மாசுதீரின் விளங்கித் தோன்றும் தன்மை யினையுடையது உயிர் என்பதற்கு உவமித்ததனைத் "திருந்திடும் நா" என்று அருளிச்செய்தார். இதுவும் ஒட்டென்னும் அலங் காரம் என விரித்தும் உரைத்தருளினுர். முடிவில், "இதனுல் அருள் வெளிப்படும் காலமும் உயிர் அதனைத் திருந்திக் காணும் காலமும் ஒன்றென்பதூஉம் கூறப்பட்டன" என்று இத் திருவருட்பயன் நுதலியதையும் உணர்த்தினுர்.

சொற்பொருள், விரித்துரை, கருத்துரை மூன்றிடத்தும் கண்டறியும், காணும், காணுங்காலம் என்று உரையாசிரியர் ஆண்டிருத்தலாலும், முற்குறித்த சுதேச புத்தக சபையார் பதிப்பினுள் இப்பாடம் உண்மையாலும் 'தானும்' என்ற பாடம் 'காணும்' என்றே இருத்தற்பாலது என்பது தெளிவாகும். ஆயினும், அவ்வுரையாசிரியர் 'கைத்தபால்' என்று பெயரெச் சத் தொடராகக் கொண்டமையால், மூலத்தில், கைக்கும் பால் என்று இருந்ததாதல் வேண்டும் எனத் தெரிகின்றது. ஆதலால்,

> தித்திக்குங் கைக்கும்பால் காணுந் திருந்திடுநாப்
> பித்தத்திற் றூன்றவிர்ந்த பின்.

என்பதே பொருந்துமென்க.

இதற்கு உள்ள உரை வேறுபாடுகள் எல்லாம் இவ்வுண்மையை உணராமையால் ஆயின என்பது, அவற்றைநோக்கின் விளங்கும்.

காண்பா னொளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட
வீண்பாவ மென்நாள் விழும் 63

இதில், முடிவிலுள்ள இருசீரும் ஈண்டுக் குறித்தவாறே பல பதிப்புக்களிற் காணப்படுகின்றன. எந்நாள் விடும் என்றும் சில பதிப்புக்களில் உளது. நம் சமாசப் பதிப்பில் ‘ எந்தச் செனனத்திலே நீங்கும் ’ என்றிருத்தல் இங்கு நோக்கத்தக்கது. எந்நாள் விழும் என்னும் பாடத்தை வண்ணக்களஞ்சியம் முனிவர் பதிப்பிற் காட்டியது அதன்கீழுள்ள உரைக்குப் பொருந்தாமை காண்க. “ வீண்பாவம் என்னுய்விடும் ” என்னும் பாடத்திற்கே ‘வறிதே வரும் பாவம் என்ன பயனைச் செய்ததாய் வந்து முற்றும்’ என்னும் நிரம்பவழகியர் உரை எழுதப்பட்டமை அறிக.

ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல். 64

என்பதில், ‘ தெளியார் ’ என்றிருத்தல் பொருந்தாது. ‘ பலவாய பொருள்கள் தம் பன்மை தோன்ருது, ஒரு படித்தாயிருத்தல் ஒளியின் கண்ணும் இருளின் கண்ணுமொக்கும் ’ என்று “ ஒளியும் இருளும் ஒருமைத்து ” என்றதற்கு உரைத்தருளி, ‘ தெளிந்து நிற்றலும் மருண்டு நிற்றலுமாய செயல்கள் அவ்விடத்துப் பேதம் ’ என்று “தெளிவு தெளியாச் செயல் பன்மை” என்றதற்கு உரைத்தருளியதை நோக்குக. “ தெளிவு = தெளிந்து நிற்றல் (+உம்) தெளியாச் செயல் = மருண்டு நிற்றல் (+உம் ஆய) செயல்(கள்), பன்மை = (அவ்விடத்துப்) பேதம்.” அதன் கருத்துரையும் ஈண்டு உணரற்பாற்று. எல்லாப் பதிப்புள்ளும் இது தெளியாரென்றேயிருப்பினும், அது நிரம்பவழகிய உரைக்கும் ஆசிரியர் திருவுள்ளத்துக்கும் ஏற்றதன்று.

கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க் கல்லா
லெடுத்துச் சுமப்பானை யின்று. 65

என்பது, இவ்வாறே பல பதிப்புக்களிலும் தோற்றுகின்றது. சில பதிப்பினுள் ‘ தகுமே ’ என்றுளது. அது தகுமோ தகாதோ

அதைப்பற்றிய நோக்கம் வேண்டாததே. 'கேண்மையார்க் கல்லால்' என்பதில், 'அல்லால்' என்றுள்ளது தகுமோ தகாதோ என்பதே நம் நோக்கத்திற்கு உரியது. நிரம்பவழகிய உரைக்குமேல், இவ்வாறு பாடமிருத்தல் வியப்பையாக்குகின் றது. வேறு சிலர் பதிப்புக்களில், இப் பொருந்தாப் பாடத்தை மேலும் பொருந்திய பாடத்தைக் கீழும் காட்டியது கெதாநு கெதிக நியாயம் பற்றியதாதலின், அவற்றைப் பதித்தவர் ஆக்கிய வழுவாகாது. "(நற்கேண்மையார்க்கு =) நல்ல கேளிரையுடையார்க்குத் தம் மேல் பார் (எல்லாம் =) முழுதும் எடுத்துச் (சுமத்தச்) சுமக்கும் ஒருவனே(க் கிடைக்கத்தகும் =). இப்பொழுதே கிட்டுதல் கூடும்" என்னும் உரையை நோக்கின் "எல்லாம்" என்ற பாடமே ஏற்றதும் இனியதுமாதல் விளங் கும். அதன் கருத்துரையாலும் "எல்லாம்" என்றதே பாடம் எனல் வெளிப்படுதல் காண்க. கிடைக்கத் தகுமே என்றதே கிடைக்கத்தக்கது.

> தனக்குநிழ லின்று மொளிகவருந் தம்ப
> மெனக்கவர நில்லா திருள். 67

என்பதில், 'இன்றும்' என்றது "இன்று" என்றேயிருத்தற் பாலது. வாக்கிய லட்சணம் அறிந்தாரும் அதற்கு நிரம்பவழகிய உரை அமைந்தவாற்றை நோக்கினரும் இதை எளிதின் ஏற்பர். "தனக்கென வேறேரொளி தோன்றாத வண்ணம்" என்ற உரையை நோக்குக. இன்றுக் கவருந் தம்பம் என்றியைவதை அறிக.

> உற்கைதரும் பொற்கை யுடையவர்போ லுண்மைப்பி
> னிற்க வருளார் நிலே. 68

என்பதில், 'நிற்க' எனல் பிழைத்துளது, பல பதிப்புள்ளும். சுதேச புத்தக சபையார் பதிப்பில், "நிற்கை" என்றுளது. நம் பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ அருணந்திதேவ நாயனரும் ஸ்ரீ உமாபதிதேவ நாயனரும் அருளிய திருப்பாக்களுள் யாப் பிற்குரிய எல்லாத் தொடைகளும் இயல்பிலமைந்து இருத்தலே அறிவார் பலரும், "நிற்கை" என நிற்கையே வேண்டுவர். "நிற்றலே அருளோடு கூடி நிற்கும் நிலேயாவது" என்னும் நிரம்பவழகிய உரையை உணர்க. ஈண்டுப் பிறருரைகளேயும் நோக்குதல் நன்று.

ஐம்புலனுற் ருங்கண்ட தென்ரு லதுவொழிய
வைம்புலனுர் தாமா ரதற்கு. 69

என்பதிலுள்ள ‘ என்ருல் ’ என்னும் பாடம் பல பதிப்பிலுளது. ‘ கண்டகன்ருல் ’ என்னும் பாடம் சில பதிப்பிலுளது. அவற்றுட் சில ‘ அன்ருல் என்றதற்கு உரைகொண்டு, என்ருல் என்பதைப் பாடமாகக் காட்டுகின்றன.

நிரம்பவழகிய உரையை நோக்கினுலும் ஆசிரியர் திருவுள்ளக்கிடையை உணர்ந்தாலும் “ அன்ருல் ” என்ற பாடமே பொருந்துகின்றது. “ அல்லவாயின் ” என்று பொருள்கூறியது அறிக. ‘ கண்டகன்ருல் ’ எனப் பாடத்தை மேற்காட்டும் பழம் பதிப்பு ‘ அறிகிறதல்லாமல் ’ என்று உரையைக் கீழ்க் காட்டுதலால், தகரமெய்க்குக் ககரமெய்யை அச்சுப்பேய் கொணர்ந்தது என்னும் உண்மை வெளியாகும்.

“ அதுவொழியவ் வைம்புலனுர் ” என்னும் பாடமும் இருத்தல் வேண்டும் எனல், உரையை உற்றுணரின், தெற்றெனப் புலப்படும்.

என்ருல் என்னும் பாடம் பொருந்துமோ என்று அறிஞர் ஆய்க.

இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவ
மின்பகன மாதலினு லில். 73

என்பதில், ‘ அவற்கு ’ என்னும் பாடத்திற்கே “ அவ்விறைவன் தனக்கு ” என நிரம்பவழகிய உரை எழுதியிருத்தலாலும் முத்தி நிச்சய பாடியத்துள் ‘ அவனுருவம் ’ எனக் காண்டலாலும் ‘ அவர்க்கு ’ என்ற பாடம் “ அவற்கு ” என ஒருமையாயிருத்தற் பாலது எனல் விளங்கும்.

ஒன்ருலு மொன்ரு திரண்டாலு மோசையெழா
தென்ருலு மோரிரண்டு மில். 75

என்பதில், பின்னடி “ என்ருல்ஒன் றன்றிரண்டுமில் ” என்று சில பதிப்புக்களுட் காணப்படுகின்றது. ‘ ஒன்றிரண்டுமில் ’ என்ற பாடமும் உண்டு. உரை பலவற்றை நோக்கினும்

ஆசிரியர் திருவுள்ளக்கிடையை உணரினும் "என்றால் ஒன்றன்று இரண்டுமில்" என்ற பாடமே ஏற்றதென்க.

அத்துவிதம் உணர்த்துவதாதலின், ஏனைய பாடங்கள் பொருந்தாவாம்.

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றுஞ் செய்யாது நில். 77

என்பதில், 'அளவுமே' என்ற பாடத்தைக் கொண்டுள்ளார் சிற்சிலர். "அளவும் இனி" என்ற பாடமே கொண்டுள்ளார் பற்பலர். அளவுமேல் என்றதை ஈற்றுமெய் நழுவக்கொண்டார் எனவும் ஊகிக்க இடனுண்டு. உரையில் 'மேல்' என்றிருத்தலின், அளவுமேல் எனக் கருதிக்கொண்டிருக்கலாம். நிரம்ப வழகிய உரை விசேடத்தில், "இனி என்றதனான் முன்னர்ச் செய்யவேண்டுவன அனைத்தும் செய்து முற்றியதென்பதும் பின்னிலைக்குச் செயலின்மையே வேண்டுவதென்பதும் கண்டு கொள்க" என்று எழுதியிருத்தலால், "அளவுமினி" என்ற பாடமே தொன்மையது எனல் விளங்கும்.

இன்பி லினிதென்ற லின்றுண்டே லின்றுண்டா
மன்பு நிலையே யது. 80

என்பதில், 'அன்பு' என்றே பல பதிப்புள் உளது. "அன்பினது நிலையே" என்று (ஆறன்றுருகையாகக் கொண்டு விரித்து) உரைத்தமையை நோக்கி, 'அன்பினிலையே' எனக் கோடலே பொருந்தும். எதுகைத்தொடை பற்றியும் அப் பொருத்தத்தை உணரலாம்.

அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூ றெரியப் புகும். 81

இதிற்புகுந்த புகுமென்பது தெரியப்புகின் விரியப்போகும். சமாசப் பதிப்பில் இதன் உரையை நோக்குதல் நன்று. "சற்று வல்லோர் ஆயப்புகுவாராயின்" என்ற நிரம்பவழகிய உரையை நோக்கின், "தெரியப்புகின்" என்ற பாடமே அவராற் கொள்ளப்பெற்றமை தெளிவாகும். செய்யுட்பொருள் அமைதியை

667

அறிவார்க்குப் புகும் என்னும் பாடம் பொருந்தாமையும் புலப்படும்.

அவனையகன் றெங்கின்று மாங்கவனு யெங்கு
மிவனையொழிந் துண்டாத லில். 96

என்பதிலுள்ள 'அவனுய்' என்ற பாடம் பல பதிப்புக்களுள் இல்லை. 'அவனும்' என்ற பாடமே உளது. "அவனும்" "இவனை" என்றியைத்து, "இறைவனுதலடைந்த இம்முத் தான்மாவை" என்று எழுதியுள்ள நிரம்பவழகிய உரையை ஈண்டுணர்ந்தால், 'அவனுய்' என்ற பாடம் பிற்கால் வந்த பிழையாதல் விளங்கும். வினுவெண்பா (12) உரையின் மேற்கோளும் இவ்வாறுளது.

ஆறுயாண்டுகட்குமுன் எழுதி வெளியிட்ட இச் சித்தாந்தக் கட்டுரை இந்தப் பகுதியொடு முற்றிற்று. இனி, "திருவருட் பயன் விருத்தியுரை" (புதியது) வெளியிடப்பெறும்.

---

## மதிப்புரை

### சுடர்

இது தில்லைத் தமிழ்ச்சங்கத்தின் வெளியீடு. மன்மதஞ சித்திரை மாதத்தினது. 150 பக்கங்கள் அடங்கியது. கண்ணையும் கருத்தையும் கவர்வது. படிப்பவர்க்கு நல்ல உணர்ச்சிகளை விளைப்பது. பொட்டலிலே ஒரு பசும்பாடல் என்பதால் மெய்யன்பர் டி. கே. சி. நினைப்புண்டாகும். கட்டுரையாளர்க்கு நினைப்பை எழுத்தால் காட்டுவதில் உள்ள ஜயத்தை அறியலாம். முற்றத்துறந்த முனிவர் அருளுபதேசப் பெருமை நன்கு விளங்கும். வழிபாட்டின் அருமையும் எளிமையும் புலனுகும். "ஏடுதேடிய யாத்திரை" முதலிய மற்றைய கட்டுரைகளின் சிறப்பும் கற்பவர்க்கு நன்கு விளங்கும்.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

# தூதுவிட்ட தொண்டர்

திரு. மதுரைச்சிவம் அவர்கள்

பிறைசூடும் பெம்மானின் பெருமைகளையெல்லாம் பாடிப் பாடிப் பரவசமடைந்து பேரின்பப் பெருவாழ்வுபெற்றபத்தர்கள் பலர். அவருள் நற்றமிழ்வல்ல நாவுக்கரசரும் ஒருவராவர்.

> "பாவுற்றலர் செந்தமி ழின்சொல்வளப்
> பதிகத்தொடை பாடிய பான்மையினால்
> நாவுக்கர சென்றுல கேழினுநின்
> னன்னாம நயப்புற நண்ணுக"

என்று யாவர்க்கும் வியப்புண்டாம்படி இறைவனே கூறும் நிலையில் பெருமைபெற்ற அடியார்க்கும் அடியார் அவர்.

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைத் தலைவராகவும் தம்மைத் தலைவியாகவும் கருதிப்பாடுதல் அடியார்கட்கியல்பு அம்முறையில் நம் நாவுக்கரையரும் இறைவனைத் தலைவனாகத் தம்மைத் தலைவியாக எண்ணி உளமுருகிப் பாடுகின்றார்!

திருப்பழனத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் தமக்குக் காட்சியளித்துப் பலநாட்கள் ஆகிவிட்டன. அவன் நினைவால் பெரிதும் வாட்டமுற்றார். 'அரசர்' சொல்லொணாத் துயர்க்கடலில் ஆழ்ந்தார். தம்நிலையைப் பிறரிடஞ் சொல்லுதற்கோ தக்க துணைவர் யாருமிலர்; உடல்மெலிந்தார்; உள்ளஞ் சோர்ந்தார். தமக்கினிய தலைவன் வாரானோ வந்து காட்சி தாரானோ என்று எண்ணியது அவரின் கனிந்த உள்ளம்! துயர நிலையைத் தூதுபோக்கியாகிலும் அமைதி பெறலாமென் றெண்ணியது அவர் நெஞ்சம்!

பசுஞ்சோலையில்புகுந்தார்; ஆண்டுச்சிறிது இளைப்பாறினார். அப்போது ஆங்கிருந்த குயில்கள் தமது அமிழ்தினுமினிய குரலால் கூவுவது அவர் செவிகளில் விழுந்தது. இன்பத்தேன் வந்துபாய்வது போன்றதோர் உணர்ச்சி உண்டாயிற்று "ஆம்!

669

என்னுடைய நாயகனின் பெருமைகளையன்றோ அவைகள் பேசுகின்றன" என்று எண்ணியது அவர் உள்ளம்; ஈசனூர்பால் வைத்த காதன்மிகுதியே அவரை அவ்வாறு எண்ணச்செய்தது! "ஏன் அவைகளையே அவனுக்குத்தூதாக விடுத்தல்கூடாது?" என்ற வினு அவர் உள்ளத்தே எழுந்தது "ஆம்! நமக்குத் துணை அவைகளே!" என்ற விடையும் உடன்பிறந்தது; குயில்களையே ஈசனூர்பால் தூதுவிடக் கருதினுர் நாவுக்கரசர்.

குயிற்கூட்டத்தை அன்புடன் அழைத்தார். குயில்கள் இயல்பாகக் கூவுதலைத் தமது தலைவனைப் பற்றித்தான் அவை பாடிக்கொண்டிருக்கின்றன என்ற கற்பனையால் குயில்களை விதந்து பேசலானுர்.

"கீதமினிய குயிலே!" என்று மாண்புறு மணிவாசகனுர் அருளினுரல்லவா! அவர் இட்ட சீரிய கட்டளைக்கிணங்கப் பலகாலும் சிவன்சீர்ச் சொற்களைக் கீதமாகச்சொல்லிப் பயிற்சி பெற்ற குயில்களின் வழிவழி வந்த செல்வமன்றோ நீங்கள் என்று மெதுவாக அவைகளைப் புகழ்ந்து பேசலானுர். அவைகளும் அவர்பேச்சினைச் செவிமடுப்பது போன்று, தமது கூவுந்தொழிலை நிறுத்தி இவரையேநோக்கியவண்ணமிருந்தன; நாவுக்கரசருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை! மேலும் பேசத்தொடங்கினுர்.

"உங்கள்பால் யான் ஒன்று இரந்துசொல்லுவன் அதனை அன்புகூர்ந்து என்தலைவனிடத்தே சென்று எடுத்துக் கூறினுல் பெரிதும் நன்றியறிதலுடையவனுவேன்! திருப்பழனம் என்னும் திருப்பதியை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். வற்ருத காவிரி யாற்றின் வடகரையில் ஐம்பதாவது தலமாக இலங்குகின்றது. பல கோடுகளையுடைய வண்டுகள் வரிசையாக இசைபாடுதற்கிடமான அவ்வூரிலேதான் என்தலைவன் வீற்றிருக்கின்ருன்; அவனை அறியாதார் யாருமிலர். 'பண்மிழற்றும் பழனத்தான்; பாட்டோவாப் பழனத்தான்; பலர்பாடும் பழனத்தான் பண்டரங்க வேடத்தான்! மதியாதார் வேள்விதனை மதித்திட்ட மதி கங்கை விதியாளன்; மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும் விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேருய் நின்றவன்; பண்பொருந்த இசைபாடும் பழனம்சேர் அப்பன்; உள்ளுவார்வினை தீர்ப்பவன்; விண்ணின்மிக்க பரமசிவன் என்று இவ்வாருகப் பலரும் பலவாறு அவனைப் புகழ்ந்து

போற்றுவர் என்றுலும் நானும்சில அடையாளங்கள் கூறுகின்றேன். அந்தி மாலைப்பொழுதில் அழகாக ஒளிவீசுகின்ற பிறைச் சந்திரன் விளங்குகின்ற சடைமுடியைத் தலையிலே தரித்திருப்பான்! பொன்நிறமான கொன்றை மாலையை மார்பிலே அணிந்திருப்பான்! முடியில் சந்திரனையும், மார்பில் அழகிய பொன் மாலையினையும் காட்டி என்னைமயக்கி வஞ்சித்து வளைகவர்ந்த கள்வன் அவன்! இளங்குயிற் கூட்டமே! எனது புதுநலமும் எழினலமும் உண்டும் என் தளிர்வண்ணம் கொண்டும் என் உயிர்மேல் விளையாடியும் முன்னைநாள் என்னை ஆட்கொண்ட வள்ளலாகிய அப்பழனத்தான் இப்போது என்னைத் தனியே தவிக்கவிட்டுச் சிறிதுங் குறிக்கொள்ளாதுஇகழ்வானே? என்னை மறந்தானே? இனி ஒருபோதும் எனக்கின்பம்தாரானே? என்றுலும் என் கண்பொருந்தும் போழ்தும் கைவிடக் கடவேனே? நான் நினைக்கின்ற இங்நினைப்பெல்லாம் அவனிடத்தே சென்று அன்புகூர்ந்து உரைப்பீராக! இது ஒன்றே நீங்கள் எனக்குச் செய்யும் மிகப் பேருதவியாகும்! என்று அருள் கனிந்த உள்ளங் கொண்ட நாவுக்கரசர் பேசுகின்றார். அவர் பேச்சிலேதான் எத்துணை கனிவு! எத்துணை இரக்கம்! இப்போது பாடலைப் பார்ப்போம்.

> சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்! சொல்லீரே
> பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
> முன்மாலை நகுதிங்கண் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
> பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானே.

(தேவாரம் 4. 12. 1.)

சொன்மாலை - சொன்மாலையாகிய கீதம்; பயிலுதல் - பலகாற் சொல்லுதல்; வரி - கோடு; பழனத்தான் - திருப்பழனம் என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன்; முன்மாலை - அந்திமாலை; பொன்மாலை மார்பன் - பொன்நிறமான கொன்றைமாலையைச் சூடிய மார்பினையுடையவன்.

நாவுக்கரசர்பாடிய நன்மைபுரி தீந்தமிழின் தொடைமாலைத் திருப்பதிகத்தை நாமும் பயின்று பேரின்பப் பெருவாழ்வுபெற்று உய்வோமாக.

621



# மூன்று உவமைகள்

வித்துவான், திரு. வி. சா குருசாமி அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

'வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கில் வாய் இனிக்கும் தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாது' என்பது ஒரு பழைய பாடல். நவில்தொறும் நன்னயம் பயக்கும் நன்னூல் தெய்வத் தமிழ்ப் புலவராம் திருவள்ளுவர் பாடிய திருக்குறள். திருக் குறள் திருவள்ளுவருடைய உள்ளத்தைப் பார்க்க உதவும் பளிங்குக் கலம். மனிதன் பொதுநலத்திற்காக வாழவேண்டும். அவன் செல்வம் ஆதரவற்றோர்க்குப் பயன்படவேண்டும் என்பது அவர் கொள்கைகளில் ஒன்று. இதனை உபகாரம் அல்லது உதவிசெய்தல் என்ற பொருளில் ஒப்புரவு அறிதல் என்ற இயலாக எழுதினர். இல்லென இரந்துவந்தார் யாவர்க் கும் வரையாது வழங்கும் வண்மையில்லாதவரும் தம் வருவாய்க்கும் தகுதிக்கும் ஏற்பத்தரும் இவ்வுதவி இவ்வியலில் கூறப்பெறுகிறது. 'உதவிசெய்தால் வருங்கேட்டை ஒருவன் தன்னை விற்றேனும் பெற்றுக் கொள்க' என்று கூறும் இன்றி யமையாத அறம் இது.

செல்வத்துப் பயன் ஈதல் என்பதை உணராது வாழும் மனிதன் இருந்தும் இறந்தவனாகக் காணப்படுகிறான் என்பது வள்ளுவர் கொள்கை.

"உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தான் என்று எண்ணப்படும்"

என்பது நாலடிப்பாட்டு. 'பொருளானும் எல்லாம் என்று ஈயாது இவறும் மருளானும் மாணாப் பிறப்பு' என்பது சினந்து பேசும் செந்தமிழ்க் குறள். 'பொருள் உண்டாயிருக்கப் பிறர் பசி கண்டிருந்த தீவினைபற்றி உணவுகள் உளவாயிக்கப் பசித்து

622



வருந்தும் பேய்ப்பிறப்பு உண்டாகும்' என்பது அதன் உரை. உதவிசெய்யும் மனப்பான்மை ஏழை எளியவர்க்கும் உரிய தாதல் வேண்டும் என்பதை எடுத்துணர்த்தவந்த வள்ளுவர் செல்வர்கள் நாட்டிற்குப் பயன்படவேண்டிய முறைகளை மூன்று உவமைகளில் வைத்துப் பேசுகிறார். ஒரு கருத்து விளக்கத்திற்கு மூன்று உவமைகள் கூறுதல் மிகை. எனவே மூன்று உவமைகளும் வேறு வேறு கருத்துக்களை விளக்க எழுந்தனவாதல் வேண்டும். உவமைகளுக்கு ஏற்பச் செல்வம் பெற்றோர் தகுதிகளும் மூன்றாக இருத்தல் பொருத்தமாக இருக்கிறது.

1. "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு." —குறள். 215

2. "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்." —குறள். 216.

3. "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்." —குறள். 217.

குடி தண்ணீர்க்குப் பயன்படும் குளம் நீர்நிறைந்திருத்தல், பயன் தரும் பழமரம் ஊர் நடுவே உயர்ந்திருத்தல், மருந்திற்கு உதவும் மரம் எளிதில் கிடைக்கும் வண்ணம் இருத்தல் இம் மூன்றும் உவமைகள். செல்வம் ஊருணியாகப் பழமரமாக, மருந்துமரமாகப் பயன்படுகிறது என்பது இக்குறள் மணிகளின் ஒரு கருத்து. உவமைகள் மூன்றிற்கேற்பச் செல்வம் பெற்றவர் மூன்று நிலைகளை உடையவர் என்பதையும் கூறுகிறது குறள். பேரறிவாளன், நயன் உடையான், பெருந்தகையான் எனச் செல்வமுடையோர் மூவகையினர்.

பேரறிவாளன் பெற்ற பெருஞ்செல்வம் பயன்படுதலுக்கு ஊருணிநீர் உவமை. மற்றஇரண்டு உவமைகளின்வேறாயிருந்து விளங்குகிறது இது. ஊருணி பயன்தரும் வகைகள் போலப் பேரறிவாளன் செல்வம் பயன் தருகின்றது. ஊருணி என்ற சொல் நீர்நிறைந்த குளத்தைமட்டும் காட்டாமல் குடிநீர்க்கு உதவும் குளத்தையே காட்டுவது. குடிநீர்க்குளம் தன்னிடம் வரும் வேட்கையுடையார்க்கு ஏற்பத் தண்ணீர் வழங்குகிறது. மனிதனுக்கு ஏற்படும் விருப்பத்திற்கேற்பக் கொடுக்கும்

கொடை உணவு நீர் இரண்டைத்தவிர வேறில்லை. உணவு உண்ணும் மனிதனைப் போதும் என்று சொல்லச் செய்யலாம். நீர்வேட்கை உடையோரையும் போதும் என்ற மனம் வரும் படிச் செய்யலாம். குளத்தை நோக்கிக் குடிநீர்க்கு வரும் அனைவருடைய அவாவிற்கு ஏற்பத் தண்ணீர்கொடுத்துத் தாகந் தணிப்பது குளம். இதுமட்டுமல்ல; நீர்நிறைந்த ஊருணி நினைத்த நேரமெல்லாம் நீர்கொடுக்கிறது. ஒப்புரவு செய்வார்க்குக் காட்டும் உதாரணங்களில் இது சிறந்தது. பேரறிவாளன் உதவி பெறவரும் ஒவ்வொருவருக்கும் விரும்புவனபேசிப் போதும் என்ற மனத்தோடு பொருள் பெற்றுச் செல்லுமாறு கொடுக்கும் திறனுடையவன். நினைக்கும் பொழுதெல்லாம் இவன் பெற்ற செல்வமும் பயன்படுகிறது. நீர்வேட்கை மிகும் பொழுது குடமளவு குடிப்போம் என்ற நினைப்பு, குடிக்கும்பொழுது குவளைத் தண்ணீர் போதும் என்று மனமகிழ்ச்சியோடு மாறு வதுபோலப் பேரறிவாளனிடம் பெருஞ்செல்வம் பெறவிரும்பி வருவோர் கொடுப்பது குன்றியாயினும் குறைவின்றி ஏற்றுக் கொள்வர் என்ற குறிப்பையும் விளக்குகிறது. நீர்வற்றிய பொழுதும் ஊற்றுப்பெருக்கால் உலகூட்டும் பண்பு ஊருணிக் குரியது. பேரறிவு படைத்தவன் செல்லம் அழிந்து சீர்கெட்ட காலத்தும் தலையைக் கொடுத்தேனும் தன்னையடைந்தோரைக் காப்பான். குமணன் போன்ற கொடை வள்ளல் பெருஞ் செல்வம் பெற்று ஊருணியாய் உலகூட்டிய உத்தமர்கள். ஊருணி தான் பெற்ற தண்ணீரைக் கரையிட்டுக் காப்பாற்றிப் பாழ்போகாது பலர்க்குப் பயன்படுத்துகிறது. அறிஞன் செல் வத்தைச் சேகரித்துச் சீர்கெடாது பிறர்க்கு உதவுகிறான்.

இனிக் குறளில் வரும் ‘ உலகவாம் ’ என்ற அடைமொழி பேரறிவாளன் என்ற உவமேயத்தை ஒட்டி இருப்பினும் அவ் அடைமொழியை உவமைக்கும் கூறுதலில் தவறில்லை. உலகத் தாலும் ஊருணி விரும்பிப் பாதுகாக்கப்பெறுகிறது. உலகில் தண்ணீருண்ணும் குளத்தைத் தக்கவாறு போற்றிப் பாதுகாத்து வேண்டும்பொழுதெல்லாம் பயன்பெறுவர்மக்கள். அதுபோலப் பேரறிவாளன் செல்வமும் உலகவாம் சிறப்புடையது. மக்களே பேரறிஞனைப் போற்றி அவன் பெற்ற செல்வத்தைப் போற்றிப் பயன்பெறுகின்றனர் என்பது அடைமொழியால் நாம் பெறும் நயப்பொருள். தான்பெற்ற தண்ணீரைப் பிறர்க்கே பயன்

படுத்துதல்போல அறிஞன் தான்பெற்றசெல்வத்தைப் பிறர்க்கே பயன்படுத்துவான். இம் மூன்று உவமைகளில் பேரறிஞன் செல்வம் பிறர் நலத்திற்குப் பயன்படும் தன்மை கூறப்பெற்றது.

இரண்டாவது பயன்படும் பழம் மரம் ஊர் நடுவில் இருந்து பயன்படுதல் நயனுடையான் பெற்ற நற்பொருளுக்கு உவமையாகக்கூறுகிறது. இது சென்ற குறட்கருத்தின் மாறுபட்ட கருத்தை விளக்க எழுந்தது. பழமரம் நற்பொருள் பெற்ற நயனுடையானுக்கு உவமை. பழத்தால் பயன்தாராது நிழலால் காற்றுல் பயன்தரும் மரங்களை விலக்கிப் பயன்படும் பழமரங் களை உவமையாக்கிக் கூறுவதால் பழங்களால் பெறும் பயன் ஒன்றையே மனத்தில் கருதினுராயிற்று. ஊர் நடுவில் அமைந்து உதவும் பழமரத்தைக் காலமல்லாத காலத்தில் சென்று பூவாகப் பிஞ்சாகக் காயாகப் பயன்படுத்துவது தவறு. கனிந்த கனி தானே உதிர்ந்து பயன் தரும்.

நயனுடையான் நீதியறிந்தவன், நேர்மைஉடையவன், அறம் உணர்ந்தவன், பிறர் நன்மையையே கருதுபவன் என்பனவாய பல பொருளுக்கு உரிய தொடர். உபகாரம் செய்வது இவன் குறிக்கோள். தான் விரும்பிக் காலமறிந்து கொடுக்கும் பண் புடையான் இவன். காலமல்லாத காலத்தில் இவன் கொடை சிறிதாகவோ குறைவாகவோ தோன்றலாம். எந்த மரங்களும் பழந்தருவன அவ்வவற்றிற்குரியகாலத்தில்தான். அதுபோலக் கொடுக்கும் பண்பு இருப்பினும் பிறர்க்குப் பயன்படப் பழமா கக் காலத்தில் செய்யும் உதவி நயனுடையானுக்குரியது. பயன்தருதல் மரத்தின் குறிக்கோள். பழுத்தகாலத்தில் தானே கொடுக்கும் திறத்தது. நயனுடையான் நன்மை செய்வதையே பெற்ற செல்வத்தின் பெரும்பயனுகக் கருதினும் காலமறிந்து தானே செய்வான். பழமரம் ஊரின்புறத்தே இருந்து பயன் தருங் காலங்களில் சென்று வருந்திப் பயன்கொள்ளாமல் ஊர் நடுவே அமைந்திருத்தல் வாய்ப்பாதல் போல நயனுடையான் ஊர் நடுவே செல்வம் பெற்றிருத்தல் சிறப்பு. சென்ற குறளில் கூறிய ஊருணியினும் இது சிறிது தரங்குறைந்ததாகக் காணப் படினும் காலமறிந்து செய்யும் கொடை ஞாலத்தின் மாணப் பெரிது என்ற குறள் கொண்டு சிறப்புத்தரவேண் டியுள்ளது.

"பழமரம் போல், பல்லார் பயன் துய்ப்பத் தான் வருந்தி வாழ்வதே நல்லான் மகற்குக் கடன்" என்று கூறும் நாலடிப் பாடல், இக் குறட் கருத்தைத் தெளிவுசெய்ய எழுந்ததே. பிறர்க்குப் பயன்தந்து வேனில் வெயிற்குலர்ந்து, புயலோடு போராடி, கல்லெறிக்கும் கடுமழைக்கும் பொறுத்துப் பிறர்க்கு உதவும் பழமரம்போல எத்தகைய இடையூறுகளுக்கும் எதிர்த்து நின்று பிறர் நலம் காக்கும் பேராண்மை சிறப்புடையதன்றோ? உலகத்தாரால் வெறுக்கப்பட்டும் செல்வம் பெற்றுச் சீர்கெட்ட வழிகளில் பயன்படுத்தியும் பிறர்க்குப் பெருந் தீங்கு விளைத்தும் நச்சுமரமாக வாழ்தல் கூடாது என்பதை இக் குறளின் கருத்தொடு எதிர்மறையாக்கி "நச்சப்படாதவன் செல்வம் நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று" என்கிறார் வள்ளுவர் மற்றுமொரு இயலுள். நயனுடையான் கொடுக்கும் கொடை இவ்வளவில் அமைகிறது.

மூன்றாவதாக மருந்தாய் நோய் தீர்க்கும் மரம் பெருந்தகையான் செல்வத்திற்கு உவமை. பெருந்தகைமையாவது என்பும் உரியர் பிறர்க்கு என்றவாறு எல்லாவற்றாலும் பிறர்க்குப் பயன்படுந்தன்மை. பிணி நீக்கும் மருந்து மரங்கள் மலைகளின் மறைவிடங்களில் இருந்து பயன்படாமற் போதல் உண்டு. அது பெரும்பான்மை. அவ்வாறின்றி எளிதில் கிடைக்கும் வண்ணம் இருக்கும் மரங்களையே குறித்தற்குத் தப்பாமரம் என்றார். இனி தப்பா என்பதற்கு நோய் தீர்த்தலில் தவறாத என்று பொருள் கூறலும், மற்றும் தன் உடலில் ஒரு சிறிதும் வீணாகாது என்றும் பொருள் கூறலும் பொருந்தும்.

மருந்தாய்ப் பிணி தீர்க்கும் மரம் இலை, ஈர்க்கு, அரும்பு, பூ, பிஞ்சு, காய், கனி, விதை முதலியவற்றாலும், பட்டை வேர் விறகு நிழல் இவற்றாலும் பிறர்க்குப் பயன்தருகிறது. ஒரு சிறிதும் வீணாகாது பயன்படும் மருந்து மரம், எக்காலத்தும் எல்லாவற்றாலும் பிறர்க்குப் பயன்படுகின்ற பெருந்தகையான் பெற்ற பெருஞ் செல்வத்தோடு ஒப்பாயது. மருந்து மரத்தில் தோலைப் பெயர்த்துச் செல்வார் சிலர்; கிளையை வெட்டுவார் சிலர்; காயைக் கனியைத் தனித்தனியே மரத்தின் துன்பத்தைக் கருதாது பயன்கொள்வர் பலர். இவ்வாறு தன் துன்பங்கருதாது பிறர்க்குதவும்பண்புடைமைபோலப்பெருந்தகையான் என்னும்

கடப்பாட்டாளன் தன் துன்பத்தை ஒரு சிறிதும் கருதாது பிறர்க்குதவுவான் என்பது கருத்து. மற்றும் அம் மரம் மக்கள் துன்பம் அடைந்துவந்த பொழுதெல்லாம் காலம் அல்லாத காலத்தில் பயன்தாராத பழமரம் போலின்றிப் பயன்படும் அது போலத் துன்புற்றகாலத்துத் துயர்தீர்த்து இன்பமளிக்கும் சிறப்புப்பெருந்தகையானுக்கு உண்டு.

ஊருணிநீர் எக்காலத்தும் பயன்தருவது. மருந்து மரம் எல்லாவற்றானும் பயன்தருவது. ஆனால், ஆற்றுப் பெருக்கற்ற அந்நாளில் ஊற்றுப் பெருக்கால் அத்தண்ணீர் பயன்படுதல் போல் இன்றி, மருந்து மரம் இருக்குநாள்வரை எல்லாவற்றாலும் பயன்தந்து, தான் அழிந்தபோது பயன்தாராதொழிதலைக் கருதி இவ்விரண்டற்கும் வேறுபாடு உணர்க.

இவ்வுவமைகளில் ஊருணி காலமல்லாத காலத்தும் வேனில் வெப்பத்தால் தண்ணீர் வற்றிய போதும் பயன்தருதலையும், பழமரம் பழுக்கும் காலத்தில் பயன்தருதலையும், மருந்து மரம் இருக்கும் வரைத் தன்னைத் துன்புறுத்தினார்க்கும் பயன்தருதலையும், எல்லாவற்றானும் பயன்படுதலையும் கருதி இவ்வுவமைகளுக்குள்ள குணங்கள் எல்லாம் உவமேயமாய செல்வம் உடையார்க்கு ஏற்றிப் பொருள் வேறுபாடறிக.

---

தருமைத் தமிழ் ஆராய்ச்சிப் பகுதியில் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் (அண்ணாமலைப்பல்கலைக் கழக ஆராய்ச்சி விரிவுரையாளர்.) "திருக்குறள்—உரைவளம்" ஆய்ந்து வெளியிட்டபோழ்து உடனிருந்து அவர்கள் கருத்தை அறியும் வாய்ப்புக் கிடைத்தது. அக்கருத்தின் சிறு துளி இது.

677

# சிலம்பில் காவிரி

பண்டித வித்துவான், திரு. சுந்தரமூர்த்தி அவர்கள்

கவிஞர்கள் தாம் கருதும் பொருளைச் சொற்களில் தொகுத்துப் பாடுங்கால் தம்மை மறந்தே பாடுகின்றனர். தாம் கருதிய பொருளின் மயமாய் நின்றுபாடுவதால் அப்பாடல்கள் படிப்போர்க்கு உயிரையும் உடலையும் ஒருங்கு குளிர்விக்கும் தன்மையதாய்த் திகழ்கின்றன. அப்படிப்பட்ட நூல்களே உண்மை நூல்களாய், உயிர்ப்பு நூல்களாய்க், காலம் மாறினும் தாம் கருதிய திறன்மாருததாய்த் திகழ்ந்துவருகின்றன. அப்படிப் பாடுங் கவிஞரில் ஒருவரை ஈண்டு நோக்குவோம்.

இளங்கோவடிகள் இத்தகைய கவிஞர் வரிசையில் எண்ணத்தக்கவர். புவியரசு துறந்து கவியரசாகத் திகழ்ந்த பெருந்தகையார் சோழநாட்டுக் கண்ணகி, பாண்டியநாட்டில் வழக்குரைத்துச் சேரநாட்டின்கண் இருந்து வானம்புகுந்த வரலாற்றை மூவரையும், மூன்று நாட்டையும் முத்தமிழால் தொடர்புகொளச் செய்து முக்காலத்தினும் ஒக்கப் புகழுமாறு பாடிச்சென்றபுலவர் பெருந்தகை. அத்தகைய பெருமான் பாடிய பாடல்களில் சிலவற்றைக் காண்பாம்.

கோவலன் கண்ணகியோடு தொடர்பின்றி, மாதவியின் காதலால் அவளுடனே இயைந்து கடற்கரைக்குச்செல்கின்றான் ஓர்நாள். காவிரி கடலோடு கலக்குமிடமல்லவா காவிப்பூம் பட்டினம்? ஆதலால் இவர்கள் நினைவு எல்லாம் கடலில் மட்டுமோ அல்லது கடற்கரையின்கண் இருக்கும் இயற்கைக் காட்சிகளில் மட்டுமோ நின்றுவிடவில்லை. காவிரியிலும் செல்கிறது இவர்கள் நினைவு. கோவலனுக்குக் காவிரியைக் காணும் போழ்தெல்லாம் சோழனது மனைவியே காவிரியென்றும், தன் கணவனும் அச்சோழன் தன்னையேயன்றித் தன்போன்ற பெண்ணும் கங்கையை மணந்தபோதும் அக்காவிரியாம் நங்கை அக்கணவனுடன் ஊடுவதில்லையென்றும், காவிரியைப் பத்தினித் தெய்வமாகவே காண்கிறான். மாதவியும் அக் காவிரியை நங்கையாகவும், அந்நங்கை இடையருது தவழ்ந்து பெருமிதத்தோடு செல்வதற்கு அவள் கணவனும், சோழனின் செங்கோல்திறனே காரணம் என்றும் வியந்து பாடுகின்றாள்.

வியந்து பாடவைக்கின்றது இளங்கோவடிகளின் இதயம். இந்நிலையில் எப்படி இருக்கவேண்டும் பாடல்? அப்பாடலைக் காண்பாம்.

1. "திங்கண்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி.

2. மன்னுமாலை வெண்குடையான் வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி.

3. உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த வெல்லாம் வாய் காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி."

கோவலன் பாடிய இப் பாடல்கள் மூன்றும் ஒரு பொருளையே விளக்கி நிற்கின்றன. இதில் காணும் பொருள் காவிரியைப் பற்றியதேயாயினும் உட்கருத்தாக வேருெரு பொருளும் தொனிக்கின்றது. இவற்றைப் பாடியது கோவலன் என்று முன்பேகண்டோம். காவிரியாம் நங்கை தன்கணவன் சோழன் கங்கையென்னும் நங்கையை மணந்தபோதிலும் தான் புலப்பதில்லை-அதற்குக்காரணம் "மங்கைமாதர் பெருங்கற்பு." அதுதான் என்பதைத் தான் அறிந்ததாகக் கூறுகிருன். இதனைக் கோவலன் வாயிலாக இளங்கோவடிகள் கூறக்காரணம்என்ன என்பதை உற்றுநோக்க வேண்டும். கோவலன் இப்பாடலைப் பாடும்பொழுது இருக்கும் நிலை யாது எனப் பார்க்குங்கால் கண்ணகியைப் பிரிந்து மாதவியோடு கூடியிருக்கின்ற சமயம் இது. ஆனல் இதேசமயத்தில் மாதவிக்கும் தனக்கும் பிரிவு ஏற்படப் போகிறது. பிரிந்தவுடன் நேரே கண்ணகியிடத்துத் தான்செல்கிருன். சென்றவுடன் அந் நங்கையர்திலகமாகிய கண்ணகி இவன் இதுவரைப் பிரிந்திருந்தான் என ஊடல் கொள்ளாது அன்புடன் வரவேற்கின்ருள். அங்ஙனம் வரவேற் றமைக்குக் காரணம் என்ன? கோவலன் உள்ளம் எதுவோ அதுவே தனதுள்ளம் என்று கருதினுள் கண்ணகி. இதனைக்

கண்ணகியே "யாவதும் மாற்ரு உள்ள வாழ்க்கையேன்" எனக் குறிப்பிடுகிருள். இதுதான் கற்பு என்பது. அதன் வடிவமே கண்ணகி. அவ்வடிவத்தையே படம்பிடித்துக்காட்டு கின்றது சிலப்பதிகாரம். எனவே இந்தகைய எதிர்கால நிகழ்ச்சிகள் அத்துணையையும் இப்பாடலின்கண்ணே ஒருங்கு காட்டுகின்ருர் நம் இளங்கோவடிகள். கண்ணகிக்குக் கணவ னும் கோவலன் மாதவியாம் பிறிதொரு மாதினைக் கூடிய போதிலும் கண்ணகி புலந்தாளில்லை. ஏனென்ருல் அதுதான் "மங்கைமாதர் பெருங்கற்பு" என நாம் அறியவேண்டிய செய்தியைக் காவிரியின் நிகழ்ச்சியிலிருந்து கோவலன் அறிந்த தாகக் கூறியிருக்கும் மாட்சியே மாட்சி!

இனி மாதவி காவிரியை நோக்கிக் கூறிய செய்தியைக் காண்போம். காவிரி என்னும் நங்கை இருபுறமும் வண்டார்ப் பவும், அழகிய பூவாடைதரித்து, கயல்கண் விழித்து நடந்து வருகின்றதாம். இப்பெருமிதம் எத்னுற் கிடைத்தது? உன் கணவன் சோழனது அருளேயன்ரே? அவ்வருளால்தான் இத் துணைப் பீடும், பெருமையும் கிடைத்திருக்கின்றது என்றும் கூறுகின்ருள். அப்பாடல் :-

1. "மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடையது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய்வாழி காவேரி
கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லா நின்கணவன்
திருந்துசெங்கோல் வளையாமை யறிந்தேன் வாழிகாவேரி."

2. "பூவர்சோலை மயிலாலப் புரிந்துகுயில் களிசைபாடக்
காமர்மாலை யருகசைய நடந்தாய்வாழி காவேரி
காமர்மாலை யருகசைய நடந்தவெல்லா நின்கணவன்
நாமவேலின் திறங்கண்டே யறிந்தேன்வாழி காவேரி."

என்பன. காவிரி புனல் பரந்து பொன் கொழிக்கும் புனிதத் தன்மையோடு தவழ்ந்து செல்கிறது. இப் பாடல்களிலும் காவிரியின் பெருமிதத்திற்குக் கணவனும் சோழனின் செங் கோல் திறனே காரணம் என்னும் வெளிப்படைப் பொருளே யன்றி வேருெரு பொருளும் தொனிக்கிறது. இப் பாடல்கள் பாடிய சூழ்நிலை எப்பொழுது என்பதை முன்னரே கண்டோம். மாதவி தான் கோவலனுேடு இருக்குங்காலத்தில் இப் பாடல் களைப் பாடினுள். எனவே தனக்கு இது பொழுதிருக்கும்

பெருமைக்கும் கண்ணகி தற்பொழுது அடைந்திருக்கும் சிறுமைக்கும் காரணம் என்ன? என்பதையும் இப் பாடல்கள் நுண்மையாய் விளக்குகின்றன. காவிரியின் பெருமிதத்திற்குச் சோழனது அருளே காரணமாதல் போல மாதவியின் பெருமிதத்திற்கும் கோவலனின் அருளேயன்றிப் பிறிதில்லை என்பதையும் மாதவி வாயிலாக இளங்கோவடிகள் விளக்குகிருர். இங்ஙனம் இருவர் வாயிலாகவும் காவிரியை இடமாக வைத்து வெளிப்படுத்தியிருக்கும் உண்மைகளையும் உயர்வுகளையும் உற்று நோக்குவார்க்குத் தெள்ளிதின் இன்பம் விளைவிக்கும்,

இங்ஙனம் இன்பத் திறத்தில் திளைத்து நிற்கும் இருவர் வாயிலாக அடிகள் உண்மையைக் கூறியதோடன்றித் தனக்கு இவ்வுண்மைகளைக் காட்டிய காவிரிக்கு இறுதியில் வாழ்த்து நவிலுகிருர். மாதவியின் வாயிலாக அங்ஙனம் வாழ்த்துவதோடு ஒரு அறத்தையும் எடுத்துக்கூறி முடிக்கிருர். அப்பாடலைக் காண்பாம்.

> "வாழியவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
> ஊழியுய்க்கும் பேருதவி பொழியாய் வாழி காவேரி
> ஊழியுய்க்கும் பேருதவி யொழியா தொழுகல் உயிரோம்பும்
> ஆழியாள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி."

இப் பாடலின்கண் சோழவளநாட்டை மகவாக்கி அம் மகவை ஈன்ற தாயாகக் காவிரியைக் கண்டு களிக்கின்ருர் இளங்கோவடிகள். தாய்மைத் தன்மையைப் போற்றியதோடன்றி இன்றுநேற்றல்ல, பண்டுதொட்டு ஊழிதோறூழியாய் ஒழியாது ஆற்றிவரும் அதன் பண்பையும் எடுத்துக் கூறிக் காவிரியாம் அன்னையே! நீ இங்ஙனம் ஆற்றியிருக்கும் தன்மையை மறக்கமாட்டாயெனினும் நான் வேண்டிக்கொள்ளும் முறையில் உதவிசெய்ய வேண்டுமென்று வேண்டுகின்றேன் என்கின்ருர் இளங்கோவடிகள்.

நமக்குச் சாதாரணமாக ஓடிவருகின்ற நீர்மையுடைய காவிரி இக் கவியரசாம் இளங்கோவடிகட்கு இத்துணைப் பேரொழுக்கங்களையும் உயர்வுகளையும் எடுத்துக்காட்டுவதாக இருக்கும் என்ருல் கவிஞனின் காட்சியே உயரிய காட்சி அதன் மாட்சியை என்னென எடுத்துக் கூறுவது?

---

681

# வேத வேள்விகள்

பிர்மஸ்ரீ. K. S. விசுவநாத சாஸ்திரி அவர்கள்.

உயர்வை அடைதற்கே நாம் ஒவ்வொருவரும் முயன்று கொண்டிருக்கிறோம். அதை அடைதற்குரிய நெறிகளோ பலப் பல. கற்றற்குரிய நூல்களைக் கற்றலும், கற்றறிந்த நெறியில் நிற்றலும், பொருளைத் தேடலும் அதனை வறியோர்க்கு வழங்கி உதவலும் இம்மைப் பயனாய புகழைப் பயந்து உயர்வளிப்பனவாம். மெய்ப்பொருளுணர்வும் தவமுயற்சியும் மறுமைப்பயனாய வீட்டின்பத்தை அளித்து உயர்வளிப்பனவாம்.

இவ்விருமை உயர்வையும் ஒருங்கே எய்துதற்குரிய வகையில் நமக்குரிய கடமைகள் சில வகுக்கப்பெற்றிருக்கின்றன. அவை,

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்" —தொல். புறத். 75.

எனவரும் தொல்காப்பியச் சூத்திரத்தாற் காணப்பெறும். அவற்றுள் அந்தணர் கடமைகள் ஆறும்,

"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதலேற்றல் என்றாறு புரிந்தொழுகும்." —பதிற். 24: 6, 7.

என்ற பதிற்றுப்பத்து வரிகளாலும் விளங்கும். இவ்வாறு கடமைகளுள்ளும் ஓதல் வேட்டல் ஈதல் மூன்றும் அரசர் முதலிய ஏனோர்க்கும் உரியனவாம். இம் மூன்றனுள்ளுங்கூட வேட்டலே ஏனை இரண்டனையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு நிற்பதாகின்றது. வேட்டலாவது வேள்விசெய்தல். வேள்வி செய்தற்கு வேதம் ஓதல் இன்றியமையாதாதலாலும் ஈதல் வேள்வியின் ஒரு பகுதியாகி வேள்வியை முற்றுவிப்பதாதலாலும் வேட்டலே தலையாய கடமையாகவும் அமைகின்றது.

இவ்வேள்வியால் நம் நாட்டில் உயர்வெய்திய சான்றோர் பலர். சேரநாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பான்,

" நீர்நாண நெய் வழங்கியும்
எண்ணுணப் பல வேட்டும்
மண்ணுணப் புகழ் பரப்பியும்" —புறம். 166: 21, 23.

உயர்வெய்திய செய்தியை ஆவூர்மூலங்கிழார் என்னும் பெரும் புலவர் மிக அழகாக எடுத்துரைக்கின்ருர்.

மற்றும், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பாலைக்கௌதமனுர் வேண்டுகோட்கிணங்க அவரை வேட்பித்துதவியதும் அதனுல் அவர் வீடுபேறு பெற்றதும் ஆகிய செய்தியும் சங்க இலக்கியமாய பதிற்றுப்பத்தின் மூன்ரும் பத்துட் காணப்படுகின்றது.

இனி அரசர்களுள்ளும் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி வேள்வி செய்து உயர்வெய்தியமையை,

" நெய்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபநட்ட வியன் களம்பல கொல்
யாபல கொல்லோ பெரும." —புறம். 15.

என்று நெட்டிமையார் என்ற பெரும்புலவர் புகழ்வதனுல் உணரலாம்.

" வேத வேள்வித் தொழின் முடித்ததூஉ
மறிந்தோன் மன்ற அறிவுடையாளன்." —புறம். 224: 9, 10.

எனச் சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கருங்குழலாதனுர் புகழ்வதனுலும் அரசர் பலர் வேள்வி செய்து மேன்மையுற்ற செய்தி புலனும். விரிப்பிற் பெருகும்.

இவ்வேள்விகள் ஏழு ஏழாக மூவகைப்படுவதும் வரியில் இருபத்தொன்ருவதுங்கூட,

" மூவேழ் துறையும் முட்டின்று போகிய." —புறம். 116: 8.

என்பதன் உரையாலும் அதன் அடிக்குறிப்பாலும் அறியலாம். அவரவர் ஆற்றற்கேற்பத்தத்தமக்கு உகந்தனவற்றை அவரவரும் தேர்ந்துகொள்வதற்கே இது வகைசெய்வதாம்.

இங்ஙனம் நாம் ஏற்பனவற்றை மேற்கொண்டொழுகிப் பயனடையுமாறு நடைபெற்றுவந்த வேதவேள்விகள் பௌத்தம் சமணம் முதலிய சமயங்கள் பரவுகின்ற காலத்தில் சிறிது நலிவு அடையத் தலைப்பட்டன. எனினும் அடியோடு மறைந்துவிட வில்லை.

ஆனல், கருமயோகமாகவும் ஞானநெறியாகவும் பக்தி மார்க்கமாகவும் விளங்கிவந்த தம் இயல்பிற்கு மாருகக் கருமமே பயனளிப்பதென்றும் பயனளிப்பதற்காக ஒரு கடவுள் உண்டென்றுகொள்ளத் தேவை இல்லை என்றும் நினைக்கின்ற அளவிற்கு மக்களிடம் பிற்காலத்தில் கருமத் தடிப்பு மேலிடத் தொடங்கியது.

இக்குறைபாட்டை அகற்றுதற்கு குருமகார்கள் அவதாரம் செய்து ஞானநெறியை உபதேசித்தருளினர்கள். அவ்வுபதேசத்தைப் பின்பற்றிப்பயனடைவோர் ஒருபுறமிருக்க, மற்றெருபுறம் ஞானனுபவ முதிர்ச்சியினுல் கரும்ங்கள் தாமே நழுவவேண்டுமென்ற உண்மையை மறந்து ஞானம்ஒன்றே போதுமானதென்றும் ஏனையது எதுவும் வேண்டியதில்லை என்றும் நினைக்கின்ற மனநிலை மக்களிடம் வளரத்தொடங்குகின்றது. இந்தவிதமாகக் கருமம் ஒருபுறம் ஞானம் ஒருபுறமாகத் தனித்தனி பிரிந்து நிற்கவும் தலைப்படுகின்றன.

இந்நிலையில் இவ்விரண்டையும் இணைத்து வைப்பதற்குப் பத்திநெறி தோன்றுவதாகின்றது. திருஞானசம்பந்தர் முதலிய சைவ சமயாசாரியர்களும் முதலாழ்வார்கள் போன்ற வைணவச் சான்றேர்களும் இப்பத்திநெறியைப் பெரிதும் வளர்த்து வந்தார்கள். ஆனல் வேள்விவாயிலாக நிகழ்ந்துவந்த வழிபாட்டுமுறை இவர்காலத்தில் ஆலயவழிபாடாக மாறிவிட்டது வேள்வித்தீயின் வாயிலாக நடந்துவந்த தெய்வழிபாடு பிர்ம விஷ்ணு மூர்த்தங்கள் முதலாய விக்கிரக வாயிலாக அமைந்து விடவே இப்பெரியோர்களின் பக்திநெறியும் அக்காலநிலைக் கேற்ப அவ்வாலயத் தொடர்பு கொண்டதாகவே அமைந்து விடுகின்றது.

வேதகால வேள்விகளோ மந்திர வடிவான கடவுட்பாடல் களால் நிகழ்வன. அந்தந்த மந்திரங்களை ஓதி அந்தந்தத்தேவதைக்கும் உரிய அவியை அங்கியிற் சொரிந்து அதன்வாயிலாக

அந்தந்தத் தெய்வத்தையும் வழிபடுவதே வேள்விகளின் பொது வியல்பு. இதற்கு இன்றியமையாத துணையாக அமைவது மறையை முறையே ஓதி உணர்வது. இக்காரணத்தினாலேயே அவரவர் கடமைகளாக ஓதியவற்றுள் ஓதலே முதலில் முன் நிறுத்தப்பெறுவதாகின்றது.

இங்ஙனமாகவே நாம் முதற்கடமையாக மறையை ஓதி உணர்ந்து அதனைத் துணையாகக்கொண்டு வேள்விகளைச் செய்யும்போது நமது மனம் மொழி மெய்களாகிய திரிகரணங் களும் ஒருங்கே நன்னெறிப்படுவன ஆகின்றன. மறை ஓதலால் மொழியின் நெறிப்பாடும் வேள்விக்குரியன செய்தலால் மெய் யின் நெறிப்பாடும் மந்திரப்பொருளைப் சிந்தித்துக்கொண்டே அவை ஆற்றப்பெறுவதால் மனத்தின் நெறிப்பாடும் அமை வனவாம்.

இவ்வாறாக நம்மை நல்வழிப்படுத்தி நமது வேள்வி வழி பாட்டிற்கு உற்ற துணையாக அமைகின்ற காரணத்தினாலேயே "நட்பின் இயல்பை நன்கு உணர்ந்த மறையாகிய நண்பனை எவன் கைவிடுகின்றானோ அவனுக்குச் சொல்லளவிலும் பாக் கியம் இல்லை" (ஆரண்யகம். 1, 3, 8.) என்றும், "அவன் புண்ணிய நெறியை அறிவதுமில்லை" என்றும் ஆரண்யகம் அறிவிக்கின்றது.

அன்றியும், ஒருவன் சோமயாகம் முதலிய பெருவேள்வி களைச் செய்தற்குரிய உரிமை அவன் செல்வ நிறைவுள்ளவனாக இருக்கும்போதுதான் அமைகின்றது. வறியனாயவிடத்து அவன் அப்பெருவேள்விகளைச் செய்ய இயலாது. அப்பொழுது அவற்றில் அவனுக்கு உரிமையும் இல்லை. ஆனாலும் அந்தந்த வேள்விக்குரிய மறைப் பகுதிகளை எளிதில் அவன் ஓதலாம். அவற்றின் பொருளையும் சிந்திக்கலாம். அவ்வளவிலேயே அந்தந்த வேள்வியின் பயனையும் அவன் பெறுகின்றான் என் கின்றது வழியோதலை விதிக்கின்ற மறைப்பகுதி (ஆரண்யகம், 2: 15, 7).

(தொடரும்)

685

தோத்திரப் பகுதி இணைப்பு

# சேக்கிழார் கண்ட இசைத் தமிழ் (2)

சங்கீதம், குடந்தை, திரு. ப. சுந்தரேசனுர் அவர்கள்.

(முற்றொடர்ச்சி மலர் 14 இதழ் 8)

திருவெண்ணெய்நல்லூரில் இறைவனை உணர்ந்த பின்னர் நம்பியாரூரர் எத்தகைய நிலையில் இருந்திருக்கவேண்டும்! அவர் வந்த அம் முதியவரை மதியாமல் இருந்த தன்மையை எண்ணி எண்ணிப் பார்த்திருக்கவேண்டுமன்றோ! 'முன்னவனே முன்னின்ருல் முடியாத தொன்றுளதோ!' அருள்வயப் பட்டிருந்த நம்பியாரூரர் உள்ளத்துணர்வு எவ்வாறு இருந்த தெனச் சேக்கிழார்பெருமான் நம்மனோர்க்கு அறிவுறுத்தும் அப் பகுதியினைக்காண்போம். நம்பி தம் பெருவிருப்பினோடு தனித் தொடர்ந்து அழைப்ப, தடுத்தாட்கொண்ட இறைவன், முன்பு நீ நமக்குத் தொண்டன் ஆனமையினலே முன்னிய வேட்கை கூரப் பின்பு நம் ஏவலாலே மண்ணின்மீது பிறந்தனை. ஆகையால் துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து நாம் தடுத்தாண்டோம் என்ருன் இறைவன்.

இவ்வோசைகளைக் கேட்டவளவிலே "ஈன்ற ஆன்கனைப் புக்கேட்ட கன்றுபோல் கதறி நம்பி கரசரணுதி அங்கம் துன்றிய புளகம் ஆகத் தொழுதகை தலைமேல் ஆக மன்றுளீர்! செயலோ வலியவந்து ஆட்கொண்டதென்ற போது" எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய, மண்ணவர் மகிழ்ச்சி பொங்க அன்பின் பெருக்கினுல் மிக்க சிறப்பினை உடையதாகிய அர்ச்சனை பாட்டே ஆதலால் இம்மண்மேல் நம்மைச் சொற்கள் நிறைந்த தமிழாற் பாடுக" என உணர்த்தினுர் என்பதே அப் பகுதியாகும்.

இப்பகுதியால் நம்பியாரூரரின் உள்ளத்துணர்வு, யாவராலும் காண்டற்கரிய இறைவனைக் கண்ணெதிரே கண்டு அவர் வாயினுல் "முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை

ஆதலாலே என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்" எனக் கேட்டு, அம்முன்னவன் அருளால் பெறுதற்கரிய பெறும் பேற் றினைப் பெற்றமையினாலே இன்பம் என்ற உணர்ச்சியே முதன் முதலில் தோன்றி அதன்வழி உயர்ச்சியும், பெருமிதமும், மருட்கையுமாகத் தோன்றும் நிலையில் அமைந்துவிட்டது எனலாம்.

உள்ளத்துணர்ச்சிகள் இன்பமாய்ப் பின்னர் அதன் உயர்ச்சி யாய்த் தோன்ற மெய்ப்பாடுகள் பெருமிதமும் மருட்கையும் ஆகத் தோன்றுவதும் இயல்புதானே! மேலும் பெருமிதச் சுவையும் மருட்கைச் சுவையும் நிறையப்பெற்ற இந்தளப் பண்ணிலே பாடத் தோன்றுவது எத்துணைப் பொருத்தம்! "எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய" என்றமை யால் ஐந்து ஓசைகளையே கொண்ட இந்தளப் பண்ணில் சுந்தரர், 'பித்தா' எனப் பாடினார் என்று (சேக்கிழார்) கூறுவது இன்னும் எத்துணைப் பொருத்தம்! என்னே நம் சேக்கிழார் பெருமானின் அருள்தோய்ந்த தமிழ் மொழியின் தனிப் பண்பு! உள்ளத்துணர்வும், அவ்வழித்தோன்றிய மெய்ப்பாடுகளும், அவ் வழித் தோன்றிய (உட்கருத்தின்வழி) சொற்களும், சொற்களின் பொருள்களும், சொல்லோசையின் வழித் தோன்றிய இசைப் பண்பும், இசையின் தொகுதியினாலாய பண்ணின் இயல்பும் இத்துணைப் பெருமையோடு விளங்குவதை அறிஞர்கள் ஆய்ந் தாய்து நன்கு உணர்தல் வேண்டாமா? நிற்க;

இனி, இந்தளப் பண்ணில் அமைந்து இசைகளைக் காண் போம். முன்றோன்றிய தாரமுறையில் மூன்றாவது முறையாகிய துத்தமுறை துத்தத்தினை முதலிசையாகக்கொண்டு வருவதால் துத்தம் - 0 என நிற்கும். அதாவது: துத்தம் தொடங்குமிசை யானமையினாலே இக்காலம் இதனை ஆதார சுருதியெனும் பொருள்பட ஷட்ஜம் எனக் கொள்ளல்வேண்டும். அடுத்த உழை ரு. இவ்விசை தொடக்க இசைக்கு ஐந்தாவது அலகில் நிற்றலால் இக்காலம் இது ஐந்து சுருதியுள்ள சாதாரண காந் தாரம் எனப்படும். இதனை அடுத்தது; இளி கூ. இவ்விசைநின்ற (தொடக்க) இசைக்கு ஒன்பதாவது அலகில் நிற்றலால் இக்கா லம் இது சுத்தமத்யமம் எனப்படும். இதனையடுத்தது தாரம்ய௪. இவ்விசை நின்ற இசைக்கு பதினான்காவது அலகில் நிற்பதால்

 687

இக்காலத்தில் இது சுத்ததைவதம் எனப்படும். இதனையடுத்த குரல் யஅ. இவ்விசை நின்ற இசைக்குப் பதினெட்டாவது அலகில் நிற்றலால் இது இக்காலம் கைசிகி நிஷாதம் எனப்படும். இவ்விசைநிலையை அட்டவணைப்படுத்திக் காண்போம்.

இந்தளப்பண்

இப்பண் பழைய ஐந்திசைப் பண்களில் ஒன்று

| பழங்கால இசைகளின் பெயர்கள் | | அலகு நிலை | சுருதி நிலை | தற்கால இசைகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| க. | துத்தம் | ० | ० | ஷட்ஜம் |
| உ. | உழை | ரு | 5 | சாதாரண காந்தாரம் |
| ந. | இளி | கூ | 9 | சுத்தமத்யமம் |
| ச. | தாரம் | யச | 14 | சுத்ததைவதம் |
| ரு. | குரல் | யஅ | 18 | கைசிகிநிஷாதம் |

இந்த இராகம் தற்கால ஔடவ ராகங்களில் ஒன்று

இந்தோளராகம்

இவ்விசைகளை முறையே மூவகை நிலையில் நிறுத்திக் கண்டால் இவை கூடும் கிழமை தெள்ளிதின் அறியப்படும். மூவகை நிலைகள் மெலிவு, சமன், வலிவு எனப்படும். மெலிவு நிலை இசைகளைக் கீழே புள்ளியிட்டும், சமநிலை இசைகளை வாளா விடுத்தும், வலிவுநிலை இசைகளை மேலே புள்ளியிட்டும் உணரப்படுவது மிகவும் இன்றியமையாததொன்று. ஆனமையினாலே அம்முறையில் அடக்கிக் காண்போம். இதனை அறிந்துணர இசைகளினுடைய குறியீட்டெழுத்தினையும் எழுதிக் கொள்ளல்வேண்டும்.

இசைப் பெயர்களும் குறியீட்டெழுத்துக்களும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க. | துத்தம் | — | ஷட்ஜம் | குறியீட்டெழுத்து | ச |
| உ. | உழை | — | சாதாரணகாந்தாரம் | ,, | க |
| ந. | இளி | — | சுத்தமத்யமம் | ,, | ம |
| ச. | தாரம் | — | சுத்ததைவதம் | ,, | த |
| ரு. | குரல் | — | கைசிகிநிஷாதம் | ,, | நி |

688



## மூவகை நிலைகள்

| மெலிவுநிலை | சமநிலை | வலிவுநிலை |
| --- | --- | --- |
| ச க ம த நி | ச க ம த நி | ச் க் ம் த் நி |

இந்தளப் பண்ணில் இம் மூவகை நிலையில் மெலிவில் த நி என இரண்டும் சமத்தில் ஐந்தும் வலிவில் ச் க் ம் என மூன்றையும் எடுத்து நிறுத்திப் பாடப்பெறுதலோ இசைக்கப் பெறுதலோ வேண்டுமானமையினாலே இவைகள் உரிமை யோடு கூடும் முறையினைக் காணல்வேண்டும். இவ்வைந் திசை முறையில் இவ்விந்தளப் பண்ணில் **இணை, கிளை, நட்பு, பகை** என நால்வகைக் கூறுபாட்டிசைகளில் நட்பு ஒன்றே சிறப்பாக நின்று ஏனைய இணை, கிளை, பகை இவை ஒன்றுமே இல்லாத தன்மையினால் இப் பண்ணிற்குத் தனிச் சிறப்பு ஒன்றும் உண்டு. உலகில் நட்பு ஒன்றுதானே உரிமையோடு கூடும்! இதனை இசை வகையிலும் தமிழ் மக்கள் அறிந்தே இருந்தனர். இசை முறையில் ஒன்பதாம் அலகு உள்ள இடம் நட்பாகும். இம் முறையில் இந்தளப் பண்ணில் **துத்தத்திற்கு இளி நட்பு. இளிக்குக் குரல் நட்பு. உழைக்குத் தாரம் நட்பு.** இவை ஒன்றுக்கொன்று நட்புரிமையோடு கூடும் நீர் மையை அதாவது இசைக்கப்படுந் தன்மையைத்தான் நம் தெய்வச் சேக்கிழார் **கூடும் கிழமையினால்** என விதந்தோதி னார். இசைவாணர்கள் நன்கு அறிதல் கூடும். இதனை, **நிறை பாணியின்** - பாணி என்பது தாளத்தின் உள்ளீட்டு முறை எனப்படும். இவ்வுள்ளீட்டு முறையைக் கொண்ட தாளத் திற்கும் பாணி எனக் கூறப்படுவதுபற்றிப் **பாணி** என்ற சொல் லினுக்கு **தாளமுமாம்** என அடியார்க்கு நல்லார் உரை கூறுவர். தாளமும் அதன் உள்ளீட்டு முறையும் எழுத்து, அசை, சீர் இவையிற்றின் அடிப்படையில் தோற்றப்படுவதால் இங்கே பித்தா பிறைசூடி என்ற பாடலின் சீர் அமைப்புக்களைப்பற்றி அறிந்துணர வேண்டும்.

இப்பாடலை இருவகையாகச் சீர் பிரித்துக் காணலாம்.

1. பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூ ரருட்டுறையுள்
அத்தா உனக்காளா யினியல்லே னெனலாமே.

2. பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

இவ்விருவகை அமைப்பினுள் முதலுருவமே சிறப்புடைத்தாகும். யாழ்நூல் 248 ஆம் பக்கத்தில் அருட்டிரு விபுலானந்த அடிகளார் கீழ்க்கண்டவாறு குறித்திருப்பதனையும் அறிஞர்கள் காண்பாராக.

“ அத்தா ! பித்தா ! அண்ணா ! அழகா ! அடிகேள் ! அன்னே ! ஆயா ! என அன்புருகி ஆண்டவனை விளித்த விளிச்சொற்கள் தனித்து நிற்றற்கு இயைந்த முதலுருவமே சிறப்புடையது ”

ஆகவே, முதலுருவினை வைத்து நோக்குமிடத்து பித்தா, என்ற சொல் தேமா என இரண்டு நேரசையாக நிற்றலை நன்கு காணலாம் இது இயல்வகை. இசைவகைக்கு அளபெடை நிரம்பப் பெறுதல் இயல்பானமையினாலே தே எ மா அ (என இயல் வகையில்) பிரித்துக் கொள்ளல் கூடும். இவ்வாறு நோக்குமிடத்து தே என்பது இரண்டு மாத்திரையும் எ ஒரு மாத்திரையும் இதுபோன்று மா என்பது இரண்டு மாத்திரையும் அ ஒரு மாத்திரையும் ஆக ஆறு மாத்திரைகள் நிறைந்திருப்பதால் அதாவது ஆறு மாத்திரைகள் உள்ளீட்டு முறையில் அடங்கிய முடிபொன்றுடைய தாளத்தில் அடங்கப்பெறல் வேண்டுமென்பதனை நன்கு அறியவேண்டும். இதனை அடுத்த பகுதியில் காணலாம்.

---

## EXTRACTS FROM THE VISITORS' BOOK

புள்ளிருக்குவேளூர்க் கோயிலில் சுவாமிதரிசனம் செய்யும் பாக்கியம் இன்று கிட்டியது. குடும்பத்துடன் சிறந்த அனுபவம் பெற்றேன். உள்ளத் தூய்மையைத் தூண்டக் கோயிலில் எங்கும் தூய்மை பிரகாசிக்கக் கண்டேன். நிர்வாகிகளின் கவனிப்பும், கண்காணிப்பும் அபாரம். உடல் நோய்களுக்கு மட்டும் அன்றி மன நோய்களையும் போக்குபவராக விளங்கு கிறார் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி. இங்கு வரும் பக்தர்களுக்கு ஆண்டவன் திருவருள் என்றும் துணை நிற்குமாக.

(ஒ. ம்.) எம். பி. சீனிவாசன்,
உதவி ஆசிரியர், சுதேசமித்திரன்.
22—2—55.

690



# "வள்ளல் ஆய்"

வித்துவான், திரு. பொன். சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்,
திருவிடைமருதூர்.

## வள்ளற்றன்மை

வள்ளல் என்னுஞ் சொற்கு வரையாது கொடுப்போன் என்பது பொருள். வரையாது கொடுத்தல் என்பது தனக்குரிய எல்லாப் பொருளையும் யாவர் கேட்பினும் இல்லையென்னாது கொடுத்தல். இக் கருத்தினை, "இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்" என்னும் வள்ளுவர் வாய்மொழியும் வலியுறுத்தும்.

கொடையிலும் இரவலன்து குறிப்பறிந்து அவன் நம்மை நாடி ஒருபொருளை விரும்பிக் கேட்குமுன்னர், இப்பொருளைப் பெற்றுக்கொள் என்று வலிந்து கொடுப்போரது வள்ளற் றன்மையே மிகச் சிறப்புடையது. இச்செய்தியை "கொள் ளெனக்கொடுத்தல் உயர்ந்தன்று" என்ற புறநானூற்றடியால் அறியலாம். வள்ளல்களாவோர் நாம் இம்மையில் இப்பிறவியில் அறஞ்செய்தால், மறுமையில் நமக்கு இவ்வறம் உதவிசெய்யும் என்ற நோக்கத்துடன் செய்தல் கூடாது. நாம் பிறவியெடுத்த பயன் பிறருக்கு இயன்றவரை நம்மாலான உதவிகளைச் செய் வதற்கே என்ற நோக்கத்துடன் உதவி செய்து வாழவேண்டும். அன்றியும் மேலுலகம் அடைந்து மேலாம் வாழ்வைப் பெற வேண்டும் என்ற என்ணமும் ஈவோனுக்கு இருத்தல் கூடாது. இதனையே பொய்யாமொழியாரும்,

> "நல்லா றெனினுங் கொளல் தீது மேலுலகம்
> இல்லெனினும் ஈதலே நன்று"

என்னுங் குறளால் வலியுறுத்திக் கூறுகின்றார்.

## ஆய்வள்ளல்

மேற்கூறிய உயர் வள்ளற் றன்மையில் தலைசிறந்தவனே வள்ளல் ஆய். வள்ளற்றன்மையோடு உயர் மனநிலையும்

உடையான். சிறப்புடைமெய்ஞ்ஞானி. தூய்மையானஉள்ளமும் எண்ணமும் உடையான். இன்னேரன்ன எழில்மிகு குணங்களுடையான் ஆய் என்பதை, ஆயைப்பற்றி உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் புறநானூற்றில் சிறப்பித்துப் பாடியுள்ளமை கொண்டு அறியலாம். அச்செய்யுள்,

" இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்
சான்ரூேர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே."

என்பதாம். குறளாசிரியர் " மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று " என்று கூறியுள்ளார். ஆயோ அப்பொன்மொழிக்கேற்பச் சான்ரூேர் சென்ற நெறியிலேயே தானும்சென்று தனது வள்ளன்மையைச் செய்துவந்தான் என்று குறிப்பிடுகின்ருர். ஆக வள்ளற்றன்மை என்ருல் வரையாது கொடுத்தலேயன்றி ஒருபயன் கருதியும் கொடுக்கலாகாது என்னும் பொருளும் படுகின்றது. நாம் ஒருபயனையும் நாடாது வரையாது வழங்கிஞல் வழங்கியதன் பயனை அடைத்தே தீருவோம். இதுநோக்கியே ஔவையாரும், " ஐயமிட்டுண் " என்று கூறியுள்ளார் போலும்.

ஔவையார் மேலே கூறியவற்றுடன் நில்லாது பணத்தைத் தேடிச்சேமிப்பவருக்கும் ஒரு அறம் கூறுகின்ருர். என்ன அறம்? நாம் பணத்தை மிகமிக முயன்று தேடினுலும் அப்பணத்தின் பயன் பிறருக்கு உபகாரஞ்செய்து மகிழ்தற் பொருட்டே என்று கூறுகின்ருர். எவ்வாறெனில்,

" பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். "

என்றல்லவோ கூறுகின்ருர்? இதினின்று என்ன தெரியக் கிடக்கின்றது? பிறவியெடுத்ததன் பயன் பணத்தைத் தேடிப் பிறருக்கு உபகரித்தலன்ருே வேண்டும் என்று தெரிகின்றது. இப்பாட்டினை நம்நாட்டு மக்கள் யாவரும் மிக இளமைக் காலத்திலேயே பயிலுகின்ருர்கள். பயின்றபடி நடக்கின்ருர்களா? சற்று ஆய்ந்து பார்த்தால் ஐயமே. திருவள்ளுவர் என்ன கூறுகின்ருர்?

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்றன்றோ கூறுகின்றார்.

**வள்ளல்கள்**

வள்ளல்களாவோர் எழுவர். அவராவார் :- பாரி, ஓரி, மலையமான், எழினி, பேகன், ஆய், நள்ளி என்னும் எழுவர் களே. இவ் எழுவர்களையும் கடையெழு வள்ளல்கள் என்று சங்கநூல்கள் குறிக்கும். இவர்கள் அக்காலத் தமிழ்நாட்டு மூவேந்தர்களிடம் குறுநில மன்னர்களாயிருந்து நாடாண்டவர் களாவார்கள்.

**ஆய்**

இவ்வள்ளல் மேற்கூறியகடையெழுவள்ளல்களில்ஒருவன். இவன் பண்டைய தமிழ்நாட்டு இருவகை வேளாளருள் உழுவித்துண்ணும் வேளாளர் மரபைச் சேர்ந்தவன். அக்காலத் தமிழரசர்களாற் கொடுக்கப்படும் வேள் என்னும் பட்டத்தைப் பெற்றவன். இவன் வேளிர் குலத் தலைவன் என்பதை, " மாவேள் ஆய் " என்றும், " தேர் வேள் ஆய் " என்றும் குறிப்பிட்டிருக்கும் புறநானூற்றடிகளே போதிய சான்றாய் வலியுறுத்தும்.

**ஆயது நாடும் ஊரும்**

இவனைப் பொதியின்மலைத் தலைவன் என்று சங்கநூல்கள் பல இடங்களில் சிறப்பித்துக் கூறுதலால் இவன் பொதிய மலையைச் சார்ந்த பாண்டிநாட்டினனாக இருக்கலாமென்று ஒருவாறு யூகிக்கலாம். இவ்வள்ளலது ஊர் பொதியின்மலை யருகேயுள்ள ஆய்குடி. இதனை ஆய் அண்டிரன் என்றும், அண்டிரன் என்றும் புறநானூற்றில் குறிப்பிடுவது கொண்டு உணரலாம். இவையன்றி வேறு இவன் நாட்டினைப்பற்றியோ, ஊரினைப்பற்றியோ அறிவதற்குப் போதிய சான்று ஒன்றும் கிடைத்திலது.

 692

## அரசவையும் நாளோலக்கமும்

ஆய் வள்ளலின் நாளோலக்கம் எக்காலத்தும் மகிழ்வாக வும், இரவலர்க்குத் தாம் தாம் வேண்டியவற்றை ஈதலில் பெரு மகிழ்ச்சியுடையதாகவும் விளங்கிற்று என்பதனை நற்றிணைப் பாடலால் நாம் அறியலாம். எவ்வாறெனில் புன்னை மரத்தின் பெரிய கிளையிலே புதுவதாக வந்து தங்கிய நாரையின் ஒலி, ஆய் என்றும் வள்ளலது மகிழ்வுடைய நாளோலக்கத்திலே இரவலர் தாம் பரிசிலாகப்பெற்ற அலங்காரமமைந்த அழகிய தேரின் ஒலிபோன்றிருந்தது என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை,

"கருங் கோட்டுப் புன்னை குடக்கு வாங்கு பெருஞ்சினை
விருந்தின் வெண்குரு கார்ப்பின் ஆஅய்
வண்மகிழ் நாளவைப் பரிசில் பெற்ற
பண்ணமை நெடுந்தேர்ப் பாணியி னொலிக்கும்."

என்ற பாடலினைக் கொண்டு அறியலாம்.

## அரண்

"கழறொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
ஆடு மகள் குறுகி னல்லது
பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே."

என்று மோசிகீரனார் இவ்வள்ளலின் நாட்டரணைப்பற்றி மிகச் சிறப்பித்துக் கூறுதலால், இவ்வள்ளல் இயற்கையாகிய வலிய மைந்த மலையரண் வாய்க்கப்பெற்ற நாட்டினையுடையவனாக இருந்துள்ளான் என்பது விளங்கும். அத்துடன் ஆஅய்க்கு ஒரு சில பகைவர்களும் இருந்துள்ளார்கள் என்பதையும் மேற் கூறியவைகளைக் கொண்டு ஒருவாறு யூகிக்கலாம்.

## ஆயின்போர்

இவ்வள்ளலின் போரைப்பற்றிச் சிறப்பாக ஒன்றுங் காணப் படவில்லை. ஆயினும் இவன் கொங்குநாட்டானோடு போர் புரிந்து, அவனைப் புறங்காட்டி மேல் கடற் கண்ணே ஓடச் செய்தான் என்று 130- ஆம் புறப்பாட்டுக் கூறுவதால் இவன் கொங்குநாட்டானோடு போர் புரிந்து வெற்றி பெற்றுள்ளான் என்ற அளவில் நாம் இவனுடைய போரைப்பற்றி அறியலாம். இதனைக், "கொங்கர்க் குடகட லோட்டிய ஞான்றை" என்றும் புறநானூற்றடி வலியுறுத்தும். (தொடரும்)

694

வாழ்வியல்

# உலகம் வாழ்வது எதனால்?

வித்துவான், திருமதி. சிவ. மீனாட்சிசுந்தர சிவை அவர்கள்

சென்னை,

பாண்டிய மன்னருள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியவன் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் மன்னன். அவன் செங்கோல் ஓச்சி உலகையாளும் பணியை மேற்கொண்டிருந்தும், ஓய்வு நேரங்களில் சோம்பலின்றிப் பல கலைகளையும் பயின்று புலமை மிக்கவனாக விளங்கியிருந்தான். இவ்வுலகம் யாரால் வாழ்கின்றது என ஓர் ஐயம் அவனுக்குத் தோன்றிற்று. இது கருதிச் சிந்தித்து, சிந்தித்து அதன் உண்மையை உணர்ந்தான். அவ்வுண்மை ஒரு கவியாக வெளிவந்தது. அக்கவியின் பொருள் இதோ பாருங்கள்!

தேவர் தம் அமிழ்தமே கிடைத்துவிட்டது. அது மிக இனியது. கிடைத்தற்கு அரியது. எனவே அதனைப் பிறர்க்கு அளிக்காமல் தாமே தனித்து உண்ணத் தோன்றும். ஆனால் அங்ஙனம் உண்ணாத பிறரிடத்தும் வாழ்விலும் எவ்வகையான வெறுப்புக்கொள்ளமாட்டார். பிறர்க்கு வரும் துன்பங்கண்டு அவர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார். அத்துன்பம் நீங்கும் வரையில் உறக்கமும் கொள்ளார். புகழ்தரும் நற்செய்கையாயின் உயிரையும் பொருட்படுத்தாது கொடுத்து உதவுவார். பழிதரும் தீயசெய்கையாயின் உலகமுழுதும் தமக்குரிமையாகக் கிடைப்பினும் பொருட்படுத்தாதும் அதைச் செய்யாது நீங்குவார். சோர்வுகொள்ளார். தமக்காக முயல்கின்ற தன்னலம் இல்லாதவர். பிறர்நலத்திற்காகவே வலிய முயற்சியும், உழைப்பும் கொண்டு தொண்டாற்றுபவர். அத்தகையர் ஒரு சிலரேனும் இவ்வுலகில் இருப்பதால்தான் இவ்வுலகம் நிலை பெற்று வாழ்கின்றது. இதோ அந்தப் பாடலையே நேரே சுவையுங்கள்.

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதென
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்

695.

துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ(து) அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே." (புறம். 182.)

"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை."

என்பது திருவள்ளுவர் வாக்கு. அன்பு, அறம், வீரம் முதலியன உடையோராய் இகழ்ச்சியடையாது, புகழ்ச்சிமலிந்தோராய், சோர்வின்றித் தமக்கென வாழாப் பிறர்க்குரியாராய், முயற்சி யுற்று வாழும் மக்கள் வாழ்வாலேயே உலகம் வாழ்கின்றது என்ற உண்மையை உணர்ந்த பெரியோன் பாண்டியன். அக்கருத்தை நாமெல்லாம் அறிந்து அவ்வாறே நடக்க அதனை நமக்கு விரித்துரைத்தான். என்னே! அம் மன்னனின் மனப் பண்பு! இத்தகைய மன்னனின் ஆட்சி எவ்வாறு இருந்திருக் கும்? அந்நாட்டு மக்கள் எவ்விதப் பண்புடன் இருந்திருப்பர்? இதனால் நம் முன்னோர்களாகிய தமிழர் உள்ளம் எந்நிலையில் இருந்ததென்பது விளங்குகிறது.

அன்பினால் யாரையும் வழிப்படுத்தலாம் என்னும் உண் மையை அறிந்து, அவ்வாறு நல்வழிப்படுத்தும் அருங்குணம் படைத்தவர்கள் நம் முன்னோர்கள். அவ்வாறே நாமும் எல்லா ரிடத்தும் அன்புகொண்டு அன்புடன் பழகிவரவேண்டும். அன்பு பெருகி முதிர்ச்சியடைந்த பின்புதான் அது அருளாக மாறும்.

பிற உயிர் மாட்டு அன்புகொண்டால்தான் தமக்கென வாழாப் பிறர்க்குரியாராய் வாழமுடியும். இதனை அறுபான் மும்மை நாயன்மார்களிடத்துக் காணலாம். மனைவியைத் தம்மிடத்தே வந்த சிவனடியார்க்கு ஈந்த இயற்பகைநாயனாரும், மகளின் கூந்தலை அறுத்துத்தந்த மானக்கஞ்சாறநாயனாரும், மங்கிலியத்தைக் கொண்டு குங்கிலியம் வாங்கிய மாதவக் கலயரும், பகல் விதைத்த செந்நெல்லைப் பாதியிரவில் கொணர்ந்து சமைத்த இளையான்குடிமாறநாயனாரும் இதற்குச்

696



சான்றுவார்கள். இவர்கள் தாம் தேடிய பொருள்கள் பிறர்க்கெனவே எண்ணி வாழ்ந்த பெரியார்கள் ஆவர். உயிரின் மாட்டுள்ள அன்பின்மிகுதியால் ஒரு புருவின் பொருட்டுத் துலையேறிய சிபிச்சக்கரவர்த்தியும், தேவர்பொருட்டுத் தம் முதுகந் தண்டினைக் கொடுத்த ததீசிமுனிவரும், தம் உடலையே பிற உயிருக்குக் கொடுத்த பெருமைமிக்கார் ஆவர்.

சிறந்த மக்கட்பிறப்பாக வாய்த்தது பகைவனுக்கும் அன்பு செய்தற்பொருட்டேயாகும். பகைவனுக்கு அன்பு செய்யின் அவன் திருந்துவான். அன்புசெய்தவனாலேயே ஆண்டவனை அடையலாம். பிற உயிர்க்குச் செய்யும் அன்பெல்லாம் ஆண்டவனுக்கு - சிவத்திற்குச் செய்வதாகும். அதனாலன்றோ திருமூலரும்,

"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

என்று அருளினார்.

இவ்வரிய மானிடயாக்கையைப் பெற்றது பிற உயிர்க்கு அன்பு செய்வதற்கேயாம். நம் இன்பத்திற்குக் காரணம் அன்பு. பிறரிடம் அன்பு செலுத்துவது என்பது பிறர் இன்புறுவது கண்டு நாம் இன்புறுவதாகும். ஒரு மனிதனுக்கு எலும்பாக உள்ளது அன்பு. அது இல்லையேல் எலும்பில்லாதவனாகின்றான். அன்பு செய்யாததினால் எலும்பற்ற (உறுதியற்ற) உடம்புடையவனாகி அறத்தின் முன்னிலையில் துன்புறுகிறான். உள்ளத்திலே விளக்கமுற்று இருக்கவேண்டிய அன்பு இல்லாமல் உயிர்கள் வாழ்வது வலிய பாறையிடத்துப் பால் வற்றிய கொம்பு துளிர்விட்டதை ஒக்கும். அன்பில்லாத உயிர் வாழாது. வாழ்க்கை என்பது பிறரை வாழ்விப்பதாகும். அதுபோல் செல்வம் என்பதும் பிறரைச் செல்வராக்குவதாம். பிறர்க்குச் செய்யும் நன்மைதான் நம் வாழ்வாகும்.

உடம்பினது உள்ளுறுப்பாகிய அன்பு இல்லாதவர்கள் புறத்துறுப்பாகிய இடம், பொருள், ஏவல் முதலியன இருந்தும் அவை இல்லாதவர்களேயாவர். இடம், பொருள், ஏவல் எல்லாம் பொருந்தி இருப்பினும் நன்மை புரிவதில் ஆர்வம்

ஆண்டவனிடத்தும் ஏனைய உயிர்களிடத்தும் அன்பு முதலியன் இல்லையேல் பிறந்ததன் பயனில்லை. தேடாது நம்உள்ளே இருக்கும் அன்பைக் கொள்ளுவதுதான் பிறவிப்பயனைத்தரும். அதனை விடுத்துத் தேடும் புறத்துறுப்பால் யாதொரு பயனும் இல்லை. அன்பில்லாதவர்கள் பிணத்திற்கு ஒப்பானவர்கள். உயிர் இருப்பதற்கு அறிகுறி அன்பிருப்பதேயாகும். உயிர் உடலோடு நலமுடன் பொருந்தி இருக்கவேண்டுமானல் ஆண்டவனிடம் அன்பு இருக்கவேண்டும். அதற்குப் பிற உயிர்களுக்கு அன்பு செய்யவேண்டும். "ஆருயிர்களுக் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்" என்பது கருணை வள்ளலாகிய இராமலிங்க அடிகளது வேண்டுகோள்.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே."

என்பது தாயுமான அடிகள் அருள்வாக்கு. உலகம் வாழ்வது தன்னலமற்ற அன்பின் பெருக்காலேயேஆகும்.

---

## EXTRACTS FROM THE VISITORS' BOOK

Ever since I had the privilege of meeting His Holiness the Pandarasannadhi at Dharmapuram two months ago I was eager to visit the two famous temples at Shiyali and Vaideeswarankoil. This wish I am happy to state has now been fulfilled. I had darsan at Shiyali yesterday and I had darsan here today. I am very grateful to the devasthanam authorities to have made it so easy for me to have so excellent a darsan of all the deities installed in this famous shrine. I pray to god that these seats of our religion aid the revival of faith in god and his infinite goodness and mercy; so that a wave of peace may spread throughout south India so full of such fine temples which the Alwars have made so famous by their visits and celestial songs.

Vaithiswarankoil,
24—5—'55

(Sd.) M. A. PARASURAMAN,
Personal Assistant to District
Suberintendent of Police.

698

# இன்சொல்லும் வன்சொல்லும்

திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தம் அவர்கள்

இந்தத் தலைப்பைக் கண்டவுடன் இன்சொல் எது? வன்சொல் எது? என்று அறிய நம் உள்ளம் அவாவும். மனமகிழ்ச்சியினின்றும் தோன்றுவது இன்சொல். அதற்கு மாறுய நிலையில் தோன்றுவது வன்சொல். இயல்பாகவே இன்சொல்லுடையவர்களாக வாழவிரும்புவது அறிவுடைமை. செம்பொருள் கண்ட பெருமக்கள் இன்சொற்களையே பேசுவார்கள். காரணம் அச்சொற்கள் அறத்தையுடையன என்பதை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். இக்கருத்தை உலக மறையளித்த பெரு நாவலர் அறிவிப்பதை நோக்குமின்! தருமத்தின் உண்மையை உணர்ந்தவர் வாயில்நின்றும் வஞ்சகமில்லாமல் அன்போடு கலந்துவரும் சொற்களே இனிய சொற்களாகும்.

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" குறள் 91.

உலகில் பொய்யென்று ஒன்று தோன்றியதால்தான் உண்மை என்பது எளிதில் உணர முடிந்தது. சாதாரண கமலங்களைப் (கண்ணுடிக்கற்கள்) பார்க்கும் பொழுதுதான் வயிரத்தின் உயர்வு தெற்றெனத் தெரிகிறது. நயவஞ்சக பாதைகளைக் காணும்பொழுதுதான் பழகும்பொழுதுதான் பண்புடைய பெருமக்களின் நேரிய தன்மை புலனுகின்றது. அதுபோல வன்சொற்கள் விரவி மக்களிடையே நிலவுவதாலேயே இன்சொற்களின் உயர்வு பெரிதெனத் தெரிகிறது. இன்சொற்கள் மக்களை வாழவைக்கின்றன. வன்சொற்கள் மக்களை வீழவைத்து மாய்க்கின்றன. இன்சொற்கள் நலனைப் பெருக்குகின்றன; வன்சொற்கள் தீமையை நிரப்புகின்றன. இன்சொற்கள் பேசி வாழ்வதால் வாழ்நாளும் வளர்கின்றது. வன்சொற்கள் பேசி வாழ்வதால் வாழ்நாளும் தேய்பிறையென்னத் தேய்கின்றது. வாழ்நாள் வளரத்தான் எல்லாரும் அவாவுவர். அங்ஙனம் அவாவுதலுக்கேற்ப இன்சொற்கள் பேசும் பழக்கம் கைக்கொள்ளின் நலம் பயக்கும். அது வளர்வதாக!

ஒன்றை நல்லதற்கும் பயன்படுத்தலாம். தீயதற்கும் பயன்படுத்தலாம். மனப்பான்மையும், சூழ்நிலையும் இருத்தற்கேற்ப

ஒன்றுநன்மை அல்லது தீமையைப்பயக்கும். அட்டூன்விற்பவன் கையில் இருக்கும் கூரிய இரும்புக்கத்தியினை நோக்குங்கள்! மருத்துவரிடம் வெப்புக்கட்டியைச் சீர்செய்ய வைத்திருக்கும் மெல்லிய கூரிய அழகு பொருந்திய இரும்புக் கத்தியினை நோக்குங்கள்! இரண்டுகத்திகளும் எதனுல் செய்யப்பெற்றன? இரும்பால் அன்ரூே! இரும்பேயாயினும் அவ்வப்பொருள்கள் செய்யப்பட்ட உருவிற்கும், பயன்படுத்துபவர் தன்மைக் கேற்பவும் அமைகின்றன அல்லவா? இன்சொற்களையும் நலம் பயக்கும் முறையிலும் பயன்படுத்தலாம்; தீமைபயக்கும் நிலையிலும் பயன்படுத்தலாம். இன்சொல்பேசி, சிவவேடப் பொலிவுடன் சென்று மெய்ப்பொருள்நாயனுரை மாய்த்தவன் ஒரு பாதகன் என்பதை இத்திருத்தொண்டர்புராணம் புகல் வதை அறிகிரூேம். அதனின்றும் நாம் உணர்வது என்ன? இன்சொற்கள்பேசி உயிரையும் மாய்க்கலாமென்பது அல்லவா? அதனுல் நலம்பயக்கும் முறையில் இன்சொற்கள் வழங்கு வதுதான் முறை. அதுவே நலனும் பயக்கும் என்பதை அறிக. இன்சொற்கள் மெத்தனவாக இருப்பன; வன்சொற்கள் வெட்டனவாக இருப்பன. வன்சொற்கள் பேசி வாழ்வது பஞ்சுப்பொதியில் அம்பைப் பட்டுருவச்செய்வதை நிகர்க்கும் இன்சொற்பேசிவாழ்வது, இருப்புப்பாறைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடுவதுஒக்கும். அதனுல் இன்சொற்கள் எவ்வளவு வலிவுடையும் என்பதைச் சிந்தியுங்கள்.

> வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
> பட்டுருவுங் கோல்பஞ்சில் பாயாது—நெட்டிருப்புப்
> பாருக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
> வேருக்கு நெக்கு விடும்.

இன்சொற்கள் நலம்விளையும் முறையில் பயன்படுத்தினுல் சிறந்தது என்பதை உணர்ந்தோம்.

தழைத்த இனியஒருபூங்கா. அதனிடத்து நாம்செல்வதாகக் கொள்வோம். பசியோ வருத்திவாட்டும் நேரம். அப்பூங்காவில் தழைத்த இனிய பழமரங்கள் உள்ளன. அம்மரங்களில் பழங்கள் ஒருபாலும், காய்கள் ஒருபாலும் தொங்கிக்கொண் டிருக்கின்றன. அதுநேரம் பழத்தை விரும்புவோமா? காயை விரும்புவோமா? பழத்தைத்தானே விரும்புவோம்! பொதுவாய்

அறிவு வளரப்பெருத பச்சிளங்குழந்தையுங்கூட பழத்தைக் காட்டி வாங்கித்தரவேண்டும் என்று அழுகிறதே! புசிக்கஇனிக்கும் பழத்தை யொத்துப் பேச இனியசொற்கள் இருக்க, தின்னக் கசக்கும் காயை விரும்புவது ஏனே? அறிவுடையோர் விரும்பார்.

"இனிய வுளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று." (குறள். 100.)

இன்சொல் அறத்தை வளர்க்கும்; வன்சொல் பாபத்தை மிகச்செய்யும். இனிய சொற்களால் உலகத்தை ஆளலாம். வன்சொல்லோ உலகைமாய்க்கும். ஆக்கம் நன்ரு? அழிவு நன்ரு? ஆக்கந்தானே நன்று! அவ்வாக்கத்திற்குத் துணைசெய்வதன்றே இன்சொல்?

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்." (குறள். 96.)

எவ்வளவுதான் ஒருவன் செல்வம் பெற்று வாழ்ந்தாலும், எவ்வளவுதான் கல்வி அறிவு ஒருவன் பெற்றிருந்தாலும், ஒருவனுக்கு பணிவு மெத்த அவசியம். விளைச்சலிலுள்ள நெற்பயிரை உற்று நோக்குங்கள்! அது நம் பாரதத்தின் துரியோதனனைப் போல நிமிர்ந்தா நிற்கின்றது? அல்லவே! கற்றுணர்ந்தடங்கிய அறிஞர் பெருமக்களைப்போல, தலையைக் குப்புறக்கவிழ்ந்து சிந்திப்பது போலத் தோற்றுகிறது. அதனுல் பணிவுதான் ஒருவனுக்கு அணிகலனுக விளங்குகின்றது. பொன்மலர் பெருமையுடையதே! இருப்பினும் அதற்கு நறுமணமும் சேர்ந்துவிட்டால் அதன் பெருமைக்கு அளவுண்டா? அதுபோலப் பணிவு ஒருவர் பெற்றிருப்பின் அது ஒரு நல்லணியே! அதனுடன் இன்சொல் என்பதும் இயைந்து நின்ருல், அது மேலும் ஒரு பேரணிகலனுகி உடையவரை உயர்வடையச்செய்யும் என்பது திண்ணம்.

"பணிவுடையன் இன்சொல னுதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற." (குறள். 95.)

முன்னர் இன்சொல் உலகையாளும் என்று கண்டோம். அது எப்படி? சொல்லும் ஆற்றல் வாய்த்தவர்க்கு, உலகமக்களைத் தங்கள்பால் ஈர்த்துக்கொள்ளும் இயல்பு உண்டு. மக்களுக்கு உணர்ச்சி மிகுந்த சொற்களை ஊட்டி, தாங்கள் சொல்லும் சொல்லிலே நம்பிக்கையை நாட்டி, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல்களுள் சிறந்த சொல்லாற்றல் பெற்ருர்க்கு

701

உண்டு. சொல்லாற்றலை ஆக்கவழிக்கும் பயன்படுத்தலாம்; அழிவுவழிக்கும் பயன்படுத்தலாம். ஆக்கவழிக்குப் பயன்படுத்தும் சொல் இனிமை பொருந்தியதாகவே இருக்கும். இனிமையில் தோன்றும் சொல் இன்பத்தையே வளர்க்கும். நிறைந்த இன்சொற்களைக் கூறிப்பிணிக்கும் தகைமைபெற்றவர்கள்கூறும் சொற்படி உலகமக்கள் நடக்க அவாவுவர் என்பதே மாதாநுபங்கியின் கருத்து.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்." (குறள். 648.)

உலக மக்கள் அனைவரும் இன்சொல் பேசப் பழகவேண்டும் என்பதுதான் வள்ளுவரின் குறிக்கோள். இன்சொல் பேசும் பொழுது இனிமையையே பயக்கின்றது. வன்சொல் பேசுங்கால், அச்சொல் சினத்தீயினின்றும் பிறக்கின்றது. கோபம் வருங்கால் உடற் சூடேறுவதோடு அல்லாமல், நரம்புகள் தளர்ச்சி அடைகின்றன. அத்தகைய நிலையில் பிறக்கும் வன்சொல், குளிர்ச்சியாகக் கருணைபொருந்தியதாக இருக்குமா? இருக்காது! கந்தக அமிலத்தில் இட்ட செப்புத்துண்டு படும் பாட்டை என்னென்பது? வன்சொல் பேசும்போது உள்ளம் அத்தகைய பாட்டையே படுகின்றது. அதனல் வன்சொல் எவ்வளவு தீமை உடையது என்பதை உன்னுங்கள்! இன்சொல் வாழ்க! வன்சொல் வீழ்க!

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?" (குறள். 99.)

இன்சொல் பயனிலாச் சொற்களைக் கொண்டதாக இருக்காது. பயனுடைய சொற்களைக் கொண்டதாக இருக்கும். பயனிலாச் சொற்கள் பேசும்பொழுது, வன்சொற்கள் வளர வழியுண்டாகும். என்ன பேசவேண்டும்? பேசினல் என்ன விளையும்? என்பதை எண்ணிப் பேசவேண்டும். அதுதான் நலத்தை நல்கும். பறை அடிப்பதை ஒப்பப் பேசும் பேச்சுதான் வன்சொல் வளர்ப்பிற்குத் தாய். ஆய்ந்து, அறிந்து, உணர்ந்து பேசுங்காலத்து இன்சொல்லின் திறனும் மிகுகின்றது. அதனல் அதற்கேற்ப நடத்தலே பெருமைதரும். பயனிலாச் சொற்களை அறிஞரானோர் பாராட்டமாட்டார். பயனிலாச் சொற்களைப் பேசுவோரை, அறிஞரானோர் பதடி என அழைப்பர்.

"பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்." (குறள். 196.)

702

வடமொழி

# குமாரசம்பவம்

வித்துவான், சிரோமணி, திரு, சபேசன் அவர்கள்
தமிழாசிரியர், ஆதீனக் கீழைக்கலை நடுநிலைப்பள்ளி, தருமபுரம்.

குமாரன் - முருகன். முருகனின் தோற்றத்தைக் கூறும் நூல் இது. இதை வடமொழிப் புலவரான மகாகவி காளிதாசர் என்பவர் இயற்றியுள்ளார். வடமொழியிலுள்ள இலக்கியங்களுள் இது ஒரு சிறந்த இலக்கியமாகும். இது பாக்களால் அமையப்பெற்ற நூல். இதில் பதினேழு சருக்கங்கள் உள்ளன. இந்நூலுக்குப் பலர் உரை எழுதியிருக்கின்றனர். அவற்றுள் மல்லிநாதர் என்பவரால் எழுதப்பெற்ற உரையே மிகச் சிறந்த உரையாகும்.

இவருடைய வரலாற்றைப் பலர் பலவிதமாகக் கூறுவர். பாக்களால் அமைந்த நூல்களில் காளிதாசரின் நூல்களே முற்பட்டன எனப் பலரும் கருதுகின்றனர். காளிதாசர் அஸ்வகோஷன் இவ்விருவரில் காலத்தால் முற்பட்டவர் யார் என்பதே எல்லோருக்கும் ஏற்படும் ஐயமாகும். காலத்தால் எவர் முற்பட்டவராயிருப்பினும் இருவருடைய நூல்களிலும் ஒப்புமைப் பகுதிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மேலும், 'சக' ஆண்டை ஏற்படுத்திய விக்கிரமாதித்தனுடைய அவைக் களப் புலவராகக் காளிதாசர் இருந்தார். ஆதலின் காளிதாசர் விக்கிரமாதித்தன் காலமாகிய கி. பி. முதல் நூற்றுண்டில் இருந்திருக்கவேண்டும் என்று சர். வில்லியம் ஜோன்ஸ் என்பவர் கூறுகின்றூர். வேறு சிலர் இவருடைய காலத்தைப்பற்றிச் சில மாறுபாடான கருத்துக்களைக் கூறுவதால் இவர் கி. பி. ஒன்று முதல் நான்கு நூற்றுண்டுகளுக்குள் இருந்திருக்கவேண்டும் என அறியக்கிடக்கிறது.

இவர் எங்குப்பிறந்தார், எங்குவளர்ந்தார், எங்குவாழ்ந்தார் என்ற செய்திகளை ஒருவரும் வெளிப்படையாகக் கூறவில்லை. இவர் தம் நூல்களில் உச்சயினியைப் பல இடங்களிலும்

எடுத்துச் சிறப்பித்துக் கூறுவதால் இவர் வாழ்வின் பெரும் பகுதியை உச்சயினி என்ற ஊரில் கழித்தார் என்று கூற இடம் உண்டு.

இவர் இறைவனை அம்மையப்பர் வடிவத்தோடு அதாவது அர்த்தநாரீசுவர வடிவத்தோடு பலயிடங்களிலும் எடுத்துக்கூறி வழிபடுவதால் இவர் அம்மையப்பர் உருவில் இருந்து உலகைக் காத்தருளுகின்ற இறைவனையே வழிபடு கடவுளாகக் கொண் டுள்ளார் என்பதைத் தெளிவாய்க் கூறலாம்.

'சொல்லும் பொருளும் ஒன்றியிருப்பது போன்று சேர்ந் திருக்கின்ற உலகின் தாய் தந்தையர்களாகிய பார்வதி பரமேசு வரர்களை வழிபடுகின்றேன்' என்று கூறுவதிலிருந்து நன்கு உணரலாம்.

காளிதாசர் தாம் கண்டு அநுபவித்த ஒன்றைப் பிறரும் படித்து உணரும் வகையில் நூல் இயற்றும் திறமுடையவர். உவமையை எடுத்துக் கூறுவதில் காளிதாசருக்கு ஒப்பாக யாரையும் குறிப்பிடமுடியாது. இதையொட்டியே வடமொழி யில் 'உவமை காளிதாசருக்கே உரிமை' என்ற ஓர் சொற் ளெடர் காணப்படுகிறது. உவமையைக் குறிப்பாகவும் வெளிப் படையாகவும் கூறுவதோடு, ஓர் உவமையைக் கூறி அது சிறிது பொருந்தவில்லை என்று மற்றோர் உவமையைக் கூறுதல் இவரது வழக்கமாகும்.

இமயத்தின் மகளாகப் பிறந்த உமையை (பார்வதியை) முற்பிறப்பில் கற்ற கல்விதான கலந்தடைந்தது என்று கூறப் புகுந்த புலவர் அதைத் தக்க உவமை மூலம் விளக்குகின்றார். 'மழைக் காலத்தில் குளங்களில் நீர் கலங்கியிருப்பதால் அவை களை விட்டு நீர் தெளிந்துள்ள இடமாகிய கங்கையை அன்னங் கள் அடைவதுபோன்று, பார்வதியைக் கல்வி வந்தடைந்தது.' (என்று கூறி அது சிறிது பொருந்தாத காரணத்தால் மற்றோர் உவமையை எடுத்துக் கூறுகின்றார்.) இராக் காலத்தில் இயற்கையாகவே ஒளிவிடுகின்ற மருந்துச் செடிகள் (பகற் காலத்தில் ஒளியற்றிருந்து) இராக்காலத்தில் தன்னுடைய ஒளி யைத் தானகவே பெறுவது போன்று பார்வதி முற்பிறப்பில் கற்ற கல்வி யைத் தானே அடைந்தாள் என்று கூறுகின்றார்.

இங்கு, கல்வி ஒருவரை எழு பிறப்பிலும் தொடரும் என்று கூறுகின்ற வள்ளுவர் கூற்று வலியுறுத்தப்பெறுவது தெளிவு.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து." (குறள்.)

இமயமலையை வருணிக்கின்ற புலவர் இயற்கையாகவே அசைந்து செல்கின்ற காற்று, மலையில் உள்ள மூங்கிலின் துளையினுட் புகுந்துசெல்கிறது. அவ்வாறு செல்லும்போது ஒருவித ஓசையை எழுப்புகிறது. அதை மற்றொன்றுக்கு ஒப்பிடுவது போற்றத்தக்கதாகும். 'மூங்கில் துளையில் புகுந்து வெளிவருகின்ற காற்று அங்கு உலவிக்கொண்டிருக்கும் கின்னரர்கள் பாடுகின்றபாட்டிற்குச் சுதிபோடுவது போன்றுள்ளது' என்கிறார். இமயமலையில் வேடர்கள் இறந்த யானையைத் தேடிச்செல்கின்றனர். தேடியும் காணமுடியவில்லை. பிறகு அதைக் கொன்ற சிங்கத்தின் அடியால் யானை கிடக்கும் இடத்தை அறிகின்றனர். அதைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

பனியினால் சிம்மத்தின் காலில் உள்ள குருதி கழுவப்பட்டு விட்டது. ஆனால் அதன் நகக்கிடுக்குகளிலிருந்து விழுகின்ற முத்துக்களால் (யானையின் மத்தகம் முத்து பிறக்குமிடம் என்று கூறப்படும்) யானை இறந்து கிடக்கும் இடத்தை அறிகின்றனர்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு." (குறள்.)

என்று இல்வாழ்க்கையின் பயனாக நன்மக்கட்பேற்றைக் கூறுகின்றார். அதேபோன்று காளிதாசரும் இல்லறத்தார்க்கு வேண்டிய பல அரிய செய்திகளை எடுத்துக் கூறிப் பின்னர் இறைவன் இறைவி ஆகிய இவ்விருவருடைய இல்வாழ்வின் பயனாகக் குமாரனின் தோற்றத்தையும் கூறுகின்றார்.

இவர் ஓரிடத்தில் இறைவனைப்பற்றி நாராயணன், நான்முகன், உருத்திரன் என்ற மூன்று நிலைகளினாலும் தன் வல்லமையை வெளியிட்டு ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழிலையும் தானே செய்பவன் என்று கூறுகின்றார். இவர் தாம் கொண்ட சமயம் அல்லாதன ஆகிய சமயங்களில் வெறுப்புக் கொண்டவரல்லர் என்றும் தெரிகிறது. இவ்வாறு இவர் சமயப்பற்றிலும் பல நூல் பயிற்சியிலும் இயற்கையாக உள்ள ஒன்றை அழகுபடுத்திக் கூறுவதிலும் சிறந்து விளங்கியவர் என்று தெரிகிறது.

705

தொடர் கதை

# மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

ஆம்! இந்தக் காட்சியை எழிலோவியமாகத் தீட்டியிருக்கிறான் ஒரு சாவாக் கலைஞன். அந்தப் பெண்ணின் முகத்தில் தான் எவ்வளவு வனப்பு! நெளிந்தோடும் புன்னகையும், நீண்ட கருவிழிகளும், அலை அலையாய்க் கருங்குழலும், அழகுதரும் கூந்தல் ஒப்பனையுமாக - அழகுத் தெய்வமாய் விளங்கினின்றாள் அந்த ஓவிய அழகி. அவன்......எவ்வளவு கட்டழகு! அவளது அழகை அள்ளிப்பருகும் அவன் விழிகள்! விழிகளிலே விளங்கிய காதல்! ஒவ்வொரு அசைப்பிலும் உள்ளமும் உடலும் அழியாத ஆண்மை உடையவன் என்பதனைக் கலைஞன் எடுத்துக்காட்டியிருந்தான்.

மன்னனும் அரசியும் நீண்டநேரம் அவ்வோவியத்தில் ஈடுபட்டுநின்றுவிட்டனர். இளங்காதலை எத்தனை அழகாகத் தீட்டியிருக்கிறான் அந்தக் கலைஞன்! என்று எண்ணி எண்ணி வியந்தது மன்னனின் மனம். அடுத்து அவ்வறையில் இருந்த ஒரு நிலவறைக்குள் சென்றனர் எல்லோரும். அங்கே இருந்த அந்த வேலைப்பாடமைந்த பேழையைத் திறந்தான் நிலாமுடியன்!

மன்னன் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தான்! ஏனெனில் தமிழ் அறிந்தவனல்லவா? ஆம்! அந்தப் பேழை நிறைய இருந்தவை ஏட்டுச் சுவடிகள்! தமிழ்ச் சுவடிகள்! ஒரு சுவடியை எடுத்துப் பிரித்தான் வழுதி. ‘இசைநுணுக்கம்’ என்று தலைப்பில் எழுதியிருந்தது! அவன் உடல் புல்லரித்தது.

‘அரசீ! அருமையான தமிழ் ஏடு! கிடைத்தற்கரிய கருவூலம் இந்தப் பேழை! செந்தமிழின் அமுதத்தைச் செறித்து வைத்திருக்கும் பேரின்பப் பெட்டகம் இது!’ என்று உரைத்தான் மன்னன்.

மெல்ல மண்டபத்தை விட்டு வெளியேறினார்கள் எல்லோரும். நிலாமுடியன் வாயிற்கதவைச் சார்த்திப் பூட்டிக்கொண்டிருந்தான்.

'நிலாமுடியா! இந்த மண்டபத்தில் பறம்புநாட்டு அரச பரம்பரை தோறும் தொடர்ந்து வருகிற ஒரு தந்தப்பேழை உண்டாமே! அதை நாம் பார்க்கவில்லையே?' என்று கேட்டான் மன்னன்.

நிலாமுடியனுக்கு இப்போது நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. மல்லிகைக்கு இதயமே நின்றுவிடும்போலிருந்தது. 'குப்' பென்று முகம் முழுதும் வியர்த்துவிட்டது. பாண்டியப் பெருநாட்டை ஆளும் பாராளுவேந்தன் முன்பு ஒரு பச்சைப் பொய்யைப் பேசவேண்டியிருக்கிறதே என்று தவித்தது அவன் உள்மனம். சமாளித்துக்கொண்டு பேசத் தொடங்கினான் :-

'அரசே! அந்தப் பேழையைப் பறம்புநாட்டுப் பேரரசர் இருக்கும்போதே அப்புறப்படுத்திவிட்டதாகக் கேள்வி. போர்க் காலத்தில் பகைவர் கைக்கு அகப்பட்டுவிடுமோ என்னவோ என்ற அச்சத்தில் அந்தத் தந்தப் பேழையை அரசர் அப்புறப் படுத்திவிட்டதாகச் சொல்லுகிறார்கள்! நான் அதற்குப் பின் தான் இங்குக் காவலாக அமர்த்தப்பட்டேன்!'

'அப்படியா!.....' என்று திரும்பிப் படிகளில் காலை வைத்தான் மன்னன்.

நிலாமுடியனுக்கு இப்போதுதான் கொஞ்சம் தெளிவு பிறந்தது.

'அந்தப் பேழைக்குள் என்ன இருந்ததாம்?' இது மன்னனின் அடுத்தகேள்வி. நிலாமுடியன் திடுக்கிட்டான்! இப்போது மல்லிகை பேசினாள் :-

'அரசே! அதற்குள் என்ன இருந்தது என்பது யாருக்குமே தெரியாது! அது யாருக்கும் தெரியாத ரகசியமாகவே இருந்து வந்தது.'

'நாதா! அழகு நிறைந்த அறிவுக் களஞ்சியமாக - கலைக் கூடமாக ஆக்கியிருக்கிறார்கள் இந்த மண்டபத்தை! ஆகா! என்ன வியப்பு!' என்று சொல்லித் தன் வியப்பை வெளியிட்டாள் அரசி.

'நாளைக் காலை நீயும் மல்லிகையும் பிரான்மலைக்கு வர வேண்டும்' என்ற உத்திரவைப் பிறப்பித்துவிட்டு மன்னன் பல்லக்கில் ஏறிக்கொண்டான். வீரர்கள் குதிரைகளில் ஏறி முன்னும் பின்னுமாகச் சென்றனர். மண்சாலையில் பல்லக்கு களும் குதிரைகளும் கண்ணுக்கெட்டியதூரக்கப்பால் மறைந்து போகும்வரை நின்றுகொண்டேயிருந்தனர் இருவரும்.

'மல்லிகை! சோதனையிலிருந்து பாதி தப்பியிருக்கிறோம்! பேழையைக் காப்பாற்றி இளவரசரிடத்தில் ஒப்புவிக்கும்வரை நமக்கு இனி இரவெல்லாம் பகல்தான்!' என்று கூறியவாறு குடிசையை நோக்கி நடந்தான் நிலாமுடியன். எங்கிருந்தோ ஒரு வானம்பாடி தன் இசையைத் தொடங்கியது.

பன்னிரண்டாம் அத்தியாயம்

## பொன்முடி சிக்கினாள்!

பாண்டியமன்னனின் பறம்புநாட்டுப் பயணத்தைப் பற்றியோ, பறம்பு இளவரசர் காணமற் போனதுபற்றியோ, ஒன்றும் தெரியாமல் இருந்துவந்தாள் பொன்முடி. கைப்பிடித்த காதலன் - மருதநம்பி இப்படி நாட்டைக் காட்டிக்கொடுக்க முற்பட்டிருப்பானா என்று நினைத்து நினைத்து ஏங்கினாள் அவள். நாள்முழுதும் இல்லத்துக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தாள். வெளி உலகம் அவளை வேதனை உறச் செய்துவிட்டது. இப்படி இருக்கும்போதுதான் அவளுக்குச் செய்தி தெரிந்தது :-

XX

அன்று மாலை திருக்கோயில் சென்று அங்கயற்கண்ணியைத் தொழுதுவிட்டு இல்லம் நோக்கிப் பொன்முடி திரும்பி வந்து கொண்டிருந்தாள். அப்போது ஒரு புதிய ஆள் அவளைக் குறுக்கிட்டான். குதிரைமேல் இருந்த அவனுடைய நடையும் உடையும் அவனைப் பாண்டியநாட்டான் அல்ல என்று கூறிக் கொண்டிருந்தன.

'அம்மா! நீங்கள்தானே மாவீரன் மருதநம்பியின் மனைவியார்?'

தலைநிமிர்ந்து நோக்கினாள் பொன்முடி. கண்ணீர் வற்றிக் கிடந்த அவள் கருவிழிகளுக்கு ஆற்றாமல், 'சொல்லுங்கள் அம்மா! உங்களிடம் ஒரு செய்தி தெரிவிக்கவேண்டியிருக் கிறது' என்றான் அவன்.

‘ஆம்! நான்தான்! என்ன செய்தி?’ - பரபரப்பிருந்தது அவள் குரலில்.

‘உங்கள் தந்தை நல்லான் இந்த முடங்கலை உங்களிடம் சேர்க்கச் சொன்னார். நான் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அரசியல் காரியமாக மதுரைக்கு வந்திருக்கின்றேன்? என்று கூறியவாறே ஒரு முடங்கலை அவள் கையில் கொடுத்துவிட்டுச் சென்றான் அவர்.

‘தந்தை என்ன எழுதியிருப்பாரே!’ என்ற ஆர்வம் முன் தள்ள விரைந்து இல்லம் வந்தாள் பொன்முடி. மஞ்சத்துக் கருகிலிருந்த விளக்கின் ஒளியைப் பெரிதாக்கிவிட்டு முடங்கலை விரித்துப் படிக்கலானாள் :-

‘அன்பு மகள் பொன்முடிக்கு!’

நல்லான் நல்லாசி. உன் கணவன் செய்தி தெரிந்து முதலில் வேதனைப்பட்டேன். நாட்டைக் காட்டிக்கொடுக்க முற்பட்ட அவன் நரிக் குணத்தை என்னென்பேன்! பொன்னான தாய் நாட்டுக்காகப் புலிபோலப் போராடிய பறம்பு மன்னர் வீரவேள் மருதநம்பியைச் சினங்கொண்டு தூக்கிலிடச் செய்தார் என்றும் கேள்விப்பட்டேன். உண்மையிலேயே அந்தத் தண்டனை எனக்கு உவகையையே தந்தது. புனிதமான உள்ளம் படைத்த பறம்பு மன்னர், புல்லிய உள்ளம் படைத்தவனுக்கு இதைவிட வேறென்ன இயற்றமுடியும்? ஆனால், கண்ணே! உன்னை நினைத்தபோதுதான் என் உள்ளம் பாகாய் உருகியது; தாயற்ற உன்னைக் கண்ணிமை யாகக் காப்பாற்றி, தோள்மேலும் கைமேலுமாகத் தொட்டு வளர்த்து, பாலும் தேனுமாக வேளைதோறும் உண்பித்துப் பருவம் என்ற சோலையிலே நீ பாதத்தை வைத்தபோது, உனக்கேற்ற வனைக் கண்டு உன்னை ஒப்படைக்க உள்ளம் நோக்கியிருந்த போது, மருதநம்பி குறுக்கிட்டான்! உன் மனமறிந்து அவனை உனக்கு உறுதுணைவனாக்கினேன். உங்கள் இன்ப வாழ்வைக் கண்டு உள்ளம் பூரித்து, என் வாழ்வின் இறுதி இன்பமாக முடியும் என்று எக்களித்திருந்தேன். ஆனால் பொன்முடி! உன் வாழ்வை இப்போது நினைக்கும்போது என் நெஞ்சு சின்னாபின்னமாகச் சிதறுவ்துபோன்று உணர்ந்தேன். பொன்முடி! அமைதியும் மகிழ்வும் கொண்ட பூஞ்சோலையில் புது நடை போட்ட உன் புனித வாழ்வு, ஏமாற்றம் நிறைந்த பாலைவனத்தில் எப்படிச்

செல்லுமோ என்று ஏங்கியிருந்த என் மனத்தில் இப்போது கொஞ்சம் நம்பிக்கை உண்டாகியிருக்கின்றது. என்னதெரியுமா அந்த இன்பச் செய்தி !

மருதநம்பி மனம் மாறித் திருந்திவிட்டானும். இளவரசர் பாரி அவனை மன்னித்துவிட்டாராம். இப்போது மருதநம்பி பறம்பு இளவரசர் மெய்க்காப்பாளனும். ஆனல் தலைமறைவாக இளவரசர் பாரியோடு எங்கோ வாழ்கிருனும்! இந்தச் செய்தி நேற்றுத்தான் எனக்குக் கிடைத்தது! ஆம்! உன் வாழ்வு இனி மறுமலர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை! உடன் புறப்பட்டு நீ காவிரிப்பூம் பட்டினம் வந்துவிடு. பின் நானும் நீயுமாக மருதநம்பி இருக்கும் இடத்தைக் காண முயற்சி புரியலாம்.

தந்தை,

நல்லான்.

முடங்கலைப் படித்து முடித்த பொன்முடி பொங்கி எழுந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். தன் காதலனனின் வாழ்வு புனிதமாக வேண்டுமென்று அங்கயற்கண்ணியை நெஞ்சுருகப் பணிந்து தொழுதுகொண்டாள்.........

XX

பொன்முடிக்கு வழிச்செலவு மிக்க இன்பமாகவே இருந்தது. மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி வரும் வழிப்போக்கர் இருவர் அவளுக்குத் துணையாகக் கிடைத்தார்கள். வழிநெடுகிலும் ஏதேதோ பேசிக்கொண்டு திருச்சிராப்பள்ளிவரும்போது இருட்டிவிட்டது. அந்த வழிப்போக்கரில் ஒருவருக்குத் தூரத்து உறவினர் இல்லம் ஒன்று திருச்சிராப்பள்ளியில் இருந்தது. இரவு அங்குத்தங்கியிருந்து விடியற்காலமேயே புறப்பட்டு விடலாமென்பது பொன்முடியின் திட்டம்.

XX

(தொடரும்)

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

இன்று நானும் என் குடும்பத்தினரும் ஸ்ரீ சட்டைநாதசுவாமி தரிசனத்தைப் பெற்றேம். இவ்வாலயம் சுத்தமாக வைக்கப்பட்டு, பூஜைகள் எல்லாம் நன்கு நடைபெற்றுவருகிறதைக் கண்டும் கேட்டும் ஆனந்தம் அடைந்தேன்.

(ஒ. ம்.) பரமேஸ்வரன்.

5—7—55.

# வாழ்வை அளிப்பது வணக்கமே

**வித்துவான், திரு. ச. சேது சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்**

தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

வளைந்த மூங்கில் விளைந்த முதுமையில் மன்னர் முடியின் மேல் விளங்குவதைக் காண்கிறோம். கண்டவர் இதன் செல்வாக்கையும் பதவியையும் சுகத்தையும் பார்த்து இம்மூங்கில் வணக்கத்தை இளமையிலே அடைந்து வளர்ந்ததால் எதிர் காலத்தில் உலக அரசர்க்கும் உயர் பொருளாக விளங்குகிறது எனப் பாராட்டுகின்றனர். வணங்காத மூங்கில் இவ்வித செல்வாக்கை அடையவில்லையே என்று வருந்துவோர், மெச்சத் தக்க அதனுடைய விசித்திரமான குணம் வணக்கமே என்று பலபடப் புகழ்ந்து பேசுவர்.

இப்பேச்சின் கருத்து:— அறிவும் குணமும் கொண்ட மக்கட் சமுதாயம் இக் குணத்தையடைந்து உலகில் உன்னத சுடர் ஒளியாக விளங்கவேண்டும் என்பதாம்.

ஒரு செல்வர் புதிதாக வேலை கேட்டுவந்த பணிமக்களுக்குக் கடினமான தொழில்களைக் கொடுத்து அவர்களைத் திக்கு முக்கு ஆடச் செய்து அவர்களே வேலையை வெறுத்துப் போகும்படி செய்வர். குடமோ ஓட்டைக் குடம்; அதிலும் அடைக்கமுடியாத ஓட்டை. அதைச் சுற்றிலும் பல துவாரங்கள். இதைக் கொடுத்துக் கிணற்றிலிருந்து நீர் இறைத்து நிரப்பச்சொல்வார். குடத்தையும், இவர் பேச்சையுங் கேட்டு ஆடவர் அப்போதே அகன்றுவிடுவர். சில பெண்கள் சிறிது இறைத்துச் சோர்ந்து சொல்லாமலே ஓடிவிடுவர். சிலர் இந்தக் குடத்தாலே எப்படி நீர் இறைப்பது என்று சொன்னாலேபோதும் உடனே வெளியேபோ என்று சொல்லி விரட்டிவிடுவார்கள். இவ்விதம் பலர் ஓட, ஒரு மங்கை பல மணிநேரம் அக்குடத்தைக்கொண்டே நீர் ஒழுகுவது தெரிந்தும் இறைத்தாள். இறைத்தும் நீர் கிணற்றைவிட்டு அகலாதிருக்க மேலும் மேலும்

இறைத்தல் தொழிலில் ஈடுபட்டாள். இச்செயலைக் கண்டார் தலைவர். மனமிரங்கினுர். நீரை நிரப்பவில்லையே என்று அதட்டிக் கேட்டபோதும் விரைவாக இறைக்கிறேன் என்ற வணக்க மொழியே வந்தது. இவ்விதம் வணங்கிய வாயையும், செயலையும், எண்ணத்தையும் உடைய இம் மாதே வணக்க பூஷணமாவாள் என்று அவளையே மணந்து அனைவரும் புகழும் படியான தன் அன்புத் தெய்வமாக ஆக்கிக்கொண்டார். ஆக்கிக்கொண்ட பெருமை வணக்கத்தால் வந்தமை அறிந்து பின் அனைவரும் வணக்கக் குணமே சிறந்தது என்று கொண்டாடி அதனை வாழ்க்கையில் அமையும்படி ஒழுகலாயினர்.

உலகப் புகழ் பெற்ற காந்திமகானும் வணக்க வடிவமாக விளங்கி அவ்வணக்க மணமே வீசும்படியான கஸ்தூரி அழிந்தும் நான் வாழலாமா என்று தன் மனைவியார் இறந்தபோது வருந்திஞர் என்ருல் வணக்கக் குணத்துடன் கூடிய பெண்களே வாழவேண்டும் என்பதுதானே இதன் கருத்து!

மாதினியார் ஆகிய அன்னையும், புகழனுர் ஆகிய அத்தனும் மறைந்தார்கள். அவர்களால் நிச்சயிக்கப்பெற்ற நாயகரும் போரிற்சென்று மறைந்தார் என்பதைக் கேட்டு உயிரை விடப் போன முன்பிறந்தவரைக் கண்டு பின்பிறந்தவர், "தாங்கள் உயிர்விட்டால் நானும் இறப்பேன்" என்று சொன்ன மொழி கேட்டு உலகத்தவரோடு தம்பியும் வாழ உயிர்தாங்கினுர் திலகவதியார். சிலநாள் செல்லப் பின் பிறந்தவர் சமயநெறி கடந்து சென்றபோதும் வணங்கிய வாயினராய் இருந்தார்கள். மேலும், உலக மக்கள் தம்பி இனித் திரும்பிவரமாட்டார் என்று உள்ளம் தவிக்கும்படி சொல்லும் மொழிகளையும் கேட்டு வணக்கக் களஞ்சியமாகவே வாழ்ந்தார்கள்.

இதனுல் வணக்கத் தன்மை இவர்களிடம் எவ்வளவு வேரூன்றியிருக்கவேண்டும். இத்தன்மையால் "தம்பியை எதிர்கால வாழ்வில் சேர்த்துக் கொள்ளப்படாத நல்வினை யில்லாதவளாக நாள் ஆவது தகுமா? அது எனக்குப் பெருந் துர்அதிஷ்டமல்லவா? ஆகையால், இறைவரே! என்னுடன் பின் பிறந்தவனை இருட்குழியாகிய பரசமயத்தினின்றும் எடுத்தருளவேண்டும்" என்று வணங்கினுர் பரஞ்சுடரை. இவ்

வணக்கமே அவரைச் சைவ சமயத்தில் சேர்த்தது. ‘நாவுக்கரசர்’ என்ற பட்டம் தந்தது. பொன் பெற்றுப் பஞ்சகாலத்தில் மக்களின் பசியைப் போக்கியது. தவமுதல்வராகிய சம்பந்தர் அப்பா ! என்றழைக்கும் பெருமையும் தந்தது.

ஆகிய இவையெல்லாம் உண்டாக உதவியது வணக்க மந்திரந்தானே ! இவ் வணக்கம் தானே இவருக்கு இத்தனை வாழ்வையும் அளித்தது ! வணக்கத்திற்குக் குருவடிவாய் தம்பிக்குப் பாடுபடுவதுபோல, உலகினர்க்கே வழிகாட்டியான அம்மையார் அளித்த குணத்தை அறிந்து ஒவ்வொருவரும் அதன்படி நடந்து உலகு வாழ்வதோடு தன் குடும்பமும் வாழப் பாடுபடுவதோடு, வணக்கத்தால் வாழ்வை அளித்த திலக வதியாரைத் தியானிப்போமாக.

---

“வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீர்அடியார் கூட்டமும்வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.” —மணிவாசகர்.

“வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வா !வினை யேன்நெடுங் காலமே —அப்பர்.

“கோள்இல் பொறியின் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.” —வள்ளுவர்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம், சீகாழி.

நானும் எனது நண்பர் திரு. சொ. முத்தையா எம். எல். ஏ. வும் ஆண்டவனை இன்று 9—5—55 வந்து தரிசித்தோம். கட்டளைத் தம்பிரான் ஸ்ரீமத் சுவாமிகள் எங்களை செவ்வனம் தரிசனம் செய்துவைத்தார்கள். அவருக்கு எங்கள் நன்றி.

(ஒ. ம்.) சொ. முத்தையா,
சீகாழி.

(ஒ. ம்.) ஜெ. சிவஷண்முகம் பிள்ளை,
சட்டசபை சபாநாயகர், சென்னை.

7/4

# சிதம்பரம் ஸ்ரீ சித்சபாநாயகர்கோயில்

## மகா கும்பாபிஷேகம்

உலகம் உடல். அதற்குத் திருவாரூர் முதலியவை மூலாதாரம் முதலியன போலும். சிதம்பரம் இதயம். ஸ்ரீ ஆனந்தநடராசப்பெருமானின் ஆட்டத்தினாலேயே உலக உடல் இயங்குகின்றது. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'. பெருமான் இத்தாண்டவமாகிய ஐந்தொழில் களைச் செய்தருளுகிறார். அவரது திருவுருவ அமைப்பு ஐந்தெழுத்தி னுடைய வடிவம்.

திருச்சிற்றம்பலம் என்று சொல்லித் தேவாரத்தைத் தொடங்குவதும் முடிப்பதும் இத் திருக்கோயிலின் பெருமையை விளக்கும். தேவாரத் திருமுறைகள் இத் திருக்கோயிலிலிருந்தே உலகுக்குக் கிடைத்தன. மூர்த்தி தலம் தீர்த்தங்களின் பெருமை கூறவந்த ஆதீன முதல்வராகிய ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்,

> "தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
> முல்லைவனம் கூடல் முதுகுன்றம்—நெல்லைஇளர்
> காஞ்சிகழுக் குன்றம் மறைக் காடருணைகாளத்தி
> வாஞ்சியமென் முத்தி வரும்"

என்றார்கள். கி. பி. 907-947ல் முடிசூட்டப்பெற்ற பராந்தகனால் இத்திருக் கோயிலில் சித்சபை பொன்னோடு வேயப்பெற்றது. இவ்வரசர்களுக்குப் பிறகும் பல அரசர்கள் மீண்டும் மீண்டும் செப்பனிட்டுப் புதுப்பித்துப் பொன்னோடு வேய்ந்துள்ளனர். இத்தலத்தில் ஐந்து சபைகள் உள்ளன. சித்சபை, கனகசபை, நிருத்தசபை, பேரம்பலம், இராஜசபை என்பன. இவ்வைந்து சபைகளின் விமான அமைப்பும் ஒன்றாகவே அமைந்துள்ளன. இராஜசபை என்பது ஆயிரக்கால் மண்டபமாகும். சேக்கிழார் இருந்து பெரியபுராணம் பாடியது இவ்விடத்தில்தான்.

இத்தலத்தில் சபாநாயகருக்கும் சித்சபை கனகசபைகளுக்கும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. திருப்பணிக் கமிட்டியார் பல மாதங்களுக்கு முன்பிருந்தே ஏற்பாடுகள் செய்துவந்தனர். நன் கொடைகளும் காணிக்கைகளுமாகத் தொகை பெருகியது. பத்திரிகை களிலெல்லாம் இக்கோயில் கும்பாபிஷேகத்தின் சிறப்புப்பற்றி விரிவுற அறிவிக்கப்பெற்றன. நாளேடுகளும் வார ஏடுகளும் இவ்விழாவன்று இத்தல வரலாறுகளை எல்லாம் எழுதிச் சிறப்பிதழ்கள் வெளியிட்டன

715



இலங்கை நாட்டவரும் வடநாட்டு மக்களும் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இரயில் நிலையத்தார் பல ஸ்பெஷல் வண்டிகள் விட்டனர். இரண்டுலக்ஷத்திற்கும் மேற்பட்டமக்கள் இத்தலத்தில் கூடினர். சுகாதார வசதிகளும் மற்றவசதிகளும் நல்லமுறையில் கவனிக்கப்பெற்றன.

7—7—55 அன்று வியாழக்கிழமை காலை 9-மணிக்கு நடைபெறும் கும்பாபிஷேகத்தைத் தரிசிக்க மக்கள் காலை 6-மணிமுதலே ஆலயத்தில் திரள ஆரம்பித்தனர். சித்சபை நான்கு மதிலின் உள்ளமைந்து விளங்குவதால் எல்லோரும் கண்டு வணங்குதற்கு இயலாது. ஆகையால் எல்லோருக்கும் இத்தரிசன வாய்ப்புக் கிடைக்குமாறு நான்கு இராஜ கோபுரங்களுக்கும் கும்பாபிஷேகங்கள் அதே நேரத்தில் செய்யத் தீர்மானித்திருந்தார்கள்.

உட்பிராகாரம், திருமாளிகைப்பத்தியில் கீழ்வரிசை, மேல்வரிசை, மண்டபம் ஆகிய இடங்களிலிருந்து பார்த்துத் தரிசித்தற்குச் சீட்டுக்களும் பேட்ஜுகளும் வழங்கப்பெற்றிருந்தன. இவ்விடங்களை ஜனத்திரள் காலை 7 மணிக்கெல்லாம் கைப்பற்றிக்கொண்டது. காலை 8-30 மணிக்கெல்லாம் கடங்கள் பூர்ணுகுதியாகிப் புறப்பட்டு அவ்வவ்விடங்களில் அமைக்கப்பெற்றன.


இடைவேளையில் 7-மணிமுதல் 9-மணிவரை மேல் மண்டபத்தில் வெப்பத்தைப் பொருட்படுத்தாது கூடியிருந்தனர் மக்கள். மக்கள் பொழுதுபோக்கிப் புறக்கணிக்காதவாறு பித்துக்குளி முருகதாஸ் அவர்கள் பஜனை செய்து எல்லோருக்கும் பக்தியால் பரவசமூட்டினுர்கள். நிழற்பட நிபுணர்கள் கோபுரங்களைப் பற்றினர். மரங்களிலும் மாடங்களிலும் கொட்டகைகளிலும் கூரைகளிலுமாக மக்கள் கூடியகாட்சி கண்டு கருத்து நெகிழாதார் யாருமில்லை. ஆலயம் இவ்வளவு பெரிதாக அமைக்கப் பெற்றிருப்பதனருமையை அன்றுதான் அறிந்தனர் மக்கள். திருச்சுற்றுகளிலெல்லாம் திரள் திரளாய் நின்றவண்ணமிருந்தனர் ஆண்களும் பெண்களும். இவ்வேளையில் பொதுவார்க்குள் சிறு பூசல் விளைந்தது. திருப்பணிச்செல்வர்களும் மற்றவர்களும் இதைஅறிந்து மனங்கவன்றனர். அங்கு எழுந்தருளியிருந்த நமது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடம் சமாதானத்திற்குப் பொதுவாரும் வேண்டும் நிலைமை ஏற்பட்டது. மௌன விரததினமாதலால் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆனந்த நடராசர் திருவருள் விலாசத்திலிருப்போர்க்கு வெறுத்தலும் விழைதலும் கூடாவாயிற்றே! என்பதை இனிய குறிப்பால் உணர்த்தி சமாதானம் நிலவ செய்தார்கள். அவர்களின் அருளுரை கேட்டு அனைவரும் தத்தம் செயலை மேற்கொண்டனர்.

காலை 9மணிக்கு ஸ்ரீசபாநாயகரின் சித்சபைக்கு மகாசம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. கண்டகண்கள் களித்தன. பாடினவாய்கள் பாமணம் வீசின.



ஆனந்தக்கூத்தன்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில்:



சித்சபை, கனகசபை கும்பாபிஷேகம்

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில்:



ஸ்ரீ நடராஜயாகசாலை

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில்:




நடராஜர் யாகசாலை — யாகசாலை பூஜை தரிசனம்

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில்:




யாககால தரிசனம்

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில்:



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் திருப்பணியாளர்களும், யாகசாலை தரிசனம் செய்தல்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில்:



ஸ்ரீ நடராஜர் கடம் புறப்பாடு

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில்:



தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
திருப்பணியாளர்களை பாராட்டி பொன்னுடை
போர்த்தி ஆசியருளல்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில்:



திருப்பணியாளர்களுக்கு பாராட்டுக் கூட்டம்

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில்:



கும்பாபிஷேகத்தில் பெரும் பங்குபற்றிய பிரும்மஸ்ரீ
ஞானமூர்த்தி தீக்ஷிதர் அவர்களை பொதுவார்
சிறப்புசெய்தல்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேகத்தில்:



கும்பாபிஷேக விழாவில் தொண்டாற்றிய தருமபுர ஆதீனத்
திருமுறைக் குழுவினர்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேகத்தில்:



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும், திருப்பணியாளர்களும்.

கூப்பியகரங்கள் குளிர்ந்தன. நான்கு கோபுரங்களுக்கும் அதேநேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இத்தகைய பெரிய மகாகும்பாபிஷேக ஏற்பாடு செய்த பெருமக்களைப் பாராட்டினர் மக்கள்.

இதில் பங்கெடுத்துக்கொண்டு ஒவ்வொரு செயலையும் மேற்கொண்டோர் பலர். தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 4, 5 நாட்களுக்கு முன்பே திருமுறை இசைவாணர்களைத் தேவஸ்தானங்களிலிருந்து தருவித்து அனுப்பினுர்கள். ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியரும் மாணுக்கர்களும் அதில் கலந்துகொண்டார்கள். யாகசாலையில் தருமையாதீனத் திருமுறைக் குழுவினர் நாடோறும் காலையிலும் மாலையிலும் திருமுறைப் பாராயணம் செய்தனர். கட்டளை மடத்திலிருந்து சிவபுராணம் திருத்தொண்டத்தொகை தேவாரம் முதலியன பாடிக்கொண்டு சென்றதைப் பாராட்டாதார் இல்லை. இன்னும் நாதசுர நல்லிசைவாணர்களைக் கொண்டு இன்னிசைக் கச்சேரிகளையும் நிகழ்த்தச் செய்தருளினுர்கள். இவற்றைக் கவனித்து நன்கு நடத்த ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும் நிர்வாகிகளும் சென்று அங்குத் தங்கி நன்கு கவனித்தனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 4—7—55 அன்று தில்லைக்கு எழுந்தருளினுர்கள். திருப்பணிச்செல்வர்களும் பொதுவாரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வந்திருந்து வரவேற்றனர். காலையும், மாலையும் பூர்ணுகுதி வேளைகளில் ஆலயத்திற்கு எழுந்தருளி வழிபட்டார்கள். மற்றைய நேரங்களில் தலயாத்திரையாகச்சென்று பல தலங்களையும் வழிபட்டார்கள். 7—7—55 அன்று மகா கும்பாபிஷேகத்தை தரிசித்துத் தருமைக்கு எழுந்தருளினுர்கள். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சித்சபை கும்பாபிஷேகத்தில் சிறந்த திருப்பணிகளைச் செய்வித்தருளினமை குறிப்பிடற்குரியது. கும்பாபிஷேகத்தன்று ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இளவரசு வித்துவான் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் எழுந்தருளி வழிபட்டமை சிறப்பாக இருந்தது.

"செல்வ நெடுமாடஞ் சென்று சேணேங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே." —சம்பந்தர்.

வாழ்க தில்லைத் திருப்பணிச் செல்வர்கள். வளர்க பக்தி நெறி.

[வி. சா. கு.]

# மாயூரம்

# ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோவில்

## மகா கும்பாபிஷேகம்

துலாக்கட்டத்துக்கு அண்மையில் அமைந்து விளங்குவது இவ்வாலயம். தருமையாதீனத்துக்குச் சொந்தமான கோயில்களுள் இதுவும் ஒன்று. இத்திருக்கோயில் தருமையாதீனம் இருபத்துமூன்ருவது குரு முதல்வராக எழுந்தருளி இருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்கள் காலத்தில் திருப்பணி தொடங்கப்பெற்றது. 24-வது குரு மூர்த்திகளாக எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் அவர்கள் இத்திருப்பணியை விரைந்து செய்தருளினுர்கள். பழைய கோயிலே அகற்றி அவ்விடத்திலேயே புதிதாக ஆலயம் அமைத்தார்கள். விசுவநாதர் கோயிலில் காசியில் இருத்தல்போலக்கருப்பக்கிருகம் அமைக்கப்பெற்றது. கீழ்விமானம்வரை கருங்கல் திருப்பணியும் மேல் விமானம் செங்கல் திருப்பணியாலும் கட்டப்பெற்றன. சுற்றுச்சுவர் அஸ்திவாரம் போடப் பெற்று மேலெழுந்தநிலேயில் இருந்தன. அம்பாள் திருக்கோயில் கட்டப் பெருமல் இருந்தது. 25-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீனத்துக்குட்பட்ட ஆலயங்களனைத்தையும் கும்பாபிஷேகம் செய்வித்தும் புதிய திருப்பணிகள் பலவற்றைச் செய்தும் பழுதுபட்டவற்றைப் புதுப்பித்தும் சிவாலயப்பணி செய்வித்து வருகிருர்கள். ஏறத்தாழ 20 ஆண்டுகளாக திருப்பணிசெய்ய ஆரம்பித்து முற்றுப்பெருமல் இருந்த இவ்வாலயம் இவர்களால் மீண்டும் புதிய முறையில் திருப்பணி செய்யப் பெற்றது. சுற்றுக்கோயில்கள் புதிய முறையில் அமைக்கப்பெற்றன. சுற்றுச்சுவர் எடுக்கப்பெற்றது. ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் கோயிலும் அர்த்தமண்டபமும் எழுப்பப் பெற்றன. முற்றிலும் கருங்கல் திருப்பணியாகச் செய்து ஆலயத்தைக்கட்டி முடித்தார்கள். பெரிய கடைத்தெருவில் இருந்த பழைய வாயிலேத் திறந்து மக்கள் வந்து தரிசித்துச் செல்லுதற்கு வழிசெய்யப்பெற்றது. அழகிய வளேவோடு கூடிய வாயில் அங்குச் செல்வோர் அனைவரின் உள்ளத்தை ஈர்க்கும் வாயிலாக அமைந்து விளங்குகிறது. ஆலயங்களின் முக்கியமான இடங்களில் சுதைச்சிற்பங்கள் அமைக்கப்பெற்று ஆலயம் முழுதும் சிமெண்ட் பூசி வண்ண எண்ணெய் தீட்டப்பெற்றது. ஆலயம் மிக அழகாகவும் ஆனத்துக்குரிய ஏனைய கோயில்களேப் போலவே தூய்மையாகவும் அமைந்தது. விசுவநாதர் கருப்பக் கிருகம் ஒன்பது தங்கக் கலசங்களே உடையதாய் விளங்குகிறது. பழைய திருஉருவங்களே எடுத்துப் புதிய கட்டிடத்தில் பெயர்த்து

அமைக்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் பொன்னும் மணியும் சொரிந்து திருஉருவத்தைப் பிரதிட்டித்தரர்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தொடங்கிய ஒன்றை விரைவில் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர்கள். அவர்கள் நினைவெல்லாம் ஆலயம் தோன்றும் அமைப்பைச் சிந்திக்கலாயிற்று. நாடோறும் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நேரே சென்று கண்காணித்து வந்தார்கள். வேலைகள் மிகச் சுருங்கிய கால எல்லையில் தொடங்கி விரைந்து முடிந்தன. ஆனிமீ 27உ (11—7—55) ஞாயிற்றுக் கிழமை கும்பாபிஷேகத்திற்குரியநாளென்று உறுதி செய்யப்பெற்றது. பத்திரிகைகள் பெரிய அளவில் தயாராயின. யாகசாலைகள் கோயிலின் சந்நிதியின் இருபுறங்களிலும் எழில்மிக்கவாய் அமைக்கப்பெற்றன. முற்றிலும் வர்ணக்காகிதங்களால் அமைக்கப்பெற்ற இம்மண்டபம் பார்ப் போர் அனைவர்க்கும் ஒரு புதிய கல்மண்டபமாகத்தான் காட்சியளித்தது. யாகசாலை அமைப்பதில் ஆதீனத்திற்கே ஒரு தனிச்சிறப்பு உண்டு. மின் சிறுவிளக்குகள் சுவரெங்கிலும் இணைக்கப்பெற்றன. யாகசாலைக் காட்சியைக்காண அன்பர்கள் திரண்டனர்.

யாகசாலையில் கடங்கள் 24உ (8—7—55) வெள்ளிக்கிழமை கலாகர்ஷணம் செய்யப்பெற்றது. 9—8—55 சனிக்கிழமைமுதல் ஆறு நாட்கள் ஆறுகால பூசை மிக அழகுறநடந்தது. நாடோறும் யாகசாலையில் பூர்ணுகுதி தொடங்கி நடைபெறும், சிலமணிநேரங்களுக்கு முன்பிலிருந்து ஆதீனத் தேவாரபாடசாலை மாணவர்கள் திருமுறைப்பாராயணம் செய்து வந்தனர். வேதசிவாகம பாடசாலை மாணவர்கள் வேதபாராயணம் செய்துவந்தனர். சொற்பொழிவுகளும் நாடோறும் நன்கு நடைபெற்றன.

## சொற்பொழிவுகள்

6—7—55 புதன்கிழமை ஆதீனக் கல்லூரி வடமொழிப்பேராசிரியர் சிரோமணி திரு. கே. ராஜகோபால சாஸ்திரிகள் 'சிவபிரான் எழுத் துருவன்' என்னும் தலைப்பிலும் சிவாகமபாடசாலை ஆசிரியர் சிரோமணி திரு. ம சுப்பிரமணியசர்மா அவர்கள் 'முதல்வன் சொல்வடிவன்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்.

7—7—55 வியாழக்கிழமை திருக்கடவூர் தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் 'குருவருளும் அருச்சனையும்' என்பது பற்றியும் ஸ்ரீ. சு. சாம்பசிவ சிவாசாரியார் 'சிவ பரத்துவம்' பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

8—7—55 வெள்ளிக்கிழமை சிவாகமபாடசாலைத் தலைமையாசிரியர் சிவாகம வித்துவான் ஸ்ரீ. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் 'கும்பாபிஷேக விளக்கம்' பற்றியும். மாயூரம் குமரக்கட்டளை விசாரணை ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் 'திருவைந்தெழுத்துப்பற்றியும்' பேசினர்.

9—7—55 சனிக்கிழமை தேவாரப்பாடசாலை தேவார ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் அவர்கள் திருமுறைச் சிறப்புப்பற்றியும் பேசினுர்.

10—7—55 ஞாயிற்றுக்கிழமை ஆதீனப் புலவர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் சித்தாந்தரத்நாகரம். வித்துவான் திரு. முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார் அவர்கள் 'கடவுளும் அடியாரும்' என்பது பற்றியும் ஆதீன சமயத்தொண்டர் திருக்கருகாவூர் திரு. சிவஞானம் அவர்கள் 'ஆலயவழிபாடு' பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

11—7—55 திங்கட்கிழமை ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான். திரு. சேது சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் 'சிவசின்னங்கள்' பற்றியும், கல்லூரிமுதல்வர் திரு. கீ. இராமலிங்கமுதலியார் அவர்கள் 'திருவடியும் தொண்டும்' என்பதுபற்றியும் பண்டித திரு. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் 'திருக்கோயில்' பற்றியும் தெளிவுறப்பேசினர்

இவ்வாறு நாடோறும் தேவாரம், வேதம் இவற்றின் முழக்கமும் சொற்பொழிவுகளின் கருத்தொலிகளும் நாதசுர இசையின் பேரொலிகளுமே ஆலயமெங்கும் நிறைந்தன. ஆதீனஅலுவலர்கள் அவ்வப்பொழுது நடைபெறும் செயல்களை மிகப் பொறுப்புடன் கண்காணித்துவந்தனர்.

10—7—55 ஞாயிறு காலை 8-30 லிருந்து 11-30 க்குள் மலைத் தண்டபாணி முதலிய திருவுருவங்களுக்குக் கும்பாபிஷேகம் நடந்தது. அண்மையில் 7—7—55 அன்று சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அங்குவந்த மக்களனைவரும் அடுத்துவரும் இத்திருக்கோயில் கும்பாபிஷேகத்தினையும் காணுதல் பெரும் பயன் அளிக்கும் எனக் கருதினர். எனவே 8—7—55 முதலே மாயூரத்திற்கு மக்கள் விரைந்தனர். எதிர்பார்த்த அளவுக்கு மேலாக மக்கள் கூடினர். கூட்டத்தின் மிகுதியை எண்ணிப் புகைவண்டிகளும் அதிகம் விடப்பெற்றன. ஆயிரக்கணக்கில் மக்கள் மாயூரத்தில் தேங்கினர். நகராட்சி சுகாதார முறைகளையும் நன்கு கவனித்தது. இன்று நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து தரிசிப்பித்தார்கள். கூட்டத்தினருக்கு வழிவிடச்செய்து எளிமையாயிருந்து மக்கள் புகழ்ந்து போற்றும் உயரிய நிலையில் பழகிய மகாசந்நிதானம் அவர்களை வாழ்த்தாதார் மாயூரத்தில் இல்லை எனலாம்.

எத்தனையோ ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த கும்பாபிஷேகம் நாளை நடைபெற இருப்பதைக்குறித்து மக்கள் பெரிதும் மனமகிழ்ந்தனர்.

## மகா கும்பாபிஷேகம்

11—7—55 திங்களன்று காலை மணி 7 முதல் கோயிலுள் நுழைவதற்கு இடமில்லை. ஆதீனக் கல்லூரி சாரணக் குழுவினர் மக்கள் செல்லுதற்கும் வருவதற்கும் ஏற்றவாறு வழிவகுத்துச் செய்த தொண்டு பாராட்டற்குரியது. யாகசாலையிலும் சுற்றுக் கோயில்களின் மண்டபங்களிலும் கடைவீதிகளின் மாடிப்புறங்களிலும் மண்டபங்களிலும் மக்கள் இடம்பிடித்துக்கொண்டனர். பெரியகடைவீதி மகாதானத்தெரு துலாக்கட்டப் பகுதிகள் முதலிய இடங்களில் பெருங்கூட்டம் நின்ற வண்ணமிருந்தது.

காலை ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபட்டு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் 9-மணிக்கு ஆலயத்தை அடைந்தார்கள். யாக சாலையில் பூர்ணாகுதிகள் நடைபெற்றுக் கடம் புறப்பட்டது. காலை 10-20க்குள் கடம் உரிய விமான இடங்களை அடைந்தன. 10-30 க்கு ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் விமானத்திற்கும் ஸ்ரீ விஸ்வநாதசுவாமி விமானத்திற்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீ விசுவநாத சுவாமிக்கும் ஸ்ரீ விசாலாக்ஷி அம்மைக்கும் கடாபிஷேகங்கள் நடைபெற்றன. மேளவாத்தியங்கள் முழங்கின அரகர முழக்கம் அன்பர்களின் அகம்குழைந்து வெளிவந்தது. வெடிமுழக்கங்கள் இடியென முழங்கின. இவ்வாறு காலை நிகழ்ச்சிகள் தீபாராதனைகளுடன் சிறப்பாக நிறைவுற்றன.

## இளவரசு அவர்கள் வருகை

திருப்பனந்தாள் காசிமடம் இளவரசு வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எழுந்தருளி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களோடிருந்து திருப்பணி செய்த திருக்கோயிலைக் கண்டு மகிழ்ந்தார்கள், காசிமடத்து அலுவலர்களும் சுவாமிகள் அவர்களுடன் வந்திருந்து வழிபட்டனர்.

## மாலை நிகழ்ச்சி

மாலையில் ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாளுக்குச் சந்தனக்காப்பலங்காரம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றது. மகாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன. சந்தனக்காப்பு அம்மைக்குச் சார்த்தி அழகுறுத்தப் பெற்றிருந்தது. இரவு அபிஷேக ஆராதனைகளுக்குப்பின் புஷ்பப் பல்லக்குக் காட்சி நடைபெற்றது. சிறந்த கைத்திறனுடையார் இதனைக்கவின் பெற அமைத்தனர் இரவு பெருமான் பூம் பல்லக்கில் பொலிவுறவிளங்கி நான்குவீதிகளிலும் திருவுலாப் போந்தார். சிறந்த நாதசுர இன்னிசை

வாணர்களின் நல்லிசை நிகழ்ந்தன. திருமுறைப் பாராயணமும், வேதபாராயணமும் நிகழ்ந்தன.

## லக்ஷார்ச்சனை

மகாகும்பாபிஷேகத்திற்குப்பிறகு தொடர்ந்து ஸ்ரீ காசிவிசுவநாதருக்கும் ஸ்ரீ விசாலாட்சிக்கும் லக்ஷார்ச்சனையும் மண்டலாபிஷேகமும் நடைபெற்று வருகின்றன. அன்பர்கள் வந்து வணங்கித் திருவருள்பெற்றுச் செல்கின்றனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆலயப் பணியையும் அரனிடத்து அவர்கள் கொண்ட அன்பையும் பாராட்டிச் சொல்லும் வாழ்த்தொலி பலர் செவிகளும்கேட்டவண்ணம் இருக்கின்றன.

[வி. சா. கு.]

---

## மதிப்புரை

### திருஞானசம்பந்தர் தேவாரம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் 2-வது திருமுறை சிறந்த முறையில் பதிப்பிக்கப்பட்டு உள்ளன. இந்நூலில் 2-வது திருமுறையில் உள்ள தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள் விசேஷ அம்சமாகும். பிற்சேர்க்கையாகத் திருஇடைமருதூர் முதலிய தலங்களைக் குறித்துக் கல்வெட்டுக்களின் ஆதாரத்தின்பேரில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து வை. சுந்தரேச வாண்டையார் எழுதியுள்ள ஆராய்ச்சிக் குறிப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

திருஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களை எல்லோரும் எளிதில் உணர்ந்து பயனடையுமாறு குறிப்புரை எழுதப்பட்டு உள்ளது. படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. நல்ல பதிப்பிற்குரிய பல அம்சங்கள் காணப்படுகின்றன. தலங்களின் வரலாற்றுக் குறிப்பை எடுத்துக் கொண்டால் அதில் தலவரலாற்றுக் குறிப்பு. புராணக் குறிப்பு, கல்வெட்டுக் குறிப்பு, தலயாத்திரைக் குறிப்பு ஆகிய பிரிவுகள் காணப்படுகின்றன.

அருஞ்சொற்களின் பொருள் அருந்தொடர்களின் பொருள் விளக்கம் ஒப்புமைக் குறிப்பு, சாத்திரக் கருத்தின் அடைவு, வேதாகமப் பிரமாணம். திருப்பாடல்களிற் குறித்த வரலாறுகள். சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சி ஆகிய சிறப்புகளுடன் குறிப்புரை தயாரிக்கப்பட்டுள்ளது. பாட்டு முதற் குறிப்பகராதியும் சேர்க்கப்பட்டுள்ளது. பிழையின்றி நல்ல காகிதத்தில் நூல் அச்சிடப்பட்டுள்ளது. தருமபுர ஆதீனத்தார் இவ்வாறு தமிழுக்குச் செய்துவரும் தொண்டு எல்லோராலும் பாராட்டுதற்குரியது.

—தினமணி சுடர் அநுபந்தம், 6—3—55.

722

ஆதீனக் கல்வி நிலையங்களின்

# மாணவமன்றங்களின் திறப்பு விழா

ஒய்வுபெற்ற கல்லூரி முதல்வர்

திரு. ய. மகாலிங்கசாஸ்திரி M.A., B.L., அவர்களுக்குப்

# பாராட்டு விழா

ஆதீனக்கல்விநிலையங்களாகிய தேவார வேத பாடசாலைகள், கீழைக் கலை உயர்பள்ளி, கீழைக்கலைக்கல்லூரிகளின் மாணவர் மன்றங்கள்திறப்பு விழாவும், ஒன்பது ஆண்டுகள் கல்லூரி முதல்வராயிருந்து ஒய்வுபெற்ற திரு. ய. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்களுக்குப் பாராட்டுவிழாவும் நன்கு நடைபெற்றன. விழா திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது, அன்றுமாலை 4-மணிக்கெல்லாம் கல்விநிலைய மாணவர்கள் சிறந்த சிற்றுண்டி கொண்டனர். பின்னர் விருந்தினர்களுடன் நிழற்படங்கள் எடுக்கப்பெற்றன. மாலை 6-மணிக்கு விழா தொடங்கியது.

ஒய்வுபெற்ற கல்லூரி முதல்வர் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டாடைபோர்த்திப் பாராட்டுக்கூறியருளினார்கள். பின்னர் கடவுள் வணக்கமாக வடமொழியிலும் தென்மொழியிலும் வாழ்த்திசைக்கப்பெற்றது. பின்னர் இசைக்கல்லூரி மாணவர் சீறியாழ் முழவுடன் செவிவிருந்தளித்தனர். கீழைக்கலை உயர்பள்ளி மாணவி திரு. திலகவதி, தாகூர் எழுதிய கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அழகுறப் பாடினார். தொடக்கப்பள்ளி மாணவர் "புகழ்பாடச் சொன்ன புல்லர்" என்ற தலைப்பில் உரையாடல்மூலம் சிறு நாடகம் ஒன்றைச் செவ்வையாய் நிகழ்த்தினர். குழந்தைகளின் கும்மியும் கோலாட்டமும் கூட்டத்தை மகிழ்வித்தது. கல்லூரி மாணவர் வி கல்யாணசுந்தரம் 'உண்டாலம் மஇவ்வுலகம்' என்ற பாடலை இசையுடன்கூடிய இயற்றமிழாய்ப் பொருள் விளங்கப் பாடினர்.

கல்லூரிமுதல்வர் திரு.கி.இராமலிக்கம் எம்.ஏ., அவர்கள்விருந்தினரை வரவேற்றார்கள். அவர்கள் வரவேற்புரை தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் கல்விநிலைய மாணவர்கள் செய்யும்கடமைகளை எடுத்து விளக்குவதாகவும் அமைந்திருந்தன. பின்னர் கீழைக்கலை உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. முருகையாப் பிள்ளை பி. ஏ., எல். டி., அவர்கள் வரவேற்றார்கள்.

விழாத்தலைவர் மாயூரம், அன்பநாதபுரம் வகையரா தர்மபாக கட்டளைகளின் கல்லூரி முதல்வர், திரு. ஏ. இராமநாதம் பிள்ளை, அவர்கள்

முன்னுரை கூறினார்கள். திருக்குறள் வாழ்க்கை இலக்கியம் என்பதை அவர்கள் அணிந்துரை விளக்கியது.

பின்னர் அறிக்கைகள் வாசிக்கப்பெற்றன. கலைமகள் கழகம், நால்வர் நற்றமிழ்க் கழகம், வாகீசர் மாணவர் கழகம், குருஞானசம்பந்தர் கழகம், ஆகிய இக்கல்வி நிலைய மாணவர் மன்றங்களின் அவ்வச் செயலாளர் அறிக்கைகளை வாசித்தனர்.

அடுத்து, கல்லூரியின் தொடக்கத்தில் இருந்து ஒன்பது ஆண்டு கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்து மாணவர் களின் அன்பிற்கும் ஆசிரியர்களின் மதிப்பிற்கும் உரியவர்களாயிருந்த திரு. ய. மகாலிங்க சாஸ்திரியார் அவர்களின் குணநலங்களையும், செயல் திறங்களையும் அறிவாற்றலையும் பாராட்டி வாழ்த்திதழ்கள் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் வாசித்தளிக்கப்பெற்றன.

கல்லூரித் தமிழ்ப்பகுதி ஆசிரியர்கள் சார்பில் வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்களும், வடமொழிப்பகுதியின் சார்பில் சிரோமணி திரு, கே. இராஜகோபால சாஸ்திரிகள் அவர்களும், திரு. நாராயண சாஸ்திரிகள் அவர்களும், தமிழ் மாணவர்கள் சார்பில் மாணவர்கழகச் செயலாளர் திரு. அரங்கசாமியும் திரு. சுந்தரேசனும் வரவேற்புரை கள் வாசித்தளித்தனர்.

கல்லூரிப்பேராசிரியர்கள் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர் களும், திரு. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களும் புலவர், திரு. ம. சிவசம்பு அவர்களும் ஓய்வுபெற்ற கல்லூரி முதல்வரின் சிறப்பைப் பாராட்டினார்கள். தலைமையை ஈடுசெய்யும்வகையில் முதல்வராகப்பெற்ற திரு. கீ. இராமலிங்கம் எம். ஏ., அவர்களின் குணநலன்களையும் பாராட்டி னார்கள்.

ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், திரு. ஒப்பிலா. துரைராசன் ஆகியோர், மாணவர்கள் சார்பில் பாராட்டிசைத்தார்கள்.

ஓய்வுபெற்ற கல்லூரி முதல்வர், திரு. ய. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் விடையுரை கூறினார்கள். முதல்வராயிருந்த காலங்களில் தமிழ்த்துறைத் தலைவராயிருந்து பணியாற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்ற திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களின் ஒத்துழைப்பைப் பெரிதும் பாராட்டினார்கள். அடுத்து கல்லூரிப் பேராசிரியராகவும், தமிழ்த் துறைத் தலைவராகவும் இருந்து பணியாற்றும், புலவர், திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களின் தமிழ்த்தொண்டையும்.

ஆசிரியர்களின் சேவைகளையும் பாராட்டினார்கள். எதிர்காலத்தில் தமிழ் மாணவர்களின் கடமைகளை நன்கு விளக்கி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குத் தம் நன்றியறிதலைத் தெரிவித்தார்கள்.

தருமை மடம், ஆலயம் இவைசிறந்து, விளங்குமிடம். இங்குப் படிக்கும் மாணவர்கள் இயல்பிலேயே நல்லொழுக்கமும் நன்னடத்தையும் பெறுவர் என்றும் இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஆட்சிக்காலத்தில் தமிழ் சமயம் இவை வளர்ந்த வளர்ச்சிகளையும் நன்கு விளக்கினார்கள். பின்னர் மாணவர் மன்றங்களைத் திறந்துவைத்துப்பேசி மாணவர்களை மகிழ்வித்தார்கள்.

பின்னர் மாயூரம், அ. வ. அ. கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், திரு. கு. பரமசிவம் பி. ஏ. ஆனர்ஸ்., அவர்கள் மாணவ மன்றங்களைத் திறந்து வைத்துச் சைவம் தமிழ் இவை தமிழரின் மூச்செனக் கூறித் தம் பேச்சை நிறுத்தினார்கள். பின்னர் உயர்பள்ளித் தமிழாசிரியர், திரு. வி. சபேசன் அவர்கள் வந்திருந்தோர்க்கு நன்றியுரை நவின்றனர். நாட்டுவாழ்த்தும் கடவுள் வாழ்த்தும் கூட்டத்தின் முடிவாயின.

## மாநடுவர் (ஜஸ்டிஸ்) பெருமைமிகு சோமசுந்தரம் அவர்கள் வருகை.

10—7—55 சென்னை உயர்அறமன்ற மாநடுவர் (ஜட்ஜ்) பெருமைமிகு, சோமசுந்தரம் அவர்கள், தஞ்சை மாவட்ட மாநடுவர் திரு. எஸ், ஏ அய்யாசாமி செட்டியார் அவர்களுடன் தருமைக்கு வருகை புரிந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைச் சேவித்தார்கள். ஆதினக் கல்லூரி மாணவர் மன்றச் சார்பில் வரவேற்கப் பெற்றார்கள். கல்லூரி முதல்வர், கல்லூரிப் பேராசிரியர்கள் ஆகியோர்கள் வரவேற்றும் நன்றி கூறியும் சிறப்பித்தார்கள். மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். மடாலயம், கோயில்கள் நூலகம், அச்சகம், கல்வி நிலையங்கள் முதலியவற்றைக் கண்டு களித்தார்கள்.

## ஜஸ்டிஸ் சோமசுந்தரம் அவர்கள் எழுதுகிறார்கள்:

"சைவம் தழைத்தோங்கவும் தமிழ் வளம்பெறவும் ஆதீனத்தார் எடுத்துவரும் முயற்சி. பாராட்டத்தக்கது. அம்முயற்சியின் பலனாய் நாட்டில் தெய்வபக்தி பெருகி, அன்பு வளர்ந்து, உலகம் இன்புறுமென்று உறுதியாய் நம்புகிறேன்"

### லெப்டினெண்ட் கர்னல்

## திரு. சேதுராம் அவர்களின் வருகை

சென்னைப் படைப் பிரிவைச் சேர்ந்த பெங்களூர் தளபதி திரு. ஜி. சேதுராம் அவர்கள் தருமைக்கு வந்திருந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வழிபட்டார்கள். கல்லூரி மாணவ மன்றச்சார்பில் வரவேற்கப் பெற்றார்கள். மாணவர்களுக்கு இந்தியரின் படைப்பலத்தைப்பற்றியும் அதில் தாமடைந்த அனுபவங்களைப்பற்றியும் படைகளின் அமைப்பைப் பற்றியும் அழகுற விரித்துப் பேசினார்கள். கல்லூரி முதல்வர் வரவேற்றும் நன்றிகூறியும் சிறப்பித்தார்கள். எல்லோரும் பெருங்களிப்புற்றார்கள்.

## சிதம்பரத்தில் அபிஷேக ஆராதனைகள்

25—7—55 திங்கட்கிழமை அன்று தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தில்லைக்கு எழுந்தருளி ஸ்ரீநடராசப் பெருமானுக்குச் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்தார்கள். சர்க்கரைப் பொங்கல் பாவாடை முதலியன நிவேதிக்கப்பெற்றன. அன்பர்கள் பலரும் வந்திருந்து வழிபட்டு ஆனந்தமுற்றார்கள்.

### தேவஸ்தானங்களில்

## ஆடிப்பூரத் திருவிழாக்கள்

ஆதினத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேசுவர சுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கும், சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாளுக்கும், வேளூர் ஸ்ரீவைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீதையல்நாயகி அம்மைக்கும், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அறம் வளர்த்த நாயகிக்கும் 14-7-55 வியாழக்கிழமை தொடங்கிப் பத்து நாட்கள் சிறப்பாக ஆடிப்பூரத் திருவிழா சொற்பொழிவுகளுடன் நடைபெற்றது.

### சொற்பொழிவுகள்

**திருக்கடவூர்:**

15-7-55 வெள்ளிக்கிழமை மாலை ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி முதல்வர், திரு, கி. இராமலிங்கம் எம். ஏ. அவர்கள் 'அபிராமி கடைக்கண் களின் அருள்விளக்கம்' 16-7-55 சனிக்கிழமை மாலை ஆதீனக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்

'கடலூர் உத்தமன்' 18-7-55 திங்கள்கிழமை மாலை ஆதீனப்புலவர் சித்தாந்தரத்நாகரம், புலவர் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'அன்பும் அருளும்'. 20-7-55 புதன்கிழமை மாலை ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. ச. சேது சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 'விழுத்துணை'. 21-7-55 ஆதீனக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'ஆர் துணை'

சீகாழி:

18-7-55 திங்கள் மாலை கல்லூரி முதல்வர் திரு. கி. இராமலிங்கம் எம். ஏ., அவர்கள் 'அன்னை அன்பு'. 19-7-55 செவ்வாய்மாலை கல்லூரிப் பேராசிரியர் வித்துவான். திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'திருவருள்' 20-7-55 புதன் மாலை புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'உளக்கோயில் விளக்கு'. 21-7-55 வியாழன்மாலை வித்துவான் சொ. சிங்காரவேலன் அவர்கள் 'அருளாற்றல்'. 22-7-55 வெள்ளிமாலை கிழைக்கலை உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. கை. முருகையாப் பிள்ளை அவர்கள் பி. ஏ. எல். டி. 'அன்னை அருள்'. 23-7-55 சனிக்கிழமை மாலை ஆதீன சமயத்தொண்டர் திரு. கோ. சிவஞானம் அவர்கள் 'சிவனருள்'. உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. வி. சபேசன் அவர்கள்' தாயன்பு',

வேளூர்:

16-7-55 சனிக்கிழமை வித்துவான், திரு. வி. சபேசன் 'தேவியின் கீர்த்தி'. 17-7-55 ஞாயிற்றுக்கிழமை திரு. கி. இராமலிங்கம் அவர்கள் 'அன்னை அன்பு', 18-7-55 திங்கள் வித்துவான். ச சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 'தொண்டின் பெருமை' 19-7-55 செவ்வாய் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'அருள்ஆற்றல்'. 21-7-55 வியாழன் திரு. கோ. சிவஞானம் அவர்கள் 'தாயைவணங்குவதன் பெருமை'

திருவையாறு:

16-7-55 சனிக்கிழமை கிழைக்கலை உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான்', திரு. ம. சிவசம்பு அவர்கள் 'அன்பர்க்கருளிய அன்னை' 17-7-55 ஞாயிறு வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 'அப்பர்கண்ட ஐயாறு'. 18-7-55 திங்கள் வித்துவான் திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'திருவருள்'. 22-7-55 திரு. கோ சிவஞானம் அவர்கள் 'சிவனருள்'

---

27

# வருங்காலம்

ஜோதிஷார்ணவம்
பிர்மஸ்ரீ முத்துஜோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(மன்மதஸு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய
17-8-55 முதல் 16-9-55 முடிய)

1. **மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களும், ஆரோக்யத்தை யும், தொழில் விருத்தியையும், காரியசித்தியையும் தரும். பரணி 1, 2, பாதங்கள் சுப சந்தோஷங்களையும், உத்தியோக லாபம், பெரியோர் நேசத்தையும் தரும். பரணி 3, 4, பாதங் களும், கார்த்திகை முதல்பாதமும், பலவித சிரமங்களையும் எதிர்பாராத துன்பங்களையும் கஷ்டநஷ்டங்களையும் ஆரோக்யக் குறைவையும் கொடுக்கும். ஞாயிறு சனி சுப தினங்கள்.

2. **விருஷபம்:** கார்த்திகை ¾ ரோஹினி, மிருகசீரஷம் ½

கார்த்திகை 2, 3, 4, பாதங்கள் ஷை மாதம் முற்பாதியில் சுபம் தரும். பிற்பாதியில் அலைச்சலும், தொல்லைகளும் ஏற் படும். ரோகிணி 4, பாதங்களும் மிருகசீரிஷம் 2, பாதங்களும் அதிககவலையை உண்டு பண்ணிச் செலவினங்களும் அதிக மாகும். மனம் நிம்மதியிராது. துர்தேவதாபீடையும், விஷ பீதியும் உண்டாகி விலகும். சனி ஞாயிறு சுபவாரம்.

3. **மிதுனம்:** மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீரிஷம் பின்னரை இரண்டு பாதங்களும், திருவா திரை 4-பாதங்களும் உழைப்பின்பேரில் சுபம் தரும். ஆரோக் யம் உண்டாகும். எதிர்பாராமல் சில பொருள் வரவும் ஏற்படும். தொழில் ஓங்கும். புனர்பூசம் 3-பாதங்களும் அசு பத்தையும், நீண்டகால வியாதியையும், வீண் மனஸ்தாபங் கள், நஷ்டங்கள் இவைகளையும்உண்டுபண்ணும். சனி செவ் வாய் சுப வாரமாகும்.

**4. கடகம்:** புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் 4-ம் பாதம் சற்று சுபமாய்க்காட்டும். பூசம் நான்கு பாதங்களும் ஆரண்யவாசத்துக்கு சமானமாகும் பெரிய விவகாரங்களிலும் ஈடுபடுத்தும். ஆயில்யம் நான்கு பாதங்களும், தெய்வபலத்தால் வெற்றிகளைக்கொடுக்கும். சதா மனத்திற்குக் கிலேசம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். திங்கள் செவ்வாய் சுபவாரமாகும்.

**5. சிம்மம்:** மகம், பூரம், உத்திரம் ¼.

சிம்மராசி சம்மந்தப்பட்ட 9-பாதங்களும் வெகு முயற்சியின்பேரில் காரிய சாதனம் ஏற்படும். செலவினங்கள் அதிகரிக்கும். இடம் மாறுதலோடு தொழிலும் ஏற்படும். பூமிக்குடையோர் பாதிக்கப்படுவார்கள். செவ்வாயும், வெள்ளியும் சுபவாரமாகும்.

**6. கன்னி:** உத்திரம் ¾. ஹஸ்தம், சித்திரை ½.

கன்னியாராசி சம்மந்தப்பட்ட 9-பாதங்களும், சுப சந்தோஷத்தைத்தரும். இல்லறம் ஓங்கும். பெரியோர் நேசம் கிட்டும். நன்மதிப்பைத்தரும். ஆரோக்யம் உண்டாகும். நஷ்டமானபொருள் கிட்டும். தொழில் ஓங்கும். விவசாயம் நற்பலனைத்தரும். அரசாங்க நட்பு உண்டாகும். அடிக்கடி தானதர்ம பலன்களும் புண்ணிய தீர்த்தாடனமும் கிடைக்கும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

**7. துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾

சித்திரை பின் அரை 2-பாதங்களும், சிரமத்தோடு ஓடிக்கொண்டிருக்கும். கவலைகளை உண்டுபண்ணும். சுவாதி 1, 2, பாதங்கள் மிகுந்த துன்பத்துக்கிடையே நலனும் காட்டும். சுவாதி 3, 4, பாதங்கள் தெய்வபலத்தால் பிரகாசிக்கும். தொழில் ஓங்கும். யாத்திரை கிட்டும். வியாபாரிகள் நலனடைவார்கள். விவசாயத்தில் நல்ல பலன் கிடைக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு இடம்மாறுதலுடன் உத்தியோக உயர்வும் கிடைக்கும். திங்கள் புதன் சுபவாரமாகும்.

**8. விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

இந்த ராசி சம்மந்தப்பட்ட 9-பாதங்களும் சுபமாகவே நடக்கும். எல்லாம் நன்மையாகவே முடியும். ஆரோக்யம் உண்டாகும். தொழில் ஓங்கும். உத்தியோக லாபம் ஏற்படும். விவசாயம் விருத்தியாகும். காலி கன்று பெருகும்.

பெரியோர் நல்லோர் வரத்து ஏற்படும். மனம் சாந்தியை அடையும். வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

9. தனுசு: மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் நான்கு பாதங்களும் கவலையோடு ஓடும். செல வினங்கள் அதிகமாகும். பூராடம் 4-பாதங்களும் தெய்வ பலத்தோடு கார்யசித்தி ஏற்படும். உத்திராடம் முதல் பாதம் ஆரோக்கியமாகவும், சந்தோஷமாகவும், நடக்கும். புதன் வியாழன் சுபவாரமாகும்.

10. மகரம்: உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

உத்திராடம் 3-பாதங்களும், திருவோணம் 4-பாதங்களும்-சுபமாய் நடக்கும். இல்லறசுகம், தொழில்விருத்தி, பெரியோர் நேசம். உத்தியோக மேன்மை, சபைகளில் தலைமைவகிக்கும் தன்மை, கீர்த்திப்பத்திரம் கிடைத்தல், இவைகள் உண்டாகும். அவிட்டம் முன் 2-பாதங்களும் கஷ்டத்தைக்கொடுப்ப தோடு இடம் மாறுதலையும் கொடுக்கும். சனி வியாழன் சுப வாரமாகும்.

11. கும்பம். அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

அவிட்டம் பிற்பகுதி 2-பாதங்களும், தூரயாத்திரையையும் க்ஷேத்திராடனங்களையும், கார்ய சித்தியையும் தரும். சதயம் நான்கு பாதங்களும், எதிர்பாராத செலவுகளையும், விவகாரத்தில்அபஜெயத்தையும், தொழில் குறைவையும், உத்தியோக பங்கத்தையும், தந்து கிலேசத்தை உண்டுபண்ணும். பூரட்டாதி 3-பாதங்களும், தன் இஷ்டப்படிநடக்கமுடியாமல் ஈதிபாதைகளால் தடங்கல்படும். ஆரோச்யக் குறைவும் ஏற்படும். சனியும் செவ்வாயும் சுபவாரமாகும்.

12. மீனம் பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி 4-ம்பாதமும், உத்திரட்டாதி 4-பாதங்களும் வெகுநாளாய் எதிர்பார்த்து நடக்காதகாரியங்களை நடத்தித் தரும். தெய்வபலம் பிரகாசிக்கும். உத்தியோகலாபம், பெரியோர்நட்பு, வியாபாரவிருத்தி, விவகாரவெற்றி இவைகள் உண்டாகும். ரேவதி 1, 2, பாதங்கள் பல கஷ்டங்களையும் நஷ்டங்களையும், அபவாதத்தையும் உண்டுபண்ணும். 3, 4, பாதங்கள் சுபம்தரும். தொழில்கிட்டும். மதிப்பு உண்டாகும். தெய்வாம்சம் பிரகாசிக்கும் செவ்வாயும் புதனும் சுபவாரங்கள்.

குறிப்பு:- ஷ மாதம் நிரந்தரமாய் எங்கும் மழை பொழிந்து தேசம் சுபிக்ஷத்தை அடையும்.

730

அநுபந்தம்

# திருக்கேதார யாத்திரை

[முன் தொடர்ச்சி]

## இரயில் பிரயாணம்:

மறுநாள் மங்களவாரம்; வேளூர் முத்துக்குமாரனுக்கு உகந்த நன்னுள். வேளூர் இறைபணி மன்றத்திலிருந்து சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு உந்தூர்தி விரைந்தது. இரவு மணி 8-10 க்குத் தொண்டர்களுடைய முழக்கத்தினிடையே இரயிலும் புறப்பட்டது. 'நமப் பார்வதி பதயே அரகர மகா தேவா' 'தென்னுடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' முதலிய சிவ ஒலிகள் இரயில் மேடை கடந்து செல்லும் வரை ஒலித்துக்கொண்டேயிருந்தன. இரவுநேரம்; பயண அயர்ச்சி; நல்ல நிம்மதியான தூக்கம்.

## சூரியோதயம்:

நெடுப்ரோலு வந்ததுமோ சூரியோதயம் செம்மேனி அம்மானை எங்களுக்குக் காட்சியளித்தது. பெருமானுடைய கருணைத் திறத்தையும் எங்களுக்கு நினைப்பூட்டியது. சூரியன் புற இருளைப் போக்கி நமமுடைய புலக்கண்ணுக்கு ஒளி விளக்கம் காட்டுவதுபோலப் பெருமான் ஆன்மாக்கள் மாட்டுள்ள பெருங்கருணையால் உள்ளிருள் நீக்கி ஞான ஒளி விளக்கம் காட்டுகிறுன். இதுவே உபதேசம். சிந்தனை இவ்விதமாக ஓடியது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமஞ்சனமாயிற்று. இரயிலிலேயே வழிபாடுகளும் நடைபெற்றன.

## விஜயவாடா வந்தோம்:

காலை மணி 6-45 க்குக் கிருஷ்ணு நதியைக் கடந்து விஜயவாடா வந்தடைந்தது எங்கள் இரயில். இங்கே கிருஷ்ணு நதி மிகப் பெரிய தோற்றத்தில் காட்சியளிக்கிறது. அங்கே ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. இரயிலடியை ஒட்டிப் பெரிய தண்ணீர் தூய்மைச்சாலை அமைந்திருக்கிறது. பொதுவாகவே கிருஷ்ணுதீரம் மிகவும் செழிப்பு வாய்ந்தது. விஜயவாடாவுக்கு இப்புறத்திலே கிருஷ்ணுவிலிருந்து பல கிளைக் கால்வாய்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இரயிலடிக்குப் பக்கத்தில் ஒரு மலைக் காட்சி. அதிலே கனகதுர்க்கை அம்பிகையின் திருக்கோயிலை இரயிலிலிருந்தே தரிசித்துக்கொண்டோம். சிமிட்டித் தொழிற்சாலை இரயிலடிக்கு மிக அருகிலே அமைந்திருக்கிறது.

ஆந்திரநாட்டின் மிகப் பெரிய நகரம். வானொலி நிலயமும் உண்டு. தொழிற்சாலைகளும் மிக அதிகமாக உள்ளன.

## மாநாடு கூடியது :

காலைச் சிற்றுண்டி விஜயவாடாவிலே முடிந்தது. இரயிலும் நகர்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எங்களோடு வந்த திருக்கருகாவூர் கோ. சிவஞானம் என்னும் தொண்டரை அழைத்தார்கள். ‘ இப்போது இங்கே ஒரு மாநாடு கூடியிருக்கிறது. நடக்கட்டும் ஒரு சிறு சொற்பொழிவு’ என்று பணித்தார்கள். அந்த முதல் வகுப்புப் பெட்டியின் பகுதியிலே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உட்பட நாங்கள் மூன்று நான்கு பேர்களே இருந்தோம். தொடங்கிவிட்டார் தொண்டர். ஒரு பெரிய மகத்தான கூட்டத்தை நோக்கிப் பேசுவதுபோல ‘ மகா ஜனங்களே ! ’ என்று அழைத்தார். பேசுகிருர் :-

## நெஞ்சுக்கு அறிவுரை :

நெஞ்சே ! நீ நிலைபெறுமாறு எண்ணுதியேல் நித்தலும் திருக்கோயிலுக்குப் பொழுது புலர்வதற்கு முன் செல் ! அங்கே திருத்தொண்டு உன்னாலியன்றதைச் செய் ! அலகிடு ! மெழுக்குமிடு ! பூ எடு ! மாலை தொடு ! பெருமான் புகழ் பாடு ! தலையாரக் கும்பிடு ! உணர்ச்சிவேகத்திலே கூத்தும் ஆடு ! ஆடும்போது, ‘ சங்கரா சயபோற்றி போற்றி ’ என்று சொல் ! ‘ அலை புனல்சேர் செஞ்சடை எம்ஆதி ’ என்று அக முருகிச் சொல் ! அந்த இறைவன் ஆரூரன் என்று கூறு ! சொல்லிச் சொல்லி அலறு ! உனக்கு நிலையான தன்மை உண்டாகும். நிலைபெற வேண்டிய ஆசை இருந்தால் மறவாதே என்ருர். இது அப்பர்பெருமானின் திருவாக்கு. (அப்படியே நமது தொண்டரும் உளம் உருகச் சொன்ஞர்.)

## தொழிற்படுத்த வேண்டும் :

நம்மைப் படைத்த ஆண்டவன் நமக்கு எல்லா வசதிகளையும் கொடுத்திருக்கிருன். உலகில் இயங்குவதற்கு உற்ற வசதிகள் ஒன்றும் குறைவில்லை நமக்கு. கருவி கரணங்களைக் கொடுத்திருக்கிருன். ஆனால் கருவி கரணங்களை நாம் தொழிற்படுத்தவேண்டும். அவற்றின் வழியே நாம் செல்லக்கூடாது. பெரியோர்கள் கருவி கரணங்களைத் தொழிற்படுத்துவார்கள். அப்பரடிகள் தலையை, வாயை, மூக்கை, கண்ணை, செவியைத் தொழிற்படுத்துகிருர் பாருங்கள் !

## அங்கங்களுக்கு ஆணை :

‘ ஐந்து பொறிகளாகிய உங்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். நான் யார் தெரியுமா? தேடிக் கண்டுகொண்டவன்; எதை? பரம்பொருளை;

எப்படிப்பட்ட பரம்பொருள்? மாலும் நான்முகனும் தேடிக் காணமுடியாத தேவன்! பெருமான்! அவனை எங்கே கண்டேன்? என் உள்ளே கண்டு கொண்டேன்! அவன் என்னுள்ளே இருக்கிறான். ஐயகோ! பாவம்; குற்றாலத்துறைகின்ற அந்தப் பெருங்கூத்தன் அவனல்லாது உனக்கு உன் உயிர் கொண்டு போகப்படும்போது உற்றார் வேறு ஆருளர்? ஆகவே தலையே நீ வணங்கு! கண்காள் காண்மின்கள்! செவிகாள் அவன்புகழைக் கேண்மின்கள்! மூக்கே நீ முரலாய்! வாயே பிரான்தன்னையே நீ வாழ்த்து! நெஞ்சே மங்கைமணாளனை நீ நினையாய்! கைகளே பரமனை மலர்தூவித் தொழுவீர்! அரன்கோயில் வலம்வந்து, மலர்தூவி வழிபடாத இந்த ஆக்கையாற் பயன் என்ன? ஆகையால் நீ இவற்றைச் செய்! கால்களே திருக்கோயிலை வலம் வாருங்கள்! இவ்வளவும் செய்து பயன் என்ன என்று எண்ணுகிறீர்களா? இவைகளை நீங்கள் செய்துவிட்டால் ஈசனுடைய சிவகணங்களோடு ஒன்றாக வைத்து எண்ணப்படுவோம்; திருவடியின் கீழ்ச் சென்று இருந்து இருமாந்தும் வீற்றிருப்போம். ஆகையால் தொழிற் படுங்கள், பணித்தபடி! என்பது அந்த ஆணை'. இவ்வாறு சென்றது சொற்பொழிவு. முடிவிலே தொண்டரஞ்சு' என்ற கேதாரத் திருப் பதிகச் சிந்தனையோடு இந்தச் சொற்பொழிவு முடிவுற்றது.

## வயிற்றுணவு :

அவப்பொழுதில்லாமல் இரயில் பயணத்தால் உண்டாகும் அயர்ச்சி தெரியாமல் இடையிடையே செவிக்குணவில்லாதபோது வயிற்றுணவும் பெற்றுக்கொண்டு சிந்தனையெல்லாம் சிவ சிந்தனையாக - பேச்செல்லாம் கேதார யாத்திரையின் பெருந்திட்டமாகப் பகலும் இரவும் ஓடிக்கொண் டிருந்தன.

## இராஜமகேந்திரம் :

இங்கே ஆந்திரக் காகிதத் தொழிற்சாலை அரசாங்கத்தாரால் வைத்து நடத்தப்படுகிறது. சுற்றிலும் கரும்பு பயிரிடப்படுகிறது. செழிப்பான நிலம்: கோதாவிரியின் கரையிலே அமைந்திருக்கிறது. இப்புறத்திலே கோதாவிரி ஸ்டேஷன் இருக்கிறது. ஒரு பெரிய ஜில்லாவின் தலைநகரம்

## ஓங்கோல் :

மேலே ஓங்கோல் வந்தது. மாடுகளுக்குப் பெயர்பெற்ற ஊர் அது. கோதாவிரிப் பிரதேசம் செழிப்பானது. நெல்லும் கரும்பும் செழிப்பான பயிர்கள். அப்பக்கத்து மக்கள் அதிகமாகச் சிவப்புச் சாய வேட்டிகளை உடுத்துகிறார்கள். தலையிலே முண்டாசு உண்டு. கனமான பொருள் களைக் காவடி கட்டித் தூக்குகிறார்கள்.

733



## தூணி :

இங்கே மரத்தால் மிக அழகான பொம்மைகள் செய்து விற்பனைக்கு வருகின்றன. விலை மலிவு.

## குடம் நழுவியது :

இரயில் புறப்படும் சமயம் எங்களில் ஒருவர் தண்ணீர் எடுக்கச் சென்றார். முதலிலே ஒரு குடத்தைக் கொண்டுவந்து இரயிற் பெட்டியின் கதவோரத்தில் வைத்துவிட்டு, மற்றொரு குடம் தண்ணீர் கொணரச் சென்றார். இரயிலும் புறப்பட்டுவிட்டது. கையிலுள்ள குடத்தோடு ஓடி வந்து ஏறினார். ஆனால் முதலில் வைக்கப்பட்டுள்ள குடம் இரயில் புறப் பட்ட வேகத்தால் பெட்டியின் கதவுமூடித் திறக்கவே வெளியில் தள்ளப் பட்டுவிட்டது. இவர் இரயிலிலே தொத்தி ஏறினார். குடம் போனதற்கு மனம் வருந்தினார். நாங்கள் அவரைத் தேற்றினோம். ஆனாலும் அறிவுரை சொன்னோம். குடம் போனதற்கு நீ வருந்தாதே; இரயில் புறப்படும்போது நாமல்லவா எச்சரிக்கையாக இருக்கவேண்டும்? இரயில் புறப்படும்போது ஓடிவந்து ஏறினாயே நீ விழுந்திருந்தால்......... ........? அதற்குப்பிறகு வந்திருந்த எங்கள் கோஷ்டியினர் எல்லோரும் முழுக் கவனத்துடன் இருந்துவந்தார்கள். †

## வால்டேர் வந்தோம் :

மாலை 4-30 க்கு வால்டேர் சந்திப்புக்கு வந்துசேர்ந்தோம். அதனோடு தென்பிராந்திய இரயில்வே முடிவடைகின்றது. அதற்குமேலே கிழக்குப் பிராந்திய இரயில்வே தொடங்குகிறது. அங்கே மாலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டோம். ஊர் விசாரணை தொடங்கியது. ஊர் பெரிய ஊர். ஆந்திரப் பல்கலைக் கழகம் இருக்கிறது. தரை, ஆகாயம், கப்பற்படைத் தளங்கள் இருக்கின்றன. அங்கிருந்து......சிறிது தொலைவிலே விசாகப் பட்டினம் என்னும் துறைமுகப்பட்டினம் இருக்கிறது. அங்கே இந்தியா விலே முதன் முதலாகப் பெரிய கப்பல் கட்டும் தளம் அமைக்கப்பெற் றிருக்கிறது. பெரிய சமுத்திரங்களிலும் வெளிநாடுகளுக்கும் செல்லக் கூடிய கப்பல்கள் கட்டப்படுகின்றன. இவ்வாறு அந்தப் பிரதேசம் தொழில் வளத்தாலும், மண் வளத்தாலும், அறிவு வளத்தாலும், படை வளத்தாலும் சிறந்துநிற்கிறது. இது நமது தென்னாட்டுக்கு ஒரு பேரணி. ஆந்திரா நமது சகோதரிதானே !

---

† இந்தக் குடத்தைப் பிறகு இரயில் அதிகாரிகள் எடுத்துவைத்திருந்து எங்களுக்குத் திரும்ப அனுப்பிவைத்தனர்.

## சிம்மாசலம்:

அரைமணி நேரத்துக்கெல்லாம் சிம்மாசலம் வந்துவிட்டோம். இங்கு ஒரு பெரிய மலை இருக்கிறது. ஒரு அருவியும் உண்டு. 'இங்கு திரிபுராந்தக சிவாலயம் இருக்கிறது. ஆனல் நரசிம்மத்தின் ஆலயம் மிகப்பெரியது, அழகியது, கலைவளம் நிரம்பியது என்கிருர்கள். வேற்று நாட்டார் படையெடுப்பால் சிற்பங்கள் சிதைந்துள்ளனவாம். கோரமான மூர்த்தி; பெரிய உருவம். அதற்காக அதன்மேலே சந்தனக் காப்புச் சார்த்திச் சிவலிங்கத் திருமேனிபோல அமைத்திருக்கின்ருர்களாம். ஆண்டுக்கொருமுறை புதுச் சந்தனம் பூசுவார்களாம். அந்தநாளில்தான் நரசிம்மமூர்த்தியின் கோலம் தெரியவரும்; மற்ற நேரமெல்லாம் சிவலிங்க மாகவே காட்சியளிக்கிறது அது.

## விஜயநகரம்:

கதிரவன் மேற்கு மலைவாயில் விழும் நேரத்தில் விஜயநகரம் வந்தோம். விஜயநகரமென்ருலே ஒரு பெரிய பேரரசின் நினைப்புத்தான் வரும். அதுவும் கிருஷ்ணதேவராயருடைய வரலாற்றுப் புகழ் மிக்க ஆட்சி நம் கண்முன்னே நிற்கும்; கிருஷ்ணதேவராயர் மொழியால் தெலுங்கர். ஆனல் தமிழுக்கும் சிறந்த ஆதரவு காட்டியிருக்கின்ருர். பிறப்பிலே வைணவர்; ஆனல் சமரச நோக்குடையவர். சைவ வைணவ வேறுபாடு அவரிடம் கிடையாது. எல்லா ஆலயங்களையும் ஒருசேரக் கண்காணித்தார். பெரிய பெரிய ஆலயங்களையும், மண்டபங்களையும், கோபுரங்களையும் கட்டி வைத்தார். இராயர் கோபுரம் என்று தென்னிந்தியாவிலே பெருமையாகச் சொல்லிக்கொள்வார்கள். இதனல், ஆலயத் திருப்பணியிலே அவருக்கு அதிக ஆர்வம் உண்டென்பது தெரியவரும்

ஒரு பெரிய பன்மொழிக் கவியரங்கம் அவர் சபையை அலங்கரித்தது அவரே கவிபாடும் வல்லமை உடையவர். பண்பாடு மிக்கவர். ஆட்சி செம்மையான ஆட்சி. ரஸிகத்தன்மையும் அவரிடம் உண்டு. பல சங்கீதப் புலவர்கள், விகடர்கள் அவருடை ஆட்சியின்கீழ் இருந்தார்கள். தெனலிராமன் வாழ்ந்தது இவர் காலத்தில்தான். வீரத்திலும் சிறந்தவர். தென்னடு முழுதையும் தன்னுளுகையின் கீழே கொண்டுவந்தவர். மகமத் அலியை எதிர்த்துப் போரிட்டவர். ஒரு பெரிய பேரரசை நிறுவி வைத்த பெருமை இவருக்கு உண்டு. இப்பொழுதும் அவர் வழிவந்த பெருமக்கள் இவ்வூரிலே இருந்துவருகிருர்கள். ஆங்கிலேயராட்சியிலே இவர்களுடைய ஆட்சி சிதைவுற்ருலும் சொத்துக்கள் ஏராளமாக இருந்தன. இந்த வழியிலே வந்த அரசர் ஒருவர் காசியினுடைய அருமை யறிந்து தன்னுயுளிலே பெரும் பகுதியும் காசியிலேயே வசித்துவந்தார்.

காசி விசுவநாதருக்கு ஆராதனைகள் செய்விக்கப் பல கட்டளைகளையும் வைத்திருக்கிறார். அங்கேயும் இவருக்குச் சொத்துண்டு. இன்னும் பல தருமங்கள் காசியில் நடைபெற்றுவருவதாகத்தெரிகின்றது. விஜயநகரம் அழகான பெரிய ஊர். பெரிய அழகான ஏரி ஒன்றும் ஊரருகே இருக்கின்றது.

## இரயிலடியில் வெடி:

இரயிலும் புறப்பட்டது. இரயிலடியிலே வெடிச் சத்தம் பெரிதாகக் கேட்டது. புறப்பட்ட வண்டி நின்றது. அச்சத்தோடு நாங்கள் பலர் வண்டியிலிருந்து கீழே இறங்கினோம். ஒரு பெட்டியினருகே பெருங் கூட்டம். என்னவென்று விசாரித்தோம். பிரமுகர் ஒருவர் அந்த வண்டியிலே புறப்படுகிறார்; கூட்டம் வழியனுப்புக் கூட்டம்; வெடி அவர் புறப்பாட்டுக்காகப் போடப்பெற்றது என்று தெரியவந்தது. மறுமுறையும் இரயில் நகர்ந்தது. வெளியில் இருள் சூழ்ந்திருந்தது. மாலை வழிபாடுகள் ஓடும் இரயிலிலேயே நடைபெற்றன. இவ்வாறு விஜயநகரத்தை நாங்கள் தாண்டும்போது விஜய ஆண்டின் கடைசி இரவைத் தொட்டு நின்றோம். பொழுது விடிந்தால் மன்மத.

## மன்மத பிறந்தது:

பூரிஜகந்நாதம், சில்கா ஏரி, புவனேசுவரம், மகாநதி எல்லாம் இரயிலிலே எங்களுக்குத் தெரியாமல் ஓடிவிட்டன. பொழுது புலர்ந்தது; கரக்பூர் என்னும் கல்கத்தாவின் எல்லைநகரம் இருபது கல்லுக்கு அப்பால் இருப்பதாகத் தெரியவந்தது. வந்தது புதுவருடம் மன்மத. வியாழன், குருவாரம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் மௌன உபவாச தினம். ஓடும் இரயிலிலேயே திருமஞ்சனம் ஆயிற்று. வழிபாடுகளும் நடைபெற்றன. எங்களுக்குப் புத்தாடை அளித்தார்கள். திருக்கை வழக்கமும் கிடைத்தது.

## எச்சரிக்கை வேண்டும்:

கரகபூர் வந்தது. காலை மணி 8-30 இருக்கும். எங்களுக்குக் காப்பிப் பைத்தியம் பிடித்துக்கொண்டது. சிற்றுண்டிச் சாலையை நாடினோம். பெருங்கூட்டம்; அடித்துப்பிடித்து எங்களுக்குவேண்டிய சிற்றுண்டிகளைக் காசுகொடுத்து வாங்குவதற்குள் பெரும்பாடாகிவிட்டது. கால அளவு தெரிந்தவர்கள் முந்திக்கொண்டுவிட்டார்கள். கூட்டம் குறைந்தது. எங்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்பட்டது. காப்பி கிடைத்தது; சுவைத்து உட்கொள்ளத் தொடங்கினோம். மணியடித்தான். வண்டியும் புறப்பட்டது.

அரைகுறையாக ஓடினோம். கிடைத்த பெட்டியிலே தொத்திக்கொண்டோம். நாங்கள் இருந்த வண்டியிலிருந்தவர்களுக்கு நாங்கள் ஏறியது தெரியவில்லை. எட்டி எட்டிப் பார்த்தார்கள். மனம் வருந்தியிருக்க வேண்டும்? நாங்களும் எட்டிப் பார்த்தோம். சைகையாலே ஏறிவிட்டதைக் குறிப்பாகக் காட்டினோம். அங்கிருந்து அவ்வண்டி எழுபத்திரண்டு கல் தொலைவு நில்லாமல் ஓடவேண்டும். எங்களைப் பயம் கவ்விக்கொண்டது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களை விட்டுவந்தோமே; மௌன தினம் ஆயிற்றே; அவர்கள் திருவுளமும் கனியுமே என்று அவரவரும் சிந்திக்கத் தொடங்கினோம். ஆண்டவன் எங்களுக்கு அருள் செய்தான். எதிர் வண்டி ஒன்று வந்தது. இருவழிப்பாட்டையாக இருந்தபோதிலும் ஒரு சிறு ஸ்டேஷனில் வண்டி நின்றது. இறங்கினோம்; ஓடினோம்; எங்கள் பெட்டியில் தாவி ஏறிக்கொண்டோம். இது ஒரு படிப்பினை. எல்லோர் மனமும் சமாதானப்பட்டது. காலமறிந்து செய்யும் செயலுக்குத்தான் மதிப்பு உண்டு; என்பதை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருநோக்கு எங்களுக்கு எடுத்துச் சொல்வதுபோல் இருந்தது. உணர்ந்தோம்.

## வங்கத்தில் தஞ்சைக் காட்சி:

வங்காளத்தைக் கண்டதுமே சோழநாட்டிலே தஞ்சைமாவட்டத்திலே காவிரி தீரந்தான் எங்களுக்கு நினைவுவந்தது. எங்கும் வாய்க்காலும் வரப்பும்; மூங்கிலும் வாழையும்; தென்னையும் தாழையும்; குடிசைவீட்டமைப்பும்; காணும் நாகரிகமும்; ஆறுகளும் – குளங்களும்; எல்லாம் அப்படியே எங்கள் ஊரை வங்கத்திலே கொண்டுவைத்தது போன்ற காட்சி. எங்களுக்குமாத்திரமா இது? கோதாவிரி தீரத்தைக் கவியுருவமாக்கும் கம்பன் அங்கே சோழநாட்டின் வளத்தைக் கண்டான். வடக்கே படையெடுக்கும் குலோத்துங்கன் அங்கே வண்தமிழ் நாட்டைக் கண்டான். இது எங்குச் சென்றாலும் தன் நாட்டையே, நாகரிகத்தையே, காணும் தமிழனின் மனப்பாங்கு.

## யாத்திரை எதற்கு?

யாத்திரையைப்பற்றி எங்கள் சிந்தனை ஓடிற்று. பெரிய புண்ணியமான யாத்திரையை இத்தடவை மேற்கொண்டிருந்தோம். எல்லோருடைய மனத்திலுமே அந்தப் பெருமை தெரியலாயிற்று. புதுவருடம் வந்ததே? நல்ல சிந்தனை என்ன செய்தோம் என்று நினைத்தேன்? ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஏதோ ஒன்று எழுதிக்கொண்டிருந்தார்கள். கரக்பூர் வந்ததும் அதனை என்னிடம் கொடுத்துப் படித்துப்பார்க்கச்சொன்னார்கள். “ உலகானுபவம் ” அதிலே இருந்தது. உலகானுபவம் யாத்திரையின் மூலம் எவ்விதம் கிடைக்கிறது? யாத்திரை வேறு எவ்வெவ் விதத்திலே

நம்மைப் பண்படுத்துகிறது? அதனைச் செவ்வனே எவ்விதம் முடிக்கலாம்? என்ற பல விஷயங்கள் அதிலே அடங்கியிருந்தன. அதனையும் படித்துப் பாருங்கள் :-

## உலகானுபவம் :

வைதிகம் என்றால் இலௌகிகத்தின் முதிர்ச்சி என்பர் அறிஞர். அதுபோல யாத்திரை என்பது உலகானுபவம் - உலகப் படிப்பு எனலாம். இதன்மூலம் கல்வி, கேள்வி, காட்சி என்ற பல படியாலும் உணர்ந்து தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. உலகமே ஒரு சர்வகலாசாலை போன்றது. கலாசாலைகளில் ஒரு சமயத்தில் ஒரு விஷயம்தான் கற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கும். யாத்திரையின்மூலமோ பல விஷயங்களை ஏககாலத்தில் அறிந்துகொள்ள வாய்ப்புண்டு. சர்வகலாசாலையில், படித்த பெரிய அறிவாளிகள் - பண்டிதர்கள் - இருந்து போதிப்பார்கள். ஆனால் யாத்திரையிலோ படிப்பறிவேயில்லாத பாமரரிலிருந்து பெரிய படித்த மேதாவிகள் பலரும் நமக்கு அறிவு கொளுத்திகளாக அமைந்து விளங்கு கிறார்கள். ஒவ்வொருவருக்கும் மற்றவரிடம் காணமுடியாத அனுபவ அறிவு விளக்கம் தெரியவரும். இவ்விதமாகப் பலரிடமிருந்தும் அரிதில் கிடைக் கக்கூடிய அறிவு நலத்தை நாம் அடையமுடியும். அதுவும் நம் இந்திய தேசத்தில் இதற்கு வாய்ப்பு அதிகம். இமயத்திலிருந்து கன்னிவரை பல்வேறுபட்ட சமயாசாரங்கள், நாகரிகங்கள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், குண நல வேறுபாடுகள் உள்ளவர்களைப் பார்க்கிறோம் பழகுகிறோம். அதனால் எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் அறிவின் தேட்டத்தில் ஆர்வம் உடையவர்களுக்கு விஷயம் ஏதாவது கிடைத்துக்கொண்டேயிருக்கும். ஊற்றுக்கண்ணிலிருந்து தண்ணீர் வந்துகொண்டிருப்பதுபோல. ஆகவே யாத்திரையில் பலரையும் பார்க் கிறோம், பழகுகிறோம், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுகிறோம். இதுவும் ஒரு கொள்வினை கொடுவினைதான். இதிலிருந்து படித்த விஷயங்களை அனுபவத்தில் வைத்துப் பார்க்கவும் வாய்ப்பேற்படுகிறது. ஆகவே மக்கள் ஒவ்வொருவரும் ஆயுளில் ஒருதடவையேனும் நீண்ட யாத்திரை செய்துவரவேண்டும். மேலும் பல தட்ப வெப்ப நிலைகளில் சென்று வருவதாலும் பல தீர்த்தங்களில் நீராடுவதாலும் நம்முடைய ஆரோக்கியம் வளரும். அதனால் ஆயுள் வளர்கிறது. எந்தநிலையிலும் எதையும் தாங்கக்கூடிய உடல் வலிமையும் மன வலிமையும் கொடுக் கிறது. உணர்ச்சி வேகம் பண்பாடெய்துகிறது. எதையும் ஆய்ந்து அமர்ந்து தெரிந்துகொள்ளும் பொறுமை ஏற்படுகிறது. யாத்திரை யினால் மனச்சாந்தி, சாந்தம், பொறுமை இவை உண்டாகின்றன. இவ்வித மாக நம்மை உருவாக்கிக்கொள்ள யாத்திரை அவசியம். குண நலமும், உண்மையும், தெய்வ நம்பிக்கையும், மக்களுக்குத் தொண்டு செய்வதில்

# தருமபுர ஆதீன நூலகத்திற்கு வரப் பெற்றுக்கொண்ட நூல்களின் விபரம்.

| தொடர் எண் | புத்தகப் பெயர் | ஆசிரியர் | |
|---|---|---|---|
| 7804 | தமிழ்மொழியைக்குறித்த பழைய குறிப்புக்கள் | எஸ். சோமசுந்தர தேசிகர். | 1936 |
| 7805 | சோழர்சரித்திரம் 1-ம் பாகம் | மு. வேங்கடசாமி நாட்டார். | 1928 |
| 7806 | பிரதம இந்திய சரித்திரம் | எம். கே. சுந்தரவரதாசாரியார். | 1944 |
| 7807 | முன்பனிக்காலம் | டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார். | |
| 7808 | அறிஞர் பெர்னுட்ஷா | டாக்டர், மு. வரதராசனுர் | 1953 |
| 7809 | கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம் | சென்னை அரசாங்கத்தார் வெளியீடு. | |
| 7810 | தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 1 | ,, | |
| 7811 | ,, 2 | ,, | |
| 7812 | இறைவனின் உறைவிடங்கள் | காளத்தி. நடேச முதலியார். | 1953 |
| 7813 | தருமபுர ஆதீன மடாலய தேவாலயங்கள் | தருமபுர ஆதீன வெளியீடு. | 1953 |
| 7814 | ,, | ,, | |
| 7815 | திருப்புறம்பியத் தலவரலாறு | அ. சதாசிவ பண்டாரத்தார். | |
| 7816 | ,, | ,, | |
| 7817 | திருச்செந்தூர் வள்ளி மணுளன் கோயில் வரலாறு | ச. முத்துக்குமரசாமி பிள்ளை. | 1954 |

| | | | |
|---|---|---|---|
| 7818 | அறுமுகன் வரலாறும் ஆறு படை வீடுகளும் | கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார். | |
| 7819 | ஸர்வமத தரிசனமான ஸிதஸித் விஸிஷ்டப்ரஹ்மானந்தலஹரி | எதிராஜ முதலியார். | 1953 |
| 7820 | ,, | ,, | |
| 7821 | திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் ஆராய்ச்சிக்குறிப்பு | நா. கனகராஜ ஐயர். | 1953 |
| 7822 | ,, | ,, | |
| 7823 | பழனியாண்டவர் மயில்விடுதூது | டி. எச். விவேகானந்தம் பிள்ளை. | 1953 |
| 7824 | ஸ்ரீ பிர்ம்மானந்தரின் அகில இந்திய யாத்திரை — பிரசங்கங்கள் | மு. சீனுவாசன் | 1953 |
| 7825 | அண்ணுமலையார்அரியகட்டுரைகள் | ராம. அண்ணுமலைச் செட்டியார் | 1953 |
| 7826 | பரமாணுப்புராணம் | இ. டி. இராசேசுவரி அம்மையார். | 1953 |
| 7827 | ,, | ,, | |
| 7828 | ,, | ,, | |
| 7829 | கடவுளுக்கு உருவவழிபாடு வேண்டுமா ? | ஸ்ரீ ஈசான சிவாசாரியார் | 1953 |
| 7830 | ,, | ,, | |
| 7831 | தமிழ்நாடு டைரக்டரி & யார்? யார்? | கே. எஸ். கிருஷ்ணன், கே. சேஷமணி. | |
| 7832 | ,, | ,, | |
| 7833 | வேதாரண்யம் உப்புசத்தியாக்கிரகச் சரித்திரம் | கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம். | 1950 |
| 7834 | திருக்குறள் உரைவிளக்கம் | ஜி. வரதராஜன். | 1954 |
| 7835 | வழிகாட்டும் வள்ளுவர் ஆராய்ச்சிக் சொற்பொழிவுகள் | நெல்லை அருணகிரி இசைக்கழகம். | |
| 7836 | ,, | ,, | |

| | | | |
|---|---|---|---|
| 7837 | வெள்ளிவிழாமலர் | திருவள்ளுவர் கழகம், தென்காசி. | 1953 |
| 7838 | திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே | க. வச்சிரவேலு முதலியார். | 1953 |
| 7839 | திருக்குறளும் பொதுநோக்கமும் | புலவர் சரவண ஆறுமுக முதலியார் | 1951 |
| 7840 | திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை - இலக்கணக் குறிப்பின் விளக்கம் | வை. சுந்தரேச வாண்டையார். | 1953 |
| 7841 | கம்பராமாயண சாரம் யுத்தகாண்டம் | ,, வெ. ப. சுப்பிரமணிய முதலியார். | |
| 7842 | இராமகாதை | அ. சே. சுந்தரராஜன். | 1953 |
| 7843 | சென்னை சமயப்பிரசார நிலையத் திறப்புவிழா நிகழ்ச்சி | தருமபுர ஆதீன வெளியீடு. | 1953 |
| 7844 | ,, | ,, | |
| 7845 | பதினெண்கிராம ஆர்ய வைஸ்ய வித்தியாநிதிஹாஸ்டல்திறப்புவிழா | திருமலை நகரம் கமிட்டியார். | 1954 |
| 7846 | தஞ்சை கலைக்கூடம் கலைவிழா சிற்பமடல் | தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான். | 1946 |
| 7847 | ,, | ,, | ,, |
| 7848 | நாடகவிழாமலர் | பம்பாய் தமிழ்ச்சங்கம், மாதுங்கா. | |
| 7849 | ,, | ,, | |
| 7850 | திருமந்திரமாநாட்டு மலர் | திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. | 1954 |
| 7851 | ,, | ,, | |
| 7852 | பாரதசக்தி ஆண்டுமலர் | பாரதசக்தி நிலையம், புதுவை. | |
| 7853 | ,, | ,, | |
| 7854 | மணிவாசகமலர் | பேரூர் நால்வர் மடாலயம். | 1954 |
| 7855 | சித்தாந்தம் மலர் ! | ஞா. சி. சமாஜம். | 1928 |

| | | | |
|---|---|---|---|
| 7856 | சித்தாந்தம் மலர் 2 | சை, சி. சமாஜம், | 1929 |
| 7857 | ,, 3 | ,, | 1930 |
| 7858 | ,, 4 | ,, | 1931 |
| 7859 | ,, 5 | ,, | 1932 |
| 7860 | ,, 6 | ,, | 1933 |
| 7861 | கொங்குமலர் 3 | கோவைத் தமிழ்ச்சங்கம். | தாது |
| 7862 | ஆரோக்கியமும் நீடித்த ஆயுசும் | எ. சி. ஸெல்மன், எம். டி. | |
| 7863 | ஸப்தரிஷி நாடி பாகம் 1 (மேஷலக்னம்) | டி. சந்திரசேகரன் எம். ஏ., எல், டி. | 1951 |
| 7864 | ஸப்தரிஷி நாடி பாகம் 2 (விருஷபலக்னம்) | ,, | 1953 |
| 7865 | ஸப்தரிஷி நாடி பாகம் 3 (மிதுனலக்னம்) | ,, | 1954 |
| 7866 | பரதசித்தாந்தம் | ,, | 1953 |
| 7867 | வசு சரித்திரம் | தொண்டமாந்துறை அம்பலத்தாடும் ஐயன் | |
| 7868 | சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும் | டி. சந்திரசேகரன். | 1954 |
| 7869 | மாணிக்கவாசகர் அம்மானை | சங்கரமூர்த்திப்புலவர். | 1951 |
| 7870 | பாரதம் ஆதிபருவத்தாதிபருவம் | டி. சந்திரசேகரன். | |
| 7871 | அனுபவவைத்தியமுறை பாகம் 4 | ,, | 1952 |
| 7872 | பிள்ளைப்பிணிவாகடம் | ,, | |
| 7873 | மாட்டுவாகடமும் மாட்டு அங்க அடையாளமும் | ,, | |
| 7874 | நன்னூல் மூலமும் காண்டிகையும் | | |
| 7875 | தொல்காப்பியம் சொல்லதிகாரம் | தொல்காப்பியர். | 1852 |
| 7876 | ,, | ,, | |

## REVIEW:

### Thevaram Irandam Tirumurai

(Edited with Notes by

Thiru, Muthu. Su. Manickavasaga Mudaliar)

The first part of the series consisting of the First Tirumurai of Saint Tirugnanasambandar was noticed in these columns in 1953 and the present puplication of the Tirumurai was issued as Dharmapuram Puplication No. 317 as a memorial editon at the annul Gurupuja of the founder of the Mutt. The Tirumurai consists of 122 Pathigams ofthe Saint. The present edition is highly valuable since the text has been carfully studied and annotated Special care has been taken to get at the correct readings, At several places, the editor has tried to arrive at the true significance of words and to give the Siddhantic Aonnotations for relgious ideas mentioned in hymns to explain grammatical pesuliarities in the texts, to give appropriate parallels from litterary texts for descriptions in the work, and to explain intricate ideas in them. His knowledge of the Samskrit language, Indian philosophy in general and logic in particular have been helpful in his writting his annotation. The edition bears an exhaustive account of the places mentioned in the Tirumurai with historical and inscriptional data specially written by Sri C. M. Ramachandra Chettiar and Sri V. Sundaresa Vandyar It also carries several forewords by eminent writers and contains exquisite pictures of temples and deities. The only thing that is lacking is a thorough Index of words and expressions occurring in the text.

—The Hindu, 10—7—1955.

### ஜன்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவதலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல இம்மாதத்திலும் 25—7—55 திங்கட்கிழமை திருக்குடவாயில் ஸ்ரீ கோணேசுவரசுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆதீனச்சார்பில் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருக்குடவாயில் திருப்பதிக உரையை வழங்கி, அன்பர்களைக்கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதப்பட்டது.

உ

குருபாதம்.

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

| எண் | புத்தகம் | விலை ரூ.-அ.-பை. | தபாற்செலவு ரூ.-அ.-பை. |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்) | 3—8—0 | 1—5—0 |
| 2. | இரண்டாந்திருமுறை (காலிகோ) | 5—0—0 | 1—8—0 |
| 3. | சமயபோதச்சொற்பொழிவுகள் | 1—0—0 | 0-13—0 |
| 4. | பரமாணு புராணம் | 1—4—0 | 0—9—0 |
| 5. | நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம் | 1—8—0 | 0—9—0 |
| 6. | திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ) | 13—8—0 | 2—4—0 |
| 7. | காமத்துப்பால் ,, | 6—0—0 | 1—8—0 |
| 8. | திருவாசகம் ,, | 2—0—0 | 0-14—0 |
| 9. | நால்வர் நான்மணிமாலை | 0—4—0 | 0—4—0 |
| 10. | திருக்கேதாரயாத்திரை | ... ... | 1—0—0 |

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

**கிடைக்குமிடங்கள் :—**

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.

2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயம்.
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—8—1955.